# 2

# தேசிய உற்பத்தி, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை

## 2.1 பொதுநோக்கு

*இலங்கையின் பொருளாதாரமானது 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, சுதந்திரத்திற்குப் பின்னைய பொருளாதாரத்தால் அனுபவிக்கப்பட்ட முன்னொருபோதுமில்லாத மோசமான பொருளாதார நெருக்கடிகளின் பின்னணியில் மிக ஆழமான சுருக்கத்தினைப் பதிவுசெய்த அதேவேளை முன்மதியான கொள்கைத் தலையீடு சாத்தியமான நெருக்கடி ஆழமடைதலைத் தடுத்தது. ஆரம்பத்தில் பொருளாதார நெருக்கடி சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மையில் ஏற்பட்ட கடுமையான குறைப்புக்கு வகைகூறி நுகர்வுப்பொருட்கள், எரிபொருள் மற்றும் மின்சாரம் உட்பட வலு உற்பத்திகளின் வழங்கலுக்கு இடையூறுகளையும் மற்றும் பல்வேறு கைத்தொழில்களுக்கான உள்ளீடுகளில் பற்றாக்குறைகளையும் ஏற்படுத்தி பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு வழிவகுத்தது. பணவீக்க அழுத்தத்தைத் தடுக்க கொள்கை வட்டி வீதங்களில் முன்னொருபோதுமில்லாத விதத்தில் சரிசெய்தல் மற்றும் நெருக்கடி மேலும் மோசமடைவதைத் தடுக்க அந்நியச் செலாவணி வெளியேறுவதைக் குறைக்க அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு முன்னுரிமை அளிப்பது போன்ற கடுமையான ஆனால் அத்தியாவசியமான கொள்கை நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தை இச் சூழ்நிலை நிர்ப்பந்தித்தது. இந்த நடவடிக்கைகள் கேள்வி அழுத்தங்களை குறைப்பதற்கும், நிரம்பல் பக்க இடையூறுகளைக் குறைப்பதற்கும் பங்களித்து, தொழில்களுக்கு தேவையான எரிபொருள் மற்றும் பொருள் உள்ளிட்ட அத்தியாவசிய இறக்குமதிகள் கிடைப்பதை மேம்படுத்தி, பொருளாதாரத்தை படிப்படியாக ஸ்திரப்படுத்தியது. பொருளாதார அழுத்தங்களை பிரதிபலிக்கும் விதத்தில், கைத்தொழில், பணிகள் மற்றும் வேளாண்மை ஆகிய மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளும் 2022 ஆம் ஆண்டில் சுருக்கமடைந்தது. தயாரிப்பு, கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகளில் ஏற்பட்ட பின்னடைவு கைத்தொழில் நடவடிக்கைகள் சுருக்கமடைய வழிவகுத்த வேளையில், குறிப்பாக, வதிவிடச் சொத்துடமை, காப்புறுதி மற்றும் நிதியியல் பணிகள் உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட சுருக்கங்கள் பணிகளின் நடவடிக்கைகளை எதிர்மறையாகப் பாதித்ததுடன் அது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சுற்றுலா வருகைகளில் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட மீட்சியின் சாதகமான கசிவுகளை விஞ்சிக் காணப்பட்டது. எரிபொருள் வழங்கலில் காணப்பட்ட இடையூறுகளின் காரணமாக மீன்பிடி நடவடிக்கைகளின் செயலாற்றம் குறைவடைந்தமை, விலங்குத்தீன் பற்றாக்குறையின் காரணமாக விலங்கு உற்பத்திகள் குறைவடைந்தமை, வளமாக்கிப் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்ட அரிசி மற்றும் காய்கறிகளின் உற்பத்தி என்பன வேளாண்மை நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மழுங்கடித்துவிட்டன. முக்கிய தொழிலாளர் சந்தை குறிகாட்டிகளில் சாதகமான முன்னேற்றங்கள் இருந்தபோதிலும் இந் நிலைமை தொழிலாளர் உற்பத்தித்திறனில் வீழ்ச்சியொன்றினைத் தோற்றுவித்தது. செலவினப் பக்கத்தில், நுகர்வு மற்றும் முதலீட்டுப் பொருட்கள் இரண்டும் 2022இல் விலை மட்டங்களில் ஏற்பட்ட உயர்வினால் தூண்டப்பட்டு நடைமுறை விலைகளில் கணிசமானளவிற்கு வளர்ச்சியடைந்தன. எனினும், நிலையான விலைகளில், முதலீடு மற்றும் நுகர்வுப் பொருட்கள் இரண்டும் சுருக்கமடைந்தமைக்கு கொள்வனவுச் சக்தி தேய்வடைந்தமை, உயர்வடைந்து செல்லும் பணவீக்கத்தின் கீழ் முதலீடுகள் நிறுத்தப்பட்டிருந்தமை மற்றும் உயர்ந்த கடன்பாட்டுச் செலவுகளும் தூண்டுதலாக அமைந்தன. மறுபுறத்தில், இலங்கை ரூபாவின் கடுமையான வீழ்ச்சியின் பயனாக பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சியானது பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வளர்ச்சியை விஞ்சிக் காணப்பட்டு நடைமுறை விலைகளில் தேறிய வெளிநாட்டு கேள்வி முன்னேற்றம் கண்டது. இறக்குமதியில் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் மெதுவான வளர்ச்சிக்கு வங்கித்தொழில் துறையில் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மை குறைவடைந்தமை, அத்தியாவசியமல்லா இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் ரூபாவின் கடுமையான தேய்வு மற்றும் குறிப்பிடத்தக்க இறுக்கமான நாணயக்கொள்கை என்பன காரணங்களாயமைந்தன.*


2

## 2.2. மொத்த உள்நாட்டு உற்பத்தி,[1] மொத்த தேசிய வருமானம் மற்றும் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி

**2022ஆம் ஆண்டுப்பகுதியில் நிலையான (2015), சந்தை விலைகளில் (இதனகத்துப் பின்னர் 'நிலையான விலைகள்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மொ.உ.உற்பத்தி 2021இல் பதிவு செய்யப்பட்ட 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வரலாற்றில் மிகஉயர்வான வீதமான 7.8 சதவீதத்தால் சுருக்கமடைந்த அதேவேளை மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கியமான கொள்கை நடவடிக்கைகள் நாடு எதிர்கொண்டிருந்த பாதகமான பொருளாதாரத் சிக்கல்களைத் தீர்க்க உதவியது.** அதேவேளை நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி (இதனகத்துப் பின்னர் 'நடைமுறை விலைகள்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2022இல் ரூ.24,147.7 பில்லியனாக (ஐ.அ.டொலர் 77.1 பில்லியன்) மதிப்பிடப்பட்டது. இது 2021இல் ரூபா நியதிகளில் பதிவுசெய்யப்பட்ட ரூ.17,600.2 பில்லியனுடன் (ஐ.அ.டொலர் 88.5 பில்லியன்) ஒப்பிடுகையில் 2022இல் 327.2 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாக இருந்தது. நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட

1 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது மொ.உ.உற்பத்தியை உற்பத்தி, செலவினம் மற்றும் வருமான அணுகுமுறைகளில் மதிப்பிடுகிறது.

வரைபடம் 2.1
மொ.உ.உற்பத்தி ஆண்டு வளர்ச்சி வீதம் (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.1
நிலையான விலைகளில் (2015) கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி (அ)(ஆ)

| பொருளாதார நடவடிக்கை | வளர்ச்சி (%) | | வளர்ச்சிக்கான பங்களிப்பு (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 (இ) | 2022 | 2021 (இ) | 2022 | 2021 (இ) | 2022 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல்** | **0.9** | **- 4.6** | **0.1** | **- 0.3** | **7.3** | **7.5** |
| தானியங்களின் வளர்ச்சி (அரிசி நீங்கலாக) | 2.8 | - 21.6 | 0.00 | - 0.04 | 0.2 | 0.1 |
| அரிசியின் வளர்ச்சி | - 11.8 | - 13.0 | - 0.11 | - 0.11 | 0.8 | 0.8 |
| காய்கறிகளின் வளர்ச்சி | - 1.7 | - 8.4 | - 0.02 | - 0.07 | 0.8 | 0.8 |
| கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய நீண்ட காலமல்லாத பயிர்களின் வளர்ச்சி | - 7.3 | 1.8 | - 0.00 | 0.00 | 0.0 | 0.0 |
| பழவகைகளின் வளர்ச்சி | - 10.8 | 0.5 | - 0.07 | 0.00 | 0.6 | 0.6 |
| எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி (தேங்காய், செவ்விளநீர், கமுகு) | 11.2 | 8.6 | 0.08 | 0.07 | 0.8 | 0.9 |
| தேயிலையின் வளர்ச்சி (பச்சை இலைகள்) | 8.5 | - 15.9 | 0.05 | - 0.09 | 0.6 | 0.5 |
| ஏனைய குடிபானப் பயிர்களின் வளர்ச்சி (கோப்பி, கொக்கோ போன்றவை) | - 16.2 | - 9.1 | - 0.00 | - 0.00 | 0.0 | 0.0 |
| வாசனைத்திரவியங்கள், நறுமணப்பயிர்கள், மருந்து மற்றும் மருந்தாக்க பயிர்களின் வளர்ச்சி | 4.5 | 3.3 | 0.03 | 0.02 | 0.8 | 0.8 |
| இறப்பரின் வளர்ச்சி | 6.2 | - 6.7 | 0.01 | - 0.01 | 0.2 | 0.2 |
| ஏனைய நீண்டகாலப் பயிர்களின் வளர்ச்சி | - 9.5 | 2.0 | - 0.02 | 0.00 | 0.2 | 0.2 |
| விலங்கு உற்பத்தி | 8.2 | - 12.9 | 0.06 | - 0.09 | 0.7 | 0.7 |
| தாவர இனவிருத்தி | 30.8 | 8.3 | 0.00 | 0.00 | 0.0 | 0.0 |
| வேளாண்மைக்கான துணை நடவடிக்கைகள் | 14.2 | 14.7 | 0.03 | 0.03 | 0.2 | 0.3 |
| காடாக்கலும் குத்திகளும் | 4.4 | 16.1 | 0.01 | 0.05 | 0.3 | 0.4 |
| மீன்பிடித்தல் | 1.5 | - 10.5 | 0.02 | - 0.11 | 1.1 | 1.0 |
| **கைத்தொழில்** | **5.7** | **- 16.0** | **1.7** | **- 4.8** | **30.2** | **27.5** |
| சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் | 1.4 | - 31.0 | 0.03 | - 0.68 | 2.2 | 1.7 |
| தயாரிப்பு | 7.4 | - 12.6 | 1.23 | - 2.18 | 17.2 | 16.3 |
| மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல் | 4.9 | - 5.9 | 0.07 | - 0.09 | 1.4 | 1.5 |
| நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் | - 17.8 | 0.6 | - 0.02 | 0.00 | 0.1 | 0.1 |
| சாக்கடை, கழிவுப்பொருள் சுத்திகரிப்பு மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் | - 3.3 | 3.9 | - 0.01 | 0.01 | 0.2 | 0.2 |
| கட்டடவாக்கம் | 4.4 | - 20.9 | 0.39 | - 1.88 | 9.0 | 7.7 |
| **பணிகள்** | **3.5** | **- 2.0** | **2.0** | **- 1.1** | **56.9** | **60.5** |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், போக்குவரத்து மற்றும் களஞ்சியம் மற்றும் தங்குமிடம் மற்றும் உணவுப்பணி நடவடிக்கைகள் | 1.3 | 2.6 | 0.31 | 0.62 | 24.2 | 26.9 |
| தகவல் மற்றும் தொடர்பூட்டல் | 18.0 | - 1.4 | 0.51 | - 0.05 | 3.2 | 3.5 |
| நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துரிமை உள்ளடங்கலாக உண்மைச் சொத்துக்கள் நடவடிக்கைகள் | 7.5 | - 15.4 | 0.76 | - 1.63 | 10.5 | 9.7 |
| தொழில்சார் பணிகள் மற்றும் ஏனைய ஆளணி பணி நடவடிக்கைகள் | 1.8 | - 0.6 | 0.18 | - 0.06 | 9.9 | 10.7 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனிதநலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 2.2 | - 0.3 | 0.20 | - 0.03 | 9.0 | 9.7 |
| **அடிப்படை விலையில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதிகளுக்கு சமனானவை** | **4.0** | **- 6.7** | **3.7** | **- 6.3** | **94.4** | **95.5** |
| உற்பத்திகள் மீதான மானியங்கள் கழித்த வரிகள் | - 3.6 | - 27.1 | - 0.2 | - 1.5 | 5.6 | 4.5 |
| **சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனானவை** | **3.5** | **- 7.8** | **3.5** | **- 7.8** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | 12.6 | - 3.5 | | | | |
| **சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானம்** | **- 4.0** | **-8.1** | | | | |

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.2

## தேசிய வெளியீடு, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை வரைபடம் - 2022



இவ்வுயர்ந்த வளர்ச்சி மொ.உ.உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கி 2021இல் பதிவுசெய்யப்பட்ட 8.5 சதவீதத்திலிருந்து 2022இல் 48.8 சதவீதத்திற்கு அதிகரித்த திடீர் உயர்வினால் பிரதிபலிக்கப்பட்டவாறு ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்த விலைமட்டங்களின் தாக்கத்தினை முக்கியமாகப் பிரதிபலித்தது.

**உலகின் ஏனைய நாடுகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானத்திற்கு மொ.உ.உற்பத்தியை சீராக்கம் செய்வதன் மூலம் மதிப்பிடப்படும் மொத்தத் தேசிய வருமானம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 12.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 36.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** இவ்வாண்டுப்பகுதியில் உலகின் ஏனைய நாடுகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் தேய்வடைந்தமையால் மொத்தத் தேசிய வருமானத்தில் ஏற்பட்ட இவ்வளர்ச்சி நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பினையே பிரதிபலித்தது.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2021இன் ரூ.794,376 (ஐ.அ.டொலர் 3,997) உடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1,088,667 (ஐ.அ.டொலர் 3,474) இற்கு அதிகரித்தது.** ரூபா நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு தூண்டுதலாக அமைந்த வேளையில் ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா கணிசமானளவிற்கு தேய்வடைந்தமையே காரணமாகும். அதேவேளை, தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானம் 2021இன் ரூ.776,523 (ஐ.அ.டொலர் 3,907) உடன் ஒப்பிடுகையில் 2022இல் ரூ.1,060,654 (ஐ.அ.டொலர் 3,388) இல் மதிப்பிடப்பட்டது.

## 2.3 நிறுவன ரீதியான துறைகளிலிருந்தான பங்களிப்பு


**2022இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மதிப்பிடப்பட்ட மொத்தப் பெறுமதிகூட்டல்களில் 43.6 சதவீத பங்கினை பிரதிநிதித்துவம் செய்கின்ற நிதியியல்லாத கூட்டுத்தாபனங்கள் துறை மிகப் பெரிய பங்களிப்பாளராக விளங்கியது.** இதன்படி நிதியியல்லா கூட்டுத்தாபனங்கள் துறை முன்னைய ஆண்டின் 14.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 38.7 சதவீதத்தினால் அதிகரித்தன. மேலும், நிதியல்லா கூட்டுத்தாபனங்கள் துறை கைத்தொழில் நடவடிக்கைகளுக்கான மிகப்பெரும் பங்களிப்பாளராக தொடர்ந்தும் இருந்த வேளையில் வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள் வேளாண்மை மற்றும் பணிகள் நடவடிக்கைகளில் முக்கிய பங்களிப்பினை வழங்கின. அதேவேளை, வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறைக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள், அரசாங்கம் மற்றும் நிதியியல் கூட்டுத்தாபனங்கள் துறைகள் 2022இல் முறையே 42.5 சதவீதத்தினாலும் 7.1 சதவீதத்தினாலும் 52.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

## 2.4 உற்பத்தி, கொள்கைகள், நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**2022 காலப்பகுதியில் வளமாக்கி மற்றும் ஏனைய வேளாண் இரசாயனங்கள் உள்ளிட்ட வேளாண்மை உள்ளீடுகளின் கடுமையான பற்றாக்குறை, உற்பத்தி செலவில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு மற்றும் எரிபொருள் வழங்கலில் காணப்பட்ட இடையூறு என்பன ஒட்டுமொத்த வேளாண்மை நடவடிக்கைகளைப் பாதித்து குறைந்த செயலாற்றத்திற்கு வழிவகுத்தன.** இதன்படி, பெறுமதிகூட்டல் நியதிகளில் 2022இல் வேளாண்மை நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு மொத்த மீன்பிடி, அரிசி மற்றும் விலங்கு உற்பத்தி வளர்ப்புக்களில் ஏற்பட்ட கணிசமான சுருக்கங்களே முக்கிய காரணமாகும். மேலும், தேயிலை, காய்கறிகள், ஏனைய தானியங்கள் மற்றும் இறப்பர் என்பனவற்றின் பயிர்ச்செய்கை இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும்கூட,

வரைபடம் 2.3
2022இல் நிறுவனத்துறையினரின் மொத்த பெறுமதி சேர்ப்பின் பங்குச் சதவீதம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2

சிறப்புக்குறிப்பு 4
## தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை 2015ஆம் ஆண்டாக மாற்றியமைத்தல்[1]

### அறிமுகம்

தேசிய கணக்குகள் மதிப்பீடுகள் என்பது பொருளாதாரமொன்றின் உண்மைத் துறை அபிவிருத்திகளை அவை பிரதிபலிப்பதனால் பொருளாதார பகுப்பாய்வுகளிலும் அதேபோன்று கொள்கை வகுப்பதிலும் இன்றியமையாத உள்ளீடுகளாகக் காணப்படுகின்றன. ஆகையினால், தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் கிரமமான அடிப்படை ஆண்டு மாற்றும் செயன்முறைகளூடாக காலப்போக்கில் பொருளாதாரத்தில் மற்றும் பொருளாதாரமொன்றின் விலைக் கட்டமைப்புக்களில் மாற்றங்களுக்கு வசதியளிப்பது அத்தியாவசியமானதாக விளங்குகின்றது. உத்தியோகபூர்வ தொகுப்பாளர் எனும் வகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2010 கொண்ட முன்னைய அடிப்படை ஆண்டினை மாற்றீடு செய்து தேசிய கணக்குகள் மதிப்பீடுகளிற்கான அடிப்படை ஆண்டாக 2015ஆம் ஆண்டை இற்றைப்படுத்தியுள்ளது. இந்தத் தேவையை நிறைவேற்றுமுகமாக இலங்கையின் தேசிய கணக்குகளின் அடிப்படை ஆண்டு வரலாற்றில் அவ்வப்போது, அதாவது 1958, 1963, 1975, 1990, 2002, 2010 மற்றும் சமீபத்திய 2015 வரை திருத்தப்பட்டு வருகின்றன. இவ்வடிப்படை ஆண்டு மாற்ற செயன்முறையுடன் இணைந்து தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமானது பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கத்தினை விரிவுபடுத்தியுள்ளதுடன் தொகுப்பு முறையியல்களையும் மேம்படுத்தியுள்ளது.

### உற்பத்தி வரம்பையும் பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கத்தையும் விரிவுபடுத்தல்

பல பொருளாதார நடவடிக்கைகளின் உள்ளடக்கம் பிந்திய அடிப்படை ஆண்டு மாற்றச் செயன்முறையின் போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. முக்கிய உள்ளடக்க விரிவுபடுத்தல்களிலொன்று தேசிய கணக்குகள் மதிப்பீடுகளில் கைத்தொழில் நடவடிக்கைகளினுள் ஒவ்வொரு ஆண்டிலும் செய்யப்பட்ட பணியின் சதவீதத்தினை கருத்திற்கொண்டு 2014 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட *கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரக்* கருத்திட்டம் தொடர்பிலான காணி மீட்புப் பணியினை உட்சேர்த்தலாகும். இது மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளிலும் 2014 - 2019 காலப்பகுதியின் போதான தொடர்புடைய மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்களிலும் கணிசமான தளம்பல்களுக்கு வழிவகுத்துள்ளது. பல வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் அநேகமான உள்ளடக்கம் இவ் அடிப்படை மாற்றியமைக்கும் செயன்முறையின் கீழ் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இவ் உள்ளடக்க மேம்பாடுகளுடன் இணைந்து உற்பத்தி அணுகுமுறையுடன் தொடர்புடைய அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் 2010 தொடர்களின் கீழ் இருந்த 48 பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பதிலாக 49 பொருளாதார நடவடிக்கைகளின் கீழ் பரவல் செய்யப்பட்டுள்ளன. புதிய அடிப்படை ஆண்டின் கீழ் வெவ்வாறாக *தாவர இனவிருத்தி மற்றும் வேளாண்மை ஆதரவு* நடவடிக்கைகளின் மதிப்பீட்டிற்கு இது சாட்டத்தக்கதாகவுள்ளது. வேளாண்மை நடவடிக்கைகளைக் கருத்தில்கொள்கையில், *பழவகைகளின் வளர்ச்சி, எண்ணெய்ப்பனை, பூக்கன்றுகளின் இனவிருத்தி, வீட்டுத்தேவைக்கென குற்றிகளின் உற்பத்தி மற்றும் வேளாண்மை துணை நடவடிக்கைகள்* போன்றவற்றின் உள்ளடக்க முறைமைகளில் மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பணிகள் நடவடிக்கைகள் தொடர்பில் *தகவல் தொழில்நுட்பம், களஞ்சியச் செயற்பாடுகள், ஒளிபரப்புச் செயற்பாடுகள், துரித அஞ்சல் சேவைகள் மற்றும் நிதியியல் பணிகள்* ஆகிய துறைகளின் உள்ளடக்கமும் இவ் அடிப்படையாண்டு மாற்றச் செயன்முறையின் போது விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

### முறையியல் மேம்பாடுகளும் புதிய தரவு மூலங்களைப் பயன்படுத்தலும்

அடிப்படை ஆண்டு மாற்றியமைக்கும் செயன்முறையின் போது, *வேளாண்மைத் துணை நடவடிக்கைகள், காடாக்கல் மற்றும் மரம் வெட்டுதல், பூக்கும் தாவரங்களின் மரக்கன்று விருத்தி, தயாரித்தல், நிர்மாணம், மின்சார உற்பத்தி, தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கல் ஆலோசனை, தங்குமிடச் சேவைகள், உணவு மற்றும் குடிபானச் செயற்பாடுகள், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகள்* போன்ற பல பொருளாதார செயற்பாடுகளை மதிப்பிடுவதில் பல்வேறு முறையியல் மேம்பாடுகள் பின்பற்றப்பட்டுள்ளன. மேலும், *பொருளாதார தொகைமதிப்பு 2013/14, தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பம் இயலச்செய்யப்பட்ட பணிகள் கணக்கெடுப்பு அத்துடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின்* பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுடன் தொடர்புபட்ட வருமானத் தகவல்கள் உள்ளடங்கலாக புதிய தரவு மூலங்களும் 2015 அடிப்படை ஆண்டின் கீழ் அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மதிப்பீடுகளைத் தொகுப்பதில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. மேலும், புதிய அடிப்படை ஆண்டின் கீழ் மாறாத விலைகளில் பல பொருளாதார நடவடிக்கைகளுக்கான மதிப்பீடுகளைத் தொகுக்கையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் "தனிச் சுருக்கி முறை" இற்குப் பதிலாக "இரட்டைச் சுருக்கி முறை" இனை பின்பற்றியது[2].

### 2015 அடிப்படை ஆண்டிற்கு தேசிய கணக்குகள் மதிப்பீடுகளை அடிப்படை ஆண்டு மாற்றம் செய்வதன் மூலமான முக்கிய விளைவுகள்

அடிப்படை ஆண்டுத் திருத்தமானது பொருளாதாரத்தின் அளவு (மொ.உ.உற்பத்திப் பெறுமதி), மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதம் மற்றும் பிரதான பொருளாதார நடவடிக்கைகளின் பங்குகள்

அட்டவணை சி.கு. 4.1
அண்மைய மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படை ஆண்டு மாற்றங்களின் ஒப்பீடு

| | 2002 | 2010 | 2015 |
|---|---|---|---|
| நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தி (ரூபா. மில்லியன்) | 1,636,036.6 | 6,413,668.5 | 11,566,987.4 |
| அளவு மாறுதல் % (நடப்பு விலைகளில்) | | 14.4% | 5.6% |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


1 "தேசிய கணக்குகள் மதிப்பீடுகளின் அடிப்படை ஆண்டை 2015ஆம் ஆண்டாக மாற்றிமைத்தல்" என்ற தலைப்பின் கீழ் வைப்பகத்தில் (மலர் 7, இதழ் 7 - 9) வெளியிடப்பட்ட இக்கட்டுரையின் விரிவான பதிப்பைத் தயாரிக்கையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தகவல்களையும் ஆக்கபூர்வமான பின்னூட்டல்களையும் இலங்கை மத்திய வங்கி பாராட்டுகின்றது.

2 "தனிச் சுருக்கி முறையின்" கீழ் வெளியீடு மற்றும் இடைநிலை நுகர்வு இரண்டும் ஒரேமாதிரியான விலைச் சுட்டெண்ணைப் பயன்படுத்தி சுருக்கம் செய்யப்பட்ட அதேவேளை "இரட்டை சுருக்கி முறை" இல் வெளியீடு மற்றும் இடைநிலை நுகர்வு என்பன மாறா விலை மதிப்பீடுகளை மிகச்சரியாகத் தொகுப்பதற்கு இரு வேறுபட்ட விலைச் சுட்டெண்களைப் பயன்படுத்தி சுருக்கம் செய்யப்பட்டுள்ளன.

போன்ற மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பிரதான பொருளாதார செயன்முறைகளின் பங்கு போன்ற பல பொருளாதாரக் குறிக்காட்டிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. 2010 இனைக் கொண்ட முன்னயை அடிப்படை ஆண்டுடன் ஒப்பிடுகையில் அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மாறாத விலைகளில் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் அளவு மாறுதலைக் குறித்துக் காட்டியது. இதற்கு, விலைகளில் படிப்படியான வளர்ச்சியினைப் பெற்றுக்கொள்வதற்கு 2015 விலைகளுடன் 2010 அடிப்படை ஆண்டு விலைகள் மாற்றீடு செய்யப்பட்டமை அதேபோன்று உள்ளடக்கம் மற்றும் முறையியல் மேம்பாடுகள் என்பன காரணமாக அமைந்தன. இதனைத் தொடர்ந்து, நேரொத்த மொ.உ.உற்பத்தி வளர்ச்சி வீதங்களும் அடிப்படை ஆண்டு மாற்றத்தின் மூலம் பாதிக்கப்பட்டன. குறிப்பாக, *கொழும்பு பன்னாட்டு நிதியியல் நகரக் கருத்திட்டம்* தொடர்பிலான காணி மீட்புப் பணியினை சேர்த்தமை 2014 - 2019 காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தி மட்டத்திலும் அதேபோன்று வளர்ச்சி வீதங்களிலும் கணிசமான மாறுதலுக்கு வகுத்துள்ளமை அட்டவணை சி.கு. 4.1 மற்றும் வரைபடம் சி.கு. 4.1 இலும் முன்னிலைப்படுத்தியுள்ள தரவுகளில் வெளிப்படுகிறது.


மேலும், வரைபடம் அடிப்படை ஆண்டுத் திருத்தத்துடன் இணைந்து அதன் முக்கிய கூறுகளிலிருந்து அதாவது வேளாண்மை, கைத்தொழில், பணிகள் மற்றும் பொருட்கள் மீதான உதவுதொகைகளைக் கழித்து வரிகள் என்பவற்றிலிருந்து மொ.உ.உற்பத்திக்கான பங்களிப்பு மாற்றமடைந்துள்ளது. விசேடமாக, வரைபடம் சி.கு. 4.2 இல் காட்டப்பட்டவாறு, கைத்தொழில் நடவடிக்கைகளில் பங்கில் அதிகரிப்புடனும் பணிகள் நடவடிக்கைகள் மற்றும் உற்பத்திகள் மீதான உதவுதொகைகளைக் கழித்து வரிகளினதும் பங்கில் வீழ்ச்சியுடன் இது இடம்பெற்றது.

வரைபடம் சி.கு. 4.1
நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதங்களின் ஒப்பீடு (2010 முதல் 2021 வரை)




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் சி.கு. 4.2
நிலையான விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்புக்களின் ஒப்பீடு - 2015 மற்றும் 2021




மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

நடப்பு விலைகளில் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் அதிகரிப்பினைத் தொடர்ந்து, வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் போன்ற மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள பேரண்டப் பொருளாதாரக் குறிகாட்டிகளும் திருத்தப்பட்டுள்ளன. பொதுவாக, அடிப்படை ஆண்டை மாற்றும் செயன்முறையானது சிறப்பாக சான்று அடிப்படையிலமைந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்காக ஏற்கனவே காணப்படுகின்ற பொருளாதாரக் கட்டமைப்பின் பொருளாதாரப் புள்ளிவிபரங்களின் அதிகம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொகுதியினை கொள்கை வகுப்பாளர்களுக்கும் வேறு ஆர்வலர்களுக்கும் வழங்குகின்றது. எவ்வாறாயினும், அடிப்படை ஆண்டு மாற்றம் செய்யப்பட்ட மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை கருதும் போது மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகள் மீது நீண்டகாலம் நிலைத்திருக்கும் நிகழ்வுகளிலிருந்து தோன்றுகின்ற தாக்கத்திலிருந்து ஒருதடவை நிகழ்வுகளின் தாக்கத்தை வேறுபடுத்திப் புரிந்துகொள்வதும் அவற்றை பொருத்தமான விதத்தில் மதிப்பீடு செய்வதும் மிகவும் முக்கியமாகும்.

உசாத்துணைகள்

1. Department of Census and Statistics. Key Findings of Rebased GDP Estimates (Base year 2015). Available at: http://www.statistics.gov.lk/NationalAccounts/StaticalInformation/2015/Reports/Key_findings.


2. Thilangani, U.K.T. and Liyanage, D.N. (2022), 'Rebasing of National Accounts Estimates to Base Year 2015', News Survey, vol. 42, no. 03, pp. 2-8, Available at: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/satahana/News_Survey_2022_03.pdf.

காடாக்கல் மற்றும் மரங்களைக் குற்றிகளாக்குதல், வேளாண்மை ஆதரவு நடவடிக்கைகள் மற்றும் எண்ணெய் பசை பழவர்க்கங்கள் (தெங்கு உட்பட), வாசனைத்திரவியங்கள் மற்றும் பழவர்க்கங்களின் பயிர்ச்செய்கை இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தது. எனினும், சாதகமானதொரு விடயமாக வேளாண்மை உள்ளீடுகள், எரிபொருள் என்பனவற்றின மேம்பட்ட கிடைப்பனவு மற்றும் சாதகமான வானிலை நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக ஆண்டின் இறுதிக் காலாண்டுப்பகுதியில் வேளாண்மை நடவடிக்கைகளில் மீட்சியொன்று அவதானிக்கப்பட்டது.

அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைந்த செயலாற்றத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின்[2] வேளாண்மைப் பிரிவு தொடர்பான உற்பத்தி மற்றும் கேள்வி துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் சராசரியாக சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தன.

2 வியாபார தோற்றப்பாட்டு அளவீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கூறுகளுக்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட முன்னனி நிறுவனங்களின் பதிலிறுப்புகளிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை சுருக்கமாக எடுத்துக் காட்டுகின்றது.

வரைபடம் 2.4
வேளாண்மை நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2022 (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்

**வேளாண்மைத் துறையின் உற்பத்தியை அளவிடுகின்ற வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டெண்ணானது[3] 2022இல் கணிசமான சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது.** ஒட்டுமொத்த வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டெண், 2021இன் 2.1 சதவீத ஆண்டுக்கு ஆண்டு அடிப்படை வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 19.4 சதவீதத்தால் சுருக்கமடைந்தது. இவ் ஒட்டுமொத்த வீழ்ச்சிக்கு நெல், தேயிலை, இறப்பர், மற்றும் விலங்கு வளர்ப்பு மற்றும் விலங்கு உற்பத்திப் பொருட்கள் உள்ளடங்கலாக அநேகமான துணைச் சுட்டெண்கள் பங்களிப்புச்செய்த அதேவேளை, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பழங்கள் துணைச் சுட்டெண்ணானது தெங்குத் துணைச் சுட்டெண்ணுடன் இணைந்து கணிசமான மேம்பாடொன்றைப் பதிவுசெய்தது.

3 2022இலிருந்து, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்ட வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டெண்ணானது இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்பட்ட வேளாண்மை உற்பத்திச் சுட்டெண்ணை மாற்றீடு செய்தது.

அட்டவணை 2.2
வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டென்
(2002 = 100) (அ)

| விடயம் | 2021 | 2022 (ஆ) | வளர்ச்சி வீதம் (%) 2020/21 | வளர்ச்சி வீதம் (%) 2021/22 (ஆ) |
|---|---|---|---|---|
| **மொத்தச் சுட்டெண்** | **199.1** | **160.4** | **2.1** | **-19.4** |
| தேயிலை | 96.6 | 81.1 | 7.5 | -16.0 |
| இறப்பர் | 84.9 | 78.3 | -1.7 | -7.8 |
| தெங்கு | 126.9 | 137.9 | 1.1 | 8.7 |
| நெல் | 180.1 | 118.6 | 0.6 | -34.1 |
| தானியங்கள் | 1,473.9 | 838.1 | 50.1 | -43.1 |
| ஏனைய உணவுப் பயிர்கள் | 179.7 | 162.1 | 17.2 | -9.8 |
| மரக்கறிகள் | 200.4 | 185.5 | -7.2 | -7.4 |
| பழங்கள் | 180.0 | 322.4 | -15.5 | 79.1 |
| விலங்கு மற்றும் விலங்கு உற்பத்திகள் | 180.1 | 175.2 | 3.5 | -2.7 |
| சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 193.0 | 188.5 | 4.7 | -2.3 |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

(அ) 2022 முதல், இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்பட்ட வேளண்மை உற்பத்திச் சுட்டெண்ணானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்படும் வேளாண்மை உற்பத்தி அளவுச் சுட்டெண்ணால் பிரதியீடு செய்யப்படுகின்றது.
(ஆ) தற்காலிகமானது

## நெல்

**வளமாக்கிகள் பற்றாக்குறை உள்ளடங்கலாக கடுமையான நிரம்பல் பக்க இடையூறுகளுக்கு மத்தியில், நாட்டின் மொத்த நெல் உற்பத்தியானது 2022இல் கணிசமாக வீழ்ச்சியடைந்து 2017இலிருந்தான தாழ்வான வருடாந்த உற்பத்தியைப் பதிவுசெய்தது.** 2021இன் பிற்பகுதியில் சேதன வளமாக்கிகளினதும் ஏனைய வேளாண் இரசாயனங்களினதும் இறக்குமதி மீதான தடை நீக்கப்பட்ட போதிலும், இவ் கட்டுப்பாட்டின் தொடர்ச்சியானது தேவையான வளமாக்கிகளை இறக்குமதி செய்வதற்கான வெளிநாட்டு செலாவணி பற்றாக்குறையுடன் இணைந்து நாட்டில் கடுமையான வளமாக்கித் தட்டுப்பாட்டைத் தோற்றுவித்து, ஏனையவற்றிற்கு மத்தியில் நெல்த் துறையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. 2021இல் பதிவுசெய்யப்பட்ட அபரிமிதமான அறுவடையைத் தொடர்ந்து, 2022இல் வருடாந்த நெல் உற்பத்தியானது 3.4 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 34.1 சதவீத வீழ்ச்சியொன்றை பதிவுசெய்தது. இது மொத்த உற்பத்தியின் 57.0 சதவீதத்திற்கு வகைகூறும் 2021/2022 பெரும்போக காலத்தில் ஏற்பட்ட 36.9 சதவீத வீழ்ச்சியினதும் 2022 சிறு போக கால நெல் அறுவடையில் ஏற்பட்ட 30.0 சதவீத சரிவினதும் ஒன்றிணைந்த பெறுபேறாகக் காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப் பரப்பு 1,114,246 ஹெக்டேயர்களுக்கு 1.1 சதவீதத்தால் சிறிதளவு வீழ்ச்சியடைந்த அதேவேளை 2022இல் சராசரி நெல் விளைச்சல் 2021இல் பதிவுசெய்யப்பட்ட ஹெக்டேயரொன்றிற்கு 4,571 கிலோகிராம்களுடன் ஒப்பிடுகையில் 3,045 கிலோகிராம்களுக்கு வீழ்ச்சியடைந்ததுடன் இப்பருவகாலங்களில் உள்ளீட்டு பற்றாக்குறை மற்றும் உற்பத்தித்திறன் மெதுவடைவு என்பவற்றின் தாக்கத்தை பிரதிபலித்தது. 2022இல் மொத்த நெல் உற்பத்தி 2.1 மில்லியன் மெட்ரிக் தொன்களைக் கொண்ட அரிசிக்குச் சமமானதாகவும் 11 மாதங்களுக்கு வீட்டுத்துறையினரின் அரிசிக்கான கேள்விக்குச்[4] சமமானதாகவும் காணப்பட்டது. உள்நாட்டுச் சந்தையில் அரிசிக்கான பற்றாக்குறைகளிலிருந்து தோன்றுகின்ற விலை அழுத்தங்களை தடுப்பதற்கும் நாட்டில் ஒட்டுமொத்த அரிசிக்கான தேவைப்பாட்டை நிறைவுசெய்கின்ற அதேவேளை உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கும் ஆண்டு காலப்பகுதியில் அரிசியை இறக்குமதி செய்வதற்கான வழிமுறைகளை அரசாங்கம் முன்னெடுத்தது. இதற்கமைய,

4 போதியளவு மட்டம் என்பது வீட்டுத்துறை வருமான மற்றும் செலவின அளவீட்டு - 2019 இல் மதிப்பீடு செய்யும் சராசரி வீட்டுத்துறை அரிசிக்கான நுகர்வை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகின்றது. எவ்வாறாயினும், நாட்டின் உண்மையான அரிசிக்கான கேள்வியானது வீட்டுத்துறை உணவகங்கள் மற்றும் விடுதிகள், அரிசி சார்ந்த உணவுக் கைத்தொழில்கள் போன்ற ஏனைய மூலங்களுக்காக அரிசிக்கான கேள்வியானது வருமான மற்றும் செலவின அளவீட்டின் சராசரி வீட்டுத்துறை அரிசி நுகர்வு மதிப்பீட்டை விட கணிசமாக அதிகமாக இருக்கலாம்.

2

அட்டவணை 2.3
நெல்த்துறை புள்ளிவிபரங்கள்

| விடயம் | அலகு | 2021 (அ) | | | 2022 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 770 | 501 | 1,272 | 776 | 482 | 1,258 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 762 | 497 | 1,259 | 766 | 480 | 1,246 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 682 | 445 | 1,127 | 685 | 429 | 1,114 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 3,061 | 2,088 | 5,150 | 1,931 | 1,462 | 3,393 |
| | '000 புசல்கள் | 146,720 | 100,079 | 246,799 | 92,555 | 70,050 | 162,605 |
| எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சல் (இ) | கி.கி./ எக்டேயர் | 4,492 | 4,692 | 4,571 | 2,819 | 3,407 | 3,045 |
| வழங்கப்பட்ட கொடுகடன் (ஈ) | ரூ.மில் | 8,603 | 4,449 | 13,052 | - | - | 12,454 |
| அரிசி இறக்குமதிகள் (உ) | '000 மெற்றிக்தொன் | - | - | 147 | - | - | 783 |
| இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கு சமனான நெல் (உ) | '000 மெற்றிக்தொன் | - | - | 216 | - | - | 1,152 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சலானது உற்பத்தியை தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்பட்டது
(ஈ) 2022இலிருந்து, பயிர்ச்செய்கைக்காக முதன்மை வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுகடன்களின் தரவுகளானது பெரும்போகம் மற்றும் சிறுபோக பருவகாலங்களிற்கென தனித்தனியாக கிடைப்பனவாக இல்லை
(உ) ஆண்டுக்கான பெறுமதி

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி


முன்னைய ஆண்டு காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட 147,091 மெற்றிக் தொன்களைக் கொண்ட அரிசியுடன் ஒப்பிடுகையில் 2022இல் ஏறத்தாழ 783,420 மெற்றிக் தொன்களைக் கொண்ட அரிசி இறக்குமதி செய்யப்பட்டன. இருப்பினும், இறக்குமதி செய்யப்பட்ட இருப்புக்களுடனும் சிறுபோக பருவகாலத்திலிருந்தான அறுவடையுடனும் உள்நாட்டில் கிடைப்பனவாகவுள்ள அரிசிக்கான இருப்புக்கள் படிப்படியாக அதிகரித்தமையால், சில வகைகளைத் தவிர்ந்த அரிசியின் இறக்குமதி மீதான தடையொன்று 2022 திசெம்பர் 09 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் விதிக்கப்பட்டது.

**2022இன் காலப்பகுதியில் உற்பத்தியில் ஏற்பட்ட சரிவுடன் இணைந்து அதிகரித்த உள்ளீட்டுச் செலவுகள் அபரிமிதமான நெல் மற்றும் அரிசி விலைகளைத் தோற்றுவித்தது.** 2021இன் பிற்பகுதியில் அவதானிக்கப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக, 2021/2022 பெரும்போக காலப்பகுதியில் தாழ்வான உற்பத்தியால் ஏற்பட்ட நிரம்பல் பற்றாக்குறைகளாலும் சந்தையில் நிலவிய நிரம்பல் பற்றாக்குறை பற்றிய சந்தை ஊகங்களிலிருந்து தோன்றிய அதிகரித்த கேள்வியாலும் பாரியளவில் உந்தப்பட்டு 2022இன் முன்னைய காலப்பகுதியில் நெல் விலைகள் மேலதிக அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது. விலைத் தளம்பலைக் குறைப்பதற்கும் நிலையான நிரம்பலொன்றைப் பேணுவதற்கும் நெல் மற்றும் அரிசிச் சந்தைகளில் அரசாங்கம் இடையிடையில் தலையீடுசெய்தது. இதற்கமைய. நெல் சந்தைப்படுத்தல் சபையின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2021/2022 பெரும்போக காலப்பகுதியில் சம்பா, நாட்டரிசி மற்றும் கீரி சம்பா என்பவற்றின் கிலோகிராம் ஒன்றிற்கான உத்தரவாதப்படுத்தப்பட்ட கொள்வனவு விலைகள் முறையே, ரூ.92.00, ரூ.90.00 மற்றும் ரூ.95.00 என்பவற்றிற்கு அதிகரிக்கப்பட்டன. 2021/2022 பெரும்போகக் காலப்பகுதியிலிருந்து ஏறத்தாழ 71,280 மெற்றிக் தொன்களை கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு இயலுமாக இருந்தது. மேலும், நெல் துறையில் அதிகரிக்கும் உற்பத்திச் செலவைக் கருத்திற்கொண்டு, நெல் சந்தைப்படுத்தல் சபையானது 2022 சிறுபோகத்தில் சம்பா, நாட்டரிசி மற்றும் கீரி சம்பா என்பவற்றின் கிலோகிராம் ஒன்றிற்கான உத்தரவாதப்படுத்தப்பட்ட கொள்வனவு விலைகளை முறையே ரூ.125.00, ரூ.120.00 மற்றும் ரூ.130.00 என்பவற்றிற்கு அதிகரித்தது. எவ்வாறாயினும், நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குரிய நிதி பற்றாக்குறையாக இருந்ததன் காரணமாக புதிய உத்தரவாதப்படுத்தப்பட்ட விலைகளின் கீழ் நெல் சந்தைப்படுத்தல் சபையால் ஏறத்தாழ 7,076 மெற்றிக் தொன்கள் நெல்லை மட்டுமே கொள்வனவு செய்ய இயலுமாகவிருந்தது. இதனால், வேளாண்மையாளர்கள் தமது நெல்லை தாழ்ந்த விலையில் தனியார் ஆலையாளர்களுக்கு விற்பதை கட்டாயப்படுத்தியதுடன் 2022இன் பின்னைய பகுதியை நோக்கி மிதமான நெல் விலைகளுக்கு காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், அனைத்து நெல் வகைகளினதும் சராசரி விலைகளானது 2021இல் அவதானிக்கப்பட்ட விலை மட்டங்களிற்கு அதிகமாகவே காணப்பட்டது. சம்பா நெல் வகையின் சராசரி விலை 2021இல் பதிவு செய்யப்பட்ட கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.65.32 இலிருந்து கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.108.69 ஆக ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 66.4 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பை பதிவுசெய்த அதேவேளை, 2022இல் நாடு நெல் வகையின் சராசரி விலையும் 2021இல் பதிவு செய்யப்பட்ட கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.57.61 இலிருந்து கிலோகிராம் ஒன்றிற்கு ரூ.103.87 ஆக அதிகரித்து முன்னைய ஆண்டை விட 80.3 சதவீத அதிகரிப்பை ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் பதிவுசெய்தது. நெல் விலைகளின் ஒத்த போக்கைத் தொடர்ந்து, 2022இன் பிற்பகுதியில் சில மிதமடைதல்களிற்கு மத்தியில், 2022 முழுவதும் அரிசி வகை விலைகளும் மேல் நோக்கிய போக்கொன்றைக் காண்பித்தன. இதற்கமைய, சம்பா மற்றும் நாடு என்பவற்றின் சில்லறை விலைகளானது 2021இன் முறையே கிலோகிராமொன்றிற்கு ரூ.136.52 மற்றும் கிலோகிராமொன்றிற்கு ரூ.116.56 ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் 2022இல் முறையே கிலோகிராமொன்றிற்கு

ரூ.209.19 மற்றும் கிலோகிராமொன்றிற்கு ரூ.213.36 ஆக காணப்பட்டன. அதேவேளை, உள்நாட்டுச் சந்தையில் அரிசி நிரம்பலில் ஏற்பட்ட பற்றாக்குறைக்கு மத்தியில் அரிசிக்கான சில்லறை விலைகளில் ஏற்படும் மிகையான தளம்பலைத் தீர்ப்பதற்காக அரசாங்கமானது அரிசி வகைகளுக்கான உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை விதித்தல் மற்றும் அரிசி இறக்குமதிகளூடாக நிரம்பலை ஊக்குவித்தல் உள்ளடங்கலாக பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டது. இதற்கமைய, 2022 மே 02 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் நாட்டரிசி, சம்பா மற்றும் கீரி சம்பா என்பவற்றுக்கான உயர்ந்தபட்ச சில்லறை விலைகள் முறையே கிலோகிராமொன்றிற்கு ரூ.220.0 கிலோகிராமொன்றிற்கு ரூ.230.00 கிலோகிராமொன்றிற்கு ரூ.260.00 ஆக விதிக்கப்பட்டன. தொடர்ச்சியாக அதிகளவான விலைகளின் தாக்கத்தை தடுப்பதற்கு, அரசாங்கமானது 2023 மாச்சு மற்றும் ஏப்பிறல் மாதத்தில் குறைந்தளவான வருமானத்தை ஈட்டுகின்ற குடும்பங்களுக்கு மாதமொன்றிற்கு 10 கிலோகிராம் கொண்ட அரிசியை பகிர்ந்தளிக்கும் நோக்குடன் 2022/2023 பெரும்போக காலப்பகுதியில் கிலோகிரமொன்றிற்கு ரூ.100.00 இல் வேளாண்மையாளர்களிடமிருந்து நாடு வகை நெல்லை கொள்வனவு செய்வதற்கு நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தொடங்கிவைத்தது.

**வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட சமகால பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு 2022இல் அரசாங்கத்தால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, துறையின் நீண்ட கால உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** இரசாயன வளமாக்கி மற்றும் வேளாண் இரசாயனங்களின் இறக்குமதித் தடை மற்றும் வளமாக்கிகளை இறக்குமதி செய்வதற்கு உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட திரவத்தன்மை என்பவற்றிலிருந்து தோற்றம்பெற்ற வளாமாக்கி கிடைப்பனவின் பற்றாக்குறையின் பாதகமான விளைவுகளை

வரைபடம் 2.5
அரிசி : நிரம்பல் மற்றும் கேள்வி




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

உரியவாறு கருத்திற்கொண்டு, அரசாங்கமானது 2022இன் மூன்றாம் காலாண்டிலிருந்து இரசாயன வளமாக்கிகளை வழங்குவதற்கான வழிமுறைகளை துரிதப்படுத்தியது. இதற்கமைய, அரசாங்கமானது 2022இன் சிறுபோக பயிர்ச்செய்கைக்காக இந்திய கொடுகடன் வசதியின் கீழ் 65,000 மெற்றிக் தொன்களைக் கொண்ட யூரியாவை கொள்வனவு செய்த அதேவேளை, 2022 சிறுபோக காலப்பகுதியில், நெல் வேளாண்மையாளர்களுக்கான யூரியாவானது 50 கிலோகிராம் கொண்ட யூரியா சாக்குப் பையொன்று ரூ.10,000.00 எனும் மானிய விலையில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2022/2023 பெரும்போக காலப்பகுதிக்காகவும் எதிர்வருகின்ற காலப்பகுதிக்காகவும் டிரிப்ள் சுப்பர் பொசுபேற்று (TSP) மற்றும் பொற்றாசியம் முரைட்டு (MOP) போன்ற தேவைப்படும் யூரியாவை காலக்கிரமமாக வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு பல்வேறு உதவி நிகழ்ச்சித்திட்டங்களூடாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு உள்ளடங்கலாக பல்வேறு பன்னாட்டு அமைப்புக்களுடன் பலதரப்பட்ட ஒருங்கேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைய, 2022/2023 பெரும்போக காலப்பகுதியில் நெற்ப் பயிர்ச்செய்கைக்காக ஏறத்தாழ 100,000 மெற்றிக் தொன்களைக் கொண்ட யூரியாவை பகிர்ந்தளிப்பதற்கு அரசாங்கத்திற்கு இயலுமாகவிருந்ததுடன் இதன் மூலம் நெற்த் துறை மீண்டெழுவதற்கும் கணிசமாக பங்களிப்புச் செய்தது. மேலும், கிளைபோசைற்றை களைகொல்லியை உள்நாட்டு பயன்பாட்டிற்கு அனுமதிப்பதற்கான தேவைப்பாட்டைக் கருத்திற்கொண்டு, அமைச்சரவையானது 2022/2023 பெரும்போகக் காலப்பகுதியில் வேளாண்மை நோக்கத்திற்காக தேவையான கிளைபோசைற்று அளவை ஆறு மாத காலப்பகுதிக்கு இறக்குமதி செய்வதற்கான ஒப்புதலை 2022 செத்தெம்பரில் வழங்கியது. இதற்கு மேலதிகமாக, 2022/2023 பெரும்போக காலப்பகுதியில் சில மாவட்டங்களில் நெற் கதிர்களின் பழுப்பிற்கு வழிவகுக்கின்ற ஊட்டச்சத்து குறைபாடுகளை தவிர்ப்பதற்கு வளமாக்கிகளையும் வேறு சேதன துணைநிரப்பிகளையும் வழங்குவதனூடாக அவசர வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பூச்சிகொல்லி மற்றும் அனர்த்த முகாமைத்துவத்திற்கான நீடித்தகளப் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, சிறப்பாக செயலாற்றுகின்ற இனங்களைத் தெரிவு செய்வதற்கான அரிசி வகைப் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்கள் 2022 ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதுடன் குறுங்காலப்பயிர், அதிகளவான விளைச்சல் மற்றும் வறட்சியை எதிர்கொள்ளல் போன்ற விசேட பண்புகளுடன் கூடிய நான்கு புதிய அரிசி வகைகள் 2022இல் வெளிக்கொணரப்பட்டன. இத்தகைய நான்கு புதிய வகைகளினுள் ஒரு வகை அரிசி பிஸ்கெட் உற்பத்திகள் போன்ற கைத்தொழில் நோக்கத்திற்காக விசேடமாக வெளியிடப்பட்டது. தளத்திற்குரிய களைகொல்லி முகாமைத்துவத்தினூடாக துல்லிய முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முயற்சியில், வயல்கள் தொடர்பில் பிரதான

களைகொல்லிகளையும் அத்தகைய களைகொல்லிகளின் தாக்கத்தையும் அடையாளம் காண்பதற்கு பல்புடைநிரல்வழி கொண்ட ட்ரோன் பிம்பத் (multispectral drone image) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வயல் மேடுகளில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

2

## தேயிலை

**உள்நாட்டு ரீதியில் வளமாக்கிகளினதும் வேளாண்மை இரசாயங்களினதும் கடுமையான பற்றாக்குறையின் காலங்கடந்த விளைவின் காரணமாக 2022இல் தேயிலை உற்பத்தியானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 16.0 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** ஆண்டு காலப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட விளைச்சல் இழப்புக்களில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்திய குறிப்பாக யூரியாவை அடிப்படையாகக் கொண்ட இரசாயன வளமாக்கிகள் மற்றும் களைகொல்லிகள் போன்ற இரசாயன வளமாக்கிகளினதும் வேளாண்மை இரசாயனங்களினதும் கிடைப்பனவின்மை எடுத்துக்காட்டப்பட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களின் பயிர் விளைச்சலில் ஏற்பட்ட பெருமளவான வீழ்ச்சி பற்றிய பூர்வாங்க ஆய்வானது தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தால் நடாத்தப்பட்டது. இதற்கமைய, மொத்த உற்பத்தியில் முறையே ஏறத்தாழ 22 சதவீதத்திற்கும் 16 சதவீதத்திற்கும் 62 சதவீதத்திற்கும் பங்களிப்புச் செய்த உயர்நில, மத்தியநில மற்றும் தாழ்நில வளர் தேயிலை உற்பத்தியானது 2022இல் முறையே 13.8 சதவீதத்தாலும், 21.2 சதவீதத்தாலும் மற்றும் 15.4 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, சிறுஉடமையாளர் துறையின் சராசரி விளைச்சலானது 2021இல் அறிக்கையிடப்பட்ட ஹெக்டேயரொன்றிற்கு 1,414 கிலோகிராமொன்றுடன் ஒப்பிடுகையில் ஹெக்டேயரொன்றிற்கு 1,193 கிலோகிராமாக ஆக குறைவடைந்ததுடன் சராசரி விளைச்சலில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 15.6 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 2022இல் தேயிலைத் துறையானது இரசாயன வளமாக்கிகளினதும் வேறு வேளாண்மை உள்ளீடுகளின் உள்நாட்டுப் பற்றாக்குறையுடன் ஒன்றிணைந்த அதிகரித்த விலையின் காரணமாகவும் எரிபொருள். மின்சாரம் மற்றும் நீர் உள்ளடங்கலான பயன்பாட்டு விலைகளின் மேல்நோக்கிய திருத்தத்தின் காரணமாகவும் உயர்வான உற்பத்திச் செலவை அனுபவித்துள்ளதுடன் இதன்மூலம் உலகளாவிய தேயிலைச் சந்தைகளில் நாட்டின் போட்டித்தன்மை தடைப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2022இல் தேயிலை உற்பத்தியின் மதிப்பிடப்பட்ட செலவானது 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கிலோகிராமொன்றிற்கு ரூ.20.00 ஆல் ரூ.639.00 ஆக அதிகரித்து காணப்பட்டது.

**2022இல் கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலையின் விலைகளானது வரலாற்று ரீதியாக உயர்ந்தளவு மட்டத்தை அடைந்ததுடன் ஆண்டு முழுவதும் அதிகரித்த மட்டத்திலேயே காணப்பட்டது.** ஆண்டு காலப்பகுதியில் தேயிலையின் சராசரி விலையானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ரூ.619.15 இலிருந்து கிலோகிராமொன்றிற்கு ரூ.1,270.50 ஆக 105.2 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இதற்கமைய, 2022இல் உயர்நில, மத்தியநில மற்றும் தாழ்நில வளர் தேயிலை என்பவற்றுக்கான சராசரி தேயிலை விலைகளானது முறையே 94.6 சதவீதம், 93.5 சதவீதம் மற்றும் 110.8 சதவீதம் அதிகரிப்பை அறிக்கையிட்டன. மேலும், 2022இல் பச்சை இலைகளுக்காக சிறுஉடமையாளர்களால் பெறப்பட்ட சராசரி விலையும் 2021இன் கிலோகிராமொன்றிற்கு ரூ.93.67 உடன் ஒப்பிடுகையில் ரூ.182.07 ஆக கணிசமாக அதிகரித்தது. தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலையானது (கப்பலேற்றல் பெறுமதி) முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 4.63 உடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 5.03 ஆக 8.7 சதவீதத்தால் அதிகரித்தது. ஆண்டு காலப்பகுதியில் சராசரி தேயிலை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியில் கொழும்பு தேயிலை ஏலத்திற்கு வழங்கப்பட்ட அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி பெருமளவில் பங்களிப்புச் செய்த அதேவேளை இலங்கை ரூபாவின் பெறுமானத்தேய்வும் ரூபா நியதிகளில் இவ்விலை உயர்விற்கு பங்களித்திருந்தது.

**இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் உற்பத்தித்திறன், பெறுமதிசேர்ப்பு, மற்றும் போட்டித்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதை நோக்காகக்கொண்டு, 2022இல் பல்வேறு வழிமுறைகள் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டன.** இலங்கைத் தேயிலைச் சபையானது தமது பச்சைத் தேயிலை வழங்குநர்களுக்காக வளமாக்கியைக் கொள்வனவு செய்வதற்கு தேயிலைத் தொழிற்சாலைகளை இயலுமைப்படுத்தி 8.0 சதவீத வட்டியில் சலுகைக் கடன்திட்டமொன்றை தொடங்கியிருந்தது. ஆண்டு காலப்பகுதியில், இலங்கைத் தேயிலைத் சபையானது தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் உதவுதொகை திட்டத்தின் கீழ், ரூ.16.9 மில்லியனை 38 தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு பகிர்ந்தளித்து, உற்பத்திச் செயன்முறையின் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இத்தகைய தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தது. தேயிலை நிலங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான மீள்நடுகை உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தினூடாக ரூ.56.4 மில்லியன் தொகையை இலங்கைத் தேயிலைச் சபை வழங்கிய அதேவேளை 204 ஏக்கர் கொண்ட நடுத்தரளவு தேயிலை நிலங்களில் தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகளை நிறுவுவதற்காக ரூ.24.5 மில்லியன் உதவுதொகையையும் வழங்கியது. தேயிலை நடுகை மற்றும் புதிய பயிர்நடுகை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிர் புனரமைப்பு உதவுதொகை நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுடன் தொடர்பில் தேயிலை சிறு உடமையாளர்கள் அபிவிருத்தி அதிகார சபையால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில் 912 ஹெக்டேயர்களைக் கொண்ட தேயிலை நிலங்கள் மீள் நடுகை

செய்யப்பட்டதுடன் 408 ஹெக்டேயர்களைக் கொண்ட புதிய நிலங்களும் தேயிலை நிலங்களாக மாற்றப்பட்ட அதேவேளை தேயிலைத் தோட்டங்களை மீள்நிரப்புகின்ற செயன்முறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது. ஆண்டு முழுவதும் தேயிலை உடமையாளர்களுள் விழிப்புணர்வை மேம்படுத்துவதை நோக்கிய முயற்சிகளானது ஆலோசனை பணிகளூடாக மேற்கொள்ளப்பட்டன. தேயிலை ஆராய்ச்சி நிறுவனமானது தனது உபாய திட்டங்களுடன் இணங்கியொழுகும் விதத்தில் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் பணிக்கருத்திட்டங்கள் என்பவை தொடர்பில் தொடர்ந்தும் முயற்சி எடுத்தது. இதற்கமைய ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் தேயிலை நிலங்களுக்கு பொருத்தமாக மோட்டார் மயப்படுத்தப்பட்ட தெரிவுசெய்யக்கூடிய தேயிலை அறுவடை இயந்திரத்தை உருவாக்கி அறிமுகப்படுத்தல், வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்களில் பயிர்களை நடுகை செய்வதன் மூலமாக மேம்படுத்தப்பட்ட விதைகளை அறிமுகப்படுத்துவதை அதிகரிப்பதற்கு விதைத் தோட்டங்களை உருவாக்குதல், தேயிலைப் பயிர்ச்செய்கையில் நுண்ணுயிர் உயிரிப் பூச்சிகொல்லிகளை வர்த்தகமயப்படுத்துவதை ஊக்குவித்தல் மற்றும் புதிய தேயிலை வகைகளின் தாய்த் தாவர பிரதேசங்களை விரிவுபடுத்தல் போன்ற விசேட கருத்திட்டங்கள் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

## இறப்பர்

**இறப்பர் வளருகின்ற பிரதேசங்களில் நிலவிய பாதகமான வானிலை நிலைமைகள், வளமாக்கிகளின் பற்றாக்குறை மற்றும் பெஸ்ராலோற்றியோப்சிஸ் நோயின் பரவல் என்பவற்றின் இணைந்த விளைவுகளால் பெருமளவில் உந்தப்பட்டு இறப்பர் உற்பத்தியானது தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக 2022இல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.** 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் முதிர்வடையாத இறப்பர் பயிர் நடுகைகளில் வளமாக்கிகளின் பற்றாக்குறையின் தாக்கம் கணிசமாக காணப்பட்டதுடன் பயிர்களின் பால் சேகரிப்பு நிலையில் தாமதத்தை ஏற்படுத்துகின்றதும் எதிர்வரும் காலங்களில் நிலத்தின் உற்பத்தி திறனை குறைக்கின்றதுமான குறையான மர வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. மேலும் ஆண்டு காலப்பகுதியில் வேளாண்மை இரசாயனங்களின் பற்றாக்குறையானது இறப்பர் பயிர்செய்கையில் பெஸ்ராலோற்றியோப்சிஸ் நோயின் கடுமையான தாக்கத்தினை தோற்றுவித்து ஏறத்தாழ 40,000 ஹெக்டேயர் கொண்ட இறப்பர் பயிர்ச்செய்கைகளைப் பாதித்து 0-10 சதவீத வீச்சைக் கொண்ட வெளியீட்டு விழ்ச்சியை பாதிப்படைந்த பிரதேசங்களில் தோற்றுவித்தது. இதற்கமைய 2022இல் மொத்த இறப்பர் உற்பத்தியானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 7.8 சதவீதத்தால் 70.9 மில்லியன் கிலோகிராமுக்கு வீழ்ச்சியடைந்தது. 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில், இறப்பர் உற்பத்தியின் பிரதான வகைப்படுத்தல்களுக்கு மத்தியில் மொத்த இறப்பர் உற்பத்தியின் 49.0 சதவீதத்திற்கு வகை கூறும் தட்டை இறப்பர் உற்பத்தியானது 9.6 சதவீத சுருக்கத்தைப் பதிவுசெய்த அதேவேளை ஏனைய இறப்பர் வகைப்படுத்தல்களின் உற்பத்தியானது 11.7 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிறேப் இறப்பர் உற்பத்தியானது 3.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2022இல் உள்நாட்டு இறப்பர் விலைகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு மத்தியில், இறப்பர் துறையில் உற்பத்தித்திறன் மற்றும் பால் சேகரிப்பு வரையறைகள் என்பன உற்பத்தியில் நம்பத்தக்க முன்னேற்றங்களைத் தடுத்தது. அதேவேளை, பால் சேகரிப்பு நாட்களில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக சராசரி இறப்பர் விளைவு, ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2.1 சதவீதத்தால் ஹெக்டேயர் ஒன்றிற்கு 665 கிலோகிராமாக குறைவடைந்தது. அண்மைய ஆண்டுகளில் இறப்பர் உற்பத்திச் செலவானது அதிகரித்து காணப்பட்டு 2022இன் இறுதியளவில் கிலோகிராமொன்றிற்கு ரூ.288.00 தொகையை பதிவுசெய்ததுடன் முன்னைய ஆண்டிலிருந்து 30.3 சதவீத அதிகரிப்பொன்றையும் பதிவுசெய்தது. 2022இல், கைத்தொழில் துறையினரின் பச்சை இறப்பர் உள்நாட்டு நுகர்வானது 12.4 சதவீதத்தால் 117.3 மில்லியன் கிலோகிராமாக சுருக்கமடைந்தது. இது, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று குறைந்தமையால் உள்நாடு மற்றும் உலகளாவிய இரு சந்தைகளிலும் மருத்துவ கையுறைகளிற்கான கேள்வி வீழ்ச்சியடைந்தமை காரணமாகவிருந்தது.

**கொழும்பு இறப்பர் ஏலத்தில் பிரதான இறப்பர் வகைகளின் விலைகளானது 2022இன் முதலாம் அரையாண்டில் உலகளாவிய சந்தையில் ஏற்பட்ட சாதகமான கேள்வியால் உந்தப்பட்டு வரலாற்று ரீதியில் உயர்ந்த மட்டங்களை அடைந்தது.** கொழும்பு இறப்பர் ஏலத்தில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பரின் (RSS1) சராசரி விலையானது 2021இன் கிலோகிராமொன்றிற்கு ரூ.460.78 இலிருந்து 2022இல் கிலோகிராமொன்றிற்கு ரூ.595.00 ஆக அதிகரித்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 29.1 சதவீத அதிகரிப்பை பதிவுசெய்த அதேவேளை லேட்டெக்ஸ் கிறேப் இறப்பர் விலைகளும் 2021இன் கிலோகிராமொன்றிற்கு ரூ.626.32 இலிருந்து 2022இல் கிலோகிராமொன்றிற்கு 44.2 சதவீதத்தால் ரூ.903.27 ஆக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இருப்பினும், ஆண்டின் பிற்பகுதியில், உள்நாடு மற்றும் உலகளாவிய இரு சந்தைகளிலும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களுக்கான பலவீனமான கேள்வியின் காரணமாக இறப்பர் விலைகள் வீழ்ச்சியடையும் போக்கொன்றில் காணப்பட்டன. இதற்கமைய, 2022இன் இறுதியில் கொழும்பு இறப்பர் ஏலத்தில் நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பரின் சராசரி விலைகளும் லேட்டெக்ஸ் கிறேப் இறப்பர் விலைகளும் முறையே கிலோகிராமொன்றிற்கு ரூ.517.67 மற்றும் கிலோகிராமொன்றிற்கு ரூ.628.33 காணப்பட்டது. இறப்பரின்

கப்பலேற்றல் சராசரி விலையும் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.72இலிருந்து 2022இல் கிலோகிராமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.73 ஆக சிறிதளவு அதிகரித்து காணப்பட்டது.

**2022இல் இறப்பர் துறையின் உற்பத்தித் திறனையும் பெறுமதி சேர்ப்புக்களையும் மேம்படுத்துவதற்கான உபாயங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.** இறப்பர் ஆராய்ச்சி நிறுவகமானது இறப்பர் துறையின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான தமது முயற்சியில் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறுபட்ட ஆய்வுக் கற்கைகளை நடாத்தியது. ஆண்டு காலப்பகுதியில், குறிப்பாக மரபுசார பிரதேசங்களில் உற்பத்திச் செலவுகளைக் குறைத்தல் மற்றும் ஊழியர் பற்றாக்குறையைக் கையாளுதல் ஆகிய நோக்குடன் கூடிய இடைவெளிகளுடனான பால் சேகரிப்பு முறைமைகளைப் பின்பற்றுதல் பற்றிய ஆய்வு நடாத்தப்பட்டது. இதன் விளைவாக, சிறு உடமையாளர்களாலும் பயிர்நடுகை கம்பனிகளாலும் உரிமையாக்கப்பட்ட ஏறத்தாழ 1,600 ஹெக்டேயர்களைக் கொண்ட இறப்பர் நிலங்கள் 'நான்கு நாட்களுக்கு ஒருமுறையான பால் சேகரிப்பு முறைமை' ஆக மாற்றப்பட்டன. இலை நோய்களால் ஏற்படும் கணிசமான விளைச்சல் இழப்புக்களைத் தடுப்பதற்கான முயற்சியாக அத்தகைய நோய்களுக்கெதிரான எதிர்ப்புத் தன்மை கொண்ட இனங்களை அடையாளங் காண்பதற்கான நடவடிக்கைகள் 2022இல் நிறைவுசெய்யப்பட்ட அதேவேளை, நிலைபெறத்தக்க இறப்பர் பயிர்ச்செய்கைக்காக காலநிலைக்கெதிரான எதிர்ப்புத் தன்மை கொண்ட இனங்களை அடையாளங் காண்பதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், இறப்பர் வேளாண்மையாளர்களுக்கு மத்தியில் மெதுவான வீதத்தில் வெளிவரக்கூடிய வளமாக்கிகளைப் பிரயோகித்தல் மற்றும் தாவரங்கள் ஊட்டச்சத்துக்களை ஈர்த்துக்கொள்வதை மேம்படுத்தல் என்பவற்றிற்கான மேம்படுத்தப்பட்ட உத்திகள் தொடர்பில் விழிப்புணர்வை அதிகரிப்பதை நோக்காகக்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களானது மொனராகல, மிந்தேனிய, மதுகம, ஹொரண, புலத்சிங்கள, களுத்தறை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் நடாத்தப்பட்டன. மேலும், ஆண்டு காலப்பகுதியில், இறப்பர் அபிவிருத்தித் திணைக்களமானது புதிய பயிர்நடுகை மற்றும் மீள்மரநடுகை என்பவற்றின் ஊடாக இறப்பர் பயிர்ச்செய்கை நிலப்பரப்பை விரிவுபடுத்துவதில் தொடர்ந்தும் ஈடுபட்டது. புதிய பயிர்நடுகை நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ், வட மாகாணத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவதாக நிறுவப்பட்ட இறப்பர் விளைச்சலில் இறப்பப் பால் அறுவடை 2022இல் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு வகையான இறப்பர் அடிப்படையிலான பயிர்களுக்கிடையிலான முறைமைகளைப் பிரபல்யப்படுத்தவும், பயன்படுத்தப்படாத நிலங்களில் பயிர்களை பல்வகைப்படுத்தவும் பல்வேறு மாதிரித் தளங்களில் தள விளக்கக்காட்சிகள் மூலமான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, பயிர்ச்செய்கையின் செலவு அதிகரித்தமையால், உதவுதொகையின் அளவை சீர்செய்யாமல் உதவுதொகை நிதியங்களின் ஏற்பாட்டிற்காக தவணைகளின் எண்ணிக்கையை எட்டிலிருந்து ஐந்தாக குறைக்கும் பொருட்டு, 2022 சனவரி 01இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் மீள்நடுகை மற்றும் புதிய மரநடுகை என்பவற்றிற்கான உதவுதொகை திட்டங்களுக்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதியியல் ஆதரவுடன் இறப்பர் பட்டையை முறையாக முகாமை செய்வதனூடாக நிலைபெறத்தக்க அறுவடை தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்

அட்டவணை 2.4
முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2021 (அ) | 2022 (ஆ) | மாற்றம் (%) 2020/21 (அ) | 2021/22 (ஆ) |
|---|---|---|---|---|---|
| **1. தேயிலை** | | | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 299.5 | 251.5 | 7.4 | -16.0 |
| - தாழ் நிலம் | மில் கி.கி | 183.2 | 155.0 | 7.8 | -15.4 |
| - மத்திய நிலம் | மில் கி.கி | 51.0 | 40.2 | 9.1 | -21.2 |
| - உயர் நிலம் | மில் கி.கி | 65.3 | 56.3 | 5.0 | -13.8 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 267 | 267 | 0.3 | 0.2 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 267 | 267 | 0.3 | 0.2 |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 618.49 | 638.99 | 13.2 | 3.3 |
| 1.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 619.15 | 1,270.50 | -2.3 | 105.2 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 920.76 | 1,643.11 | 6.2 | 78.5 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,123 | 1,239 | 38.3 | 10.3 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 696 | 476 | 61.9 | -31.6 |
| 1.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ) | மொ.உ.உ.,இன் %மாக | 0.6 | 0.5 | 4.8 | -8.8 |
| **2. இறப்பர்** | | | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 76.9 | 70.9 | -1.7 | -7.8 |
| - தட்டை இறப்பர் | மில் கி.கி | 38.4 | 34.8 | -1.7 | -9.6 |
| - கிறேப் இறப்பர் | மில் கி.கி | 13.9 | 14.5 | 7.4 | 3.9 |
| - ஏனையவை | மில் கி.கி | 24.5 | 21.7 | -6.2 | -11.7 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 139 | 139 | 0.6 | -0.1 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | '000 எக்டேயர்கள் | 113 | 107 | -6.1 | -5.9 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 221.00 | 288.00 | 3.5 | 30.3 |
| 2.5 சராசரி விலை | | | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 460.78 | 595.00 | 31.1 | 29.1 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 540.77 | 841.72 | 52.8 | 55.7 |
| 2.6 மீள்நடுகை (ஊ) | எக்டேயர்கள் | 1,522 | 1,264 | 55.9 | -16.9 |
| 2.7 புதிய பயிரிடுகை (ஊ) | எக்டேயர்கள் | 1,188 | 489 | 58.2 | -58.9 |
| 2.8 கூட்டப்பட்ட பெறுமதி (உ) | மொ.உ.உ.,இன் %மாக | 0.2 | 0.2 | 2.6 | 1.2 |
| **3. தெங்கு** | | | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 3,120 | 3,391 | 11.7 | 8.7 |
| - உலர்ந்த தேங்காய் துருவல் | காய்கள் மில் | 298 | 314 | 31.8 | 5.2 |
| - தேங்காய் எண்ணெய் | காய்கள் மில் | 211 | 445 | 340.6 | 110.7 |
| - ஏனையவை | காய்கள் மில் | 2,607 | 2,628 | 3.6 | 0.8 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 505 | 505 | 0.2 | 0.0 |
| 3.3 உற்பத்திச் செலவு | ரூபா/காய் | 26.96 | 27.21 | 23.6 | 0.9 |
| 3.4 சராசரி விலை | | | | | |
| - உற்பத்தியாளர் விலை | ரூபா/காய் | 71.88 | 74.86 | 17.7 | 4.1 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (எ) | ரூபா/காய் | 65.36 | 84.54 | 24.2 | 29.3 |
| 3.5 மீள்நடுகை/கீழ்பயிரிடுகை (ஏ) | எக்டேயர்கள் | 4,709 | 5,481 | -11.7 | 16.4 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 9,622 | 13,913 | 20.3 | 44.6 |
| 3.7 கூட்டப்பட்ட பெறுமதி (உ) | மொ.உ.உ.,இன் %மாக | 0.8 | 0.9 | 7.4 | 17.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபவீச்சு உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(ஏ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(ஐ) புதிதாக நடுகையிடப்பட்ட பரப்பானது ஒரு எக்டேயருக்கு 158 விதைகள் என்ற மாற்றல் வீதத்தில் தெங்குப் பயிர்ச்செய்கை சபையால் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகளின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது.

*மூலங்கள்:*
இலங்கைத் தேயிலைச் சபை
தேயிலை சிறுஉடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை
பெருந்தோட்ட அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை
கொழும்புத் தேயிலைத் தரகர்கள் சங்கம்
இலங்கை வர்த்தக சம்மேளனம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

திட்டங்களின் தொடரொன்று நடாத்தப்பட்டது. அதேவேளை, இறப்பர் துறையில் பெறுமதி சேர்ப்பை ஊக்குவிப்பதை நோக்காகக்கொண்டு, ஆண்டு காலப்பகுதியில், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களையும் அதேபோன்று இறப்பர் சிறுஉடமையாளர்களையும் இலக்குவைத்து இறப்பர் உற்பத்தி தயாரிப்புத் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதன்மூலம், உலகளாவிய பெறுமதிச் சங்கிலியில் உள்நாட்டு இறப்பர் உற்பத்தியாளர்களின் ஒருங்கிணைப்பு வலுப்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தெங்கு

**2021 மற்றும் 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக தெங்குத் துறையானது 2022இல் அதன் மிக உயர்ந்த வருடாந்த உற்பத்தியைப் பதிவுசெய்தது.** இதற்கமைய, 2022இல் காய் உற்பத்தியானது 3,391 மில்லியன் காய்களாக அதிகரித்து, 2021இல் பதிவுசெய்யப்பட்ட 11.7 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு மேலதிகமாக 8.7 சதவீத ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பை பதிவுசெய்தது. இவ்வுற்பத்தி அதிகரித்தமைக்கு பிரதானமாக தேங்காய் வளர்கின்ற பிரதேசங்களில் காணப்படும் உகந்த வளி வெப்பநிலையுடன் இணைந்து 2021இலிருந்து பெறப்பட்ட மழைவீழ்ச்சி பெருமளவில் துணையளித்தது. இத்தகைய சாதகமான தாக்கங்களானது 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் தெங்குப் பயிர்ச்செய்கை தொடர்பான இரசாயன வளமாக்கிகளை மட்டுப்படுத்தப்பட்ட விதத்தில் பிரயோகித்ததன் உடனடியான எதிர்மறைத் தாக்கத்தை எதிரீடு செய்தது. அதிகரித்த காய் உற்பத்தியுடன், தெங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளும் ஆண்டு காலப்பகுதியில் முன்னேற்றத்தை காட்டின. இதற்கமைய, துருவல் தேங்காய் உற்பத்தியானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 33,289 மெற்றிக் தொன்களிலிருந்து ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 5.2 சதவீதத்தால் 35,030 மெற்றிக் தொன்களாக அதிகரித்தது. தேங்காய் எண்ணெய் மற்றும் தாவர எண்ணெய் இரண்டினதும் இறக்குமதி மீதும் விதிக்கப்பட்ட தடைகளையும் எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான போதுமான காய்களின் கிடைப்பனவையும் பிரதிபலித்து 2022இல் தேங்காய் எண்ணெய் உற்பத்தியானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 59.4 சதவீதத்தால் 68,590 மெற்றிக் தொன்களாக குறிப்பிடத்தக்களவில் அதிகரித்துக் காணப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் தேங்காயப் பால்மா உற்பத்தியும் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 15.8 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளை, தேங்காய் களி மற்றும் தேங்காய் பால் உற்பத்திகளானது முறையே 12.5 சதவீத மற்றும் 0.9 சதவீத சுருக்கங்களைப் பதிவுசெய்தன. 2022இல் தெங்கு துறையில் ஏற்பட்ட முன்னேற்றமான செயலாற்றத்திற்கு மத்தியில், 2022இல் இரசாயன வளமாக்கியின் போதியளவற்ற பயன்படுத்துகையின் காலங்கடந்த விளைவானது அண்மைய எதிர்காலத்தில தெங்கு விளைச்சலை பாதிக்கக்கூடும். எவ்வாறாயினும், 2022ஆம் ஆண்டு முழுவதும் பெறப்பட்ட சாதகமான மழைப்பொழிவின் காலங்கடந்த விளைவானது போதியளவற்ற வளமாக்கியை பிரயோகப்படுத்துவதன் எதிர்மறைத் தாக்கங்களை எதிரீடு செய்யக்கூடும்.

2

**முன்னேற்றங்கண்ட தெங்கு உற்பத்திக்கு மத்தியில், தெங்கு மற்று தெங்கை அடிப்படையாகக்கொண்ட பொருட்களின் விலைகளானது 2022ஆம் ஆண்டு முழுவதும் அதிகரித்த மட்டத்தில் காணப்பட்டன.** தெங்கின் சராசரி சில்லறை விலையானது 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 8.9 சதவீதத்தால் காயொன்றிற்கு ரூ.91.36 ஆக அதிகரித்து வரலாற்று காணாத தேங்காய் விலைகளை அடைந்ததுடன் 2022இன் பிற்பகுதியில் ரூ.100.00ஐ விஞ்சிக் காணப்பட்டது. கொழும்பு தெங்கு ஏலத்தில் தேங்காயின் சராசரி ஏல விலையானது 2021இன் காயொன்றின் விலையான ரூ.56.51இலிருந்து 6.4 சதவீத அதிகரிப்பொன்றாக 2022இல் காயொன்றிற்கு ரூ.60.14 ஆகப் பதிவுசெய்யப்பட்டது. ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டுச் சந்தைகளில் காணப்படும் துருவிய தேங்காய் விலையும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.3 சதவீதத்தால் கிலோகிராமொன்றிற்கு ரூ.538.75 ஆக சிறிதளவில் அதிகரித்தது. 2021இல் பதிவுசெய்யப்பட்ட 29.2 சதவீத அதிகரிப்புடன் தேங்காய் எண்ணெயின் சராசரி சில்லறை விலையானது 2022இல் 750 மில்லிலீற்றர் போத்தலொன்றுக்கு ரூ.520.19 ஆக 17.3 சதவீதத்தால் அதிகரித்தது. மேலும், 2022இல் துருவல் தேங்காய், தேங்காய் எண்ணெய், மற்றும் கொப்பரா என்பவற்றின் ஏற்றுமதி அளவு குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து அதிகரித்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்தான சாதகமான ஆதரவைத் தோற்றுவித்தது.

**தெங்குத் துறையை முன்னேற்றுவதை நோக்காக்கொண்ட பல்வேறு முன்முயற்சிகளின் நடைமுறைப்படுத்தலுடன் தெங்குத் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதை நோக்கிய அரசாங்கத்தின் முயற்சிகளானது 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன.** இதற்கமைய தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையானது தற்போதுள்ள தெங்கு நிலங்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு அதிகளவில் விளைச்சலை ஈட்டுகின்ற தென்னங்கன்றுகளை வழங்குவதற்கான பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்தது. ஆண்டு காலப்பகுதியில், அதிகளவான விளைச்சலை ஈட்டுகின்ற ‘கப்சுவாய’ கலப்பு தென்னங்கன்றுகளை உருவாக்குதற்கு தேங்காய் விதைக்கான புதிய தோட்டத்தை உருவாக்குகின்ற அதேவேளை, ‘கப்ருவான’ கலப்பு வகையை உருவாக்குவதற்கும் கினியம விதைத் தோட்டத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புதவற்கும் கை மூலமான மகரந்தச் சேர்க்கை நிகழ்ச்சித்

திட்டமானது சிலாபம் பிளான்டேசன் லிமிடெட்டுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. உதவுதொகை வீதத்தில் தெங்கு விதைகள் வழங்கல், தென்னை நிலங்கள் புனரமைப்பதற்கான உதவுதொகைகள், மீள்நடுகை, கீழ் பயிரிடுகை, மற்றும் புதிய பயிரிடுகை உதவுதொகைகள், உள்ளடங்கலாக பல்வேறு உதவுதொகை திட்டங்கள் 2022இல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. 2022இல் வெள்ளைப் பூச்சியின் அதிகரித்த தீவிரத்தன்மைய காணப்பட்டமையால் தங்கொட்டுவ, நாத்தாண்டிய மற்றும் வென்னப்புவ உள்ளடங்கலான பல்வேறுபட்ட பிரதேசங்களில் வெள்ளைப் பூச்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களை கட்டுப்படுத்துவதற்கான முன்னோடிக் கருத்திட்டமொன்று நடாத்தப்பட்ட அதேவேளை, இரசாயனங்களையும் உயிரியல் வளமாக்கிகளையும் பயன்படுத்தி வெள்ளைப் பூச்சி நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விதந்துரைப்புக்களும் வழங்கப்பட்டன. மேலும், தேங்காயைச் செயன்முறைப்படுத்தும் தொழிற்சாலைகளின் இடையூறற்ற தொழிற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு போதுமான எரிபொருளை வழங்குவதன் மூலம் அத்தகைய தொழிற்சாலைகளில் எரிபொருள் பற்றாக்குறையின் தாக்கத்தை தணிப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, தெங்குக் கைத்தொழிலில் பெறுமதி சேர்ப்புக்களை ஊக்குவிக்கக்கூடியதும் நாட்டின் தெங்குக் கைத்தொழிலுக்காக உலகளாவிய சந்தையில் அதிகளவான வாய்ப்புக்களை உருவாக்கக்கூடியதுமான ‘சிலோன் கொக்கநட்’ எனும் வர்த்தக நாமம் உலகளாவியா ரீதியில் பிரபல்யம் அடைவதை விரிவடைவடையச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

## சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

**உள்நாட்டு வழங்கல் சங்கிலிகள் மற்றும் வளமாக்கிகளின் கிடைப்பனவு என்பவற்றில் காணப்படும் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் 2022இல் தொடர்ந்தும் சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியின் வளர்ச்சி உத்வேகம் தொடர்ச்சியடைந்தது.** ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளிற்கமைவாக, சிறு ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 143,165 மெற்றிக் தொன்களிலிருந்து ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 186,962 மெற்றிக் தொன்களாக 30.6 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது. அதிகரித்த உலகளாவிய கேள்விக்கு மத்தியில் சென்மதி நிலுவை அழுத்தங்களுக்கும் உள்நாட்டு ரீதியில் அதிகரித்த விலைகளை முறியடிப்பதற்கும் மத்தியில் இறக்குமதிச் செலவினத்தை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறையொன்றாக பல்வேறு சிறு ஏற்றுமதி பயிர்களை இறக்குமதி செய்தல் தொடர்பான தடைகளை பேணுவதற்கான அரசாங்கத்தின் தீர்மானமானது இத்தகைய பயிர்களை தீவிரமாக பயிரிடுவதற்கு வேளாண்மையாளர்களை தூண்டியதுடன் துறையின் செயலாற்றத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை தோற்றுவித்தது. 2022இல் கருவா, கராம்பு, ஏலக்காய், கோப்பி, கொக்கோ, சாதிக்காய், பாக்கு மற்றும் வெற்றிலை இலைகள் என்பவற்றின் உற்பத்தியானது வளர்ச்சிகளை எடுத்துக்காட்டிய அதேவேளை, மிளகு உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி வேளாண்மை பயிர்த் துறையின் மொத்த ஏற்றுமதி அளவானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 7.0 சதவீத சுருக்கமொன்றை பதிவுசெய்த அதேவேளை, ரூபா நியதிகளில் ஏற்றுமதி வருவாய்களானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 44.8 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து காணப்பட்டது. 2022இல் கறுவா ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 50.1 சதவீத கணிசமான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களின் பாரியளவான வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

**ஆண்டு காலப்பகுதியில், சிறு ஏற்றுமதி வேளாண்மைத் துறையை வலுப்படுத்துவதற்கு அரச அதிகாரசபைகளால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இதற்கமைய, ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவிலிருந்து சிலோன் கறுவாவிற்கு புவிசார் குறியீட்டுச் சான்றுபடுத்தலை பெற்றுக்கொள்வதற்கு 2022இல் பல்வேறு பொது மற்றும் தனியார் துறை ஆர்வலர்களின் ஆதரவுடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபை மூலமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இது இலங்கைக்கு தனித்துவமாக கூறப்படும் உற்பத்திப் பொருளின் தேர்ச்சி மற்றும் தனித்துவமான பண்புகளின் உலகளாவிய அங்கீகாரத்தை மேம்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. அநுராதபுரம், பொலநறுவை, அம்பாறை, வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மரபுசாரா பிரதேசங்களில் ஏற்றுமதி வேளாண்மைப் பயிர் நடுகையை விரிவுபடுத்துவதற்கு ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் நடாத்தியது. பயிர்செய்கை நிலப்பரப்பை விரிவுபடுத்தும் நோக்குடன் இத்தகைய அடையாளங்காணப்பட்ட பிரதேசங்களில் மிளகு, பாக்கு, இஞ்சி, மஞ்சள் மற்றும் வெற்றிலை போன்ற சிறு ஏற்றுமதி பயிர்களை அறிமுகப்படுத்தும் நோக்கில் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது. சேதனப் பயிர்ச்செய்கைளை அறிமுகப்படுத்தி பிரபல்யப்படுத்தல், சிறந்த வேளாண்மை முறைகள், சிறந்த உற்பத்தி முறைகள் என்பவையும் உற்பத்தித் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டன.

## ஏனைய களப் பயிர்கள்

**2021இல் அபரிமிதமான அறுவடையைத் தொடர்ந்து, வளமாக்கிகளினதும் ஏனைய வேளாண்மை இரசாயனங்களினதும் உள்நாட்டுப் பற்றாக்குறைகள் மற்றும் வழங்கல் சங்கிலி இடையூறுகள் என்பவற்றால் பெருமளவில் தூண்டப்பட்டு ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியானது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றை பதிவுசெய்தது.** 2022ஆம்

2

ஆண்டு காலப்பகுதியில், வளமாக்கிகளினதும் வேளாண்மை இரசாயனங்களினதும் பற்றாக்குறைக்கு மத்தியில் ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியானது இறக்குமதிகளூடாக பெருமளவில் தணிக்கப்பட்டு நாட்டின் இறக்குமதிச் செலவினத்தை அதிகரித்தது. இதற்கமைய, 2022இல் ஏனைய களப் பயிர்களின் ஒட்டுமொத்த உற்பத்தியானது 2021/2022 பெரும்போக காலப்பகுதியில் உற்பத்தியில் ஏற்பட்ட 37.8 சதவீதத்தினதும் 2022 சிறுபோக காலப்பகுதியின் 36.8 சதவீத வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாக ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 37.5 சதவீதத்தால் 526,803 மெற்றிக் தொன்களாக குறைவடைந்தது. வேளாண்மை உள்ளீடுகளின் பற்றாக்குறைகளினதும் அதிக செலவினதும் காரணமாக சோள உற்பத்தியானது 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 259,040 மெற்றிக் தொன்களாக 45.2 சதவீதத்தால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுச் சோள உற்பத்தியின் வீழ்ச்சியுடன் விலங்குத் தீவன கைத்தொழிலுக்கான கேள்வியை நிவர்த்தி செய்வதற்கு சோள இறக்குமதியானது 2021இன் 22,724 மெற்றிக்தொன்களிலிருந்து 2022இல் 190,686 மெற்றிக் தொன்களாக அதிகரித்தது. 2022இல் உருளைக்கிழங்கு உற்பத்தியானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 47,614 மெற்றிக் தொன்களுக்கு 37.3 சதவீத வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையீல் உருளைக் கிழங்கு இறக்குமதிகள் 31.8 சதவீதத்தால் அதிகரித்து காணப்பட்டது. மேலும், பெரிய வெங்காய உற்பத்தியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 73.0 சதவீதத்தால் 17,799 மெற்றிக் தொன்களுக்கு கணிசமாக குறைவடைந்ததுடன் 2022இல் பெரிய வெங்காயங்களின் இறக்குமதியானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.5 சதவீதத்தால் 263,781 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. அத்துடன், குரக்கன், கௌபி, மற்றும் சோயா அவரை போன்ற ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தியானது விரிவுகளைப் பதிவுசெய்த அதேவேளை, சிவப்பு வெங்காயம், பாசிப்பயறு, உழுந்து, நிலக்கடலை, எள்ளு மற்றும் பச்சை மிளகாய்கள் என்பவற்றின் உற்பத்தியானது வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தது. அதேவேளை, அரசாங்கமானது ஏனைய களப் பயிர்களின் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் மேம்படுத்தப்பட்ட உணவு பாதுகாப்பிற்கான வழியை வகுப்பதற்குமான தமது முயற்சிகளை மேற்கொண்டது. இதற்கமைய, வேளாண்மைத் திணைக்களத்தின் கீழ் தொழிற்படுகின்ற களப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகமானது ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு வழிமுறைகளை நிறுவியது. இத்தகைய வழிமுறைகளானது இனவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களூடாக மிளகாய், வெங்காயம், குரக்கன், கௌபி, உழுந்து, மற்றும் பாசிப்பயறு போன்ற ஏனைய களப்பயிர்களின் புதிய வகைகளை உருவாக்குதல், அனைத்து விதந்துரைக்கப்பட்ட பயிர் வகைகளையும் பேணுதல், விதந்துரைக்கப்பட்ட பயிர்களின் விதை உற்பத்தி, ஏனைய களப் பயிர்களுக்கான தொழில்நுட்ப விதந்துரைப்புக்களை வழங்குதல், மண் பரிசோதனைப் பணிகள் மற்றும் தொழில்நுட்பத்தை பரப்புதல் என்பவற்றை உள்ளடக்குகின்றன. எவ்வாறாயினும், வளமாக்கிகள் மற்றும் பூச்சிகொல்லிகள் போன்ற வேளாண்மை உள்ளீடுகளின் போதுமான வழங்கலொன்றை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளை உள்ளடக்குகின்ற தேசிய மட்ட ஏனைய களப் பயிர் உற்பத்தித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அனைத்து ஏனைய களப் பயிர்களினதும் நிரம்பலை மேம்படுத்துவதற்கும், சிறந்த தரமுடைய விதை உற்பத்தி, மற்றும் சிறந்த மண் மற்றும் பயிர் முகாமைத்துவ நடத்தைகள் என்பவற்றை ஊக்குவிக்கின்ற அதேவேளை உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்ய சாத்தியமாகவுள்ள ஏனைய களப் பயிர்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களை குறைப்பதற்கு வழங்கல் சங்கிலி வழிகளை வலுப்படுத்துவதற்கும் போதுமான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## காய்கறிகள்

**உள்நாட்டு வளமாக்கிகள் மற்றும் வேளாண்மை இரசாயனப் பற்றாக்குறைகள், வழங்கல் சங்கிலியின் பகிர்ந்தளிப்பு மற்றும் அதிகரித்த உற்பத்திச் செலவுகள் என்பவற்றின் இணைந்த தாக்கத்தின் காரணமாக 2022இல் காய்கறி வழங்கல் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.** காய்கறிகளின் மொத்த உற்பத்தியானது, 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1,669,515 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் 1,588,256 மெற்றிக் தொன்களுக்கு 4.9 சதவீதத்தினால் குறைவடைந்நது. 2021/2022 பெரும்போக காலப்பகுதியில், முன்னைய பெரும்போகத்தை விட 6.5 சதவீதத்தினால் காய்கறிகள் உற்பத்திகள் 815,482 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்துள்ளதுடன் 2022 சிறுபோக உற்பத்தியும் 2021இன் தொடர்புடைய பருவகாலத்துடன் ஒப்பிடுகையில் 772,773 மெற்றிக் தொன்களுக்கு ஏறத்தாழ 3.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக குறைவான உற்பத்தி மற்றும் இடைநிலை வழங்கல் சங்கிலி பகிர்ந்தளிப்பு என்பவற்றின் காரணமாக 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் காய்கறிகளின் விலைகள் தொடர்ந்தும் அதிகரித்துக் காணப்பட்டன. பருவகாலமல்லாத பயிர்ச்செய்கை மற்றும் தீவிரமடைந்த எரிபொருள் பற்றாக்குறை ஆகியவற்றின் காரணமாக 2022ஆம் ஆண்டு மே மற்றும் யூன் மாதங்களில காய்கறி விலைகள் மேலும் அதிகரித்து காணப்பட்டன. 2022 ஆம் ஆண்டின் ஓகத்து மற்றும் செத்தெம்பர் ஆகிய காலப்பகுதியில் வேளாண்மை உற்பத்திகளின் போக்குவரத்திற்கான எரிபொருள் வழங்கலின் காரணமாகவும் சந்தைக்கு கொண்டு வரப்பட்ட பருவகால அறுவடைகளின் காரணமாகவும் 2022 யூலையிலிருந்து உள்நாட்டுச் சந்தையில் காய்கறிவிலைகளில் மிதமான தன்மையொன்றினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், அதிக மழைவீழ்ச்சி, சிக்கல்மிக்க சேகரிப்பு

2

நிலை மற்றும் போக்குவரத்து வசதி ஆகியவை காரணமாக 2022 இன் பிற்பகுதியை நோக்கி காய்கறிகளின் விலைகள் பரந்தளவில் அதிகரித்தன. அதேவேளை, ஐ.அ.டொலர் 26.7 மில்லியன் பெறுமதி கொண்ட 15,835 மெற்றிக் தொன் காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், நீடித்து நிலைபெறத்தக்க விதத்தில் உள்நாட்டு காய்கறிகளின் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அரச அதிகாரசபைகளினால் பல்வேறான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தவகையில், புதிய காய்கறி வகைகளின் அபிவிருத்தி, பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட காய்கறி வகைகளின் அறிமுகம், காய்கறி உற்பத்திற்கான மண்வள முகாமைத்துவம், காய்கறி உற்பத்தியில் பூச்சி மற்றும் நோய்களை முகாமைத்துவம் செய்வதற்கான தொழிநுட்ப அபிவிருத்திகள் மற்றும் துறையின் உற்பத்தி மற்றும் வினைத்திறனை அதிகரித்தல் ஆகிய நோக்கத்துடன் காய்கறி பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து முகாமைத்துவ நிகழ்ச்சிகள் ஆகியவற்றை ஊக்குவித்தல் உள்ளடங்கலாக ஆண்டு காலப்பகுதியில் வேளாண்மைத் திணைக்களத்தின் கீழ் தொழிற்பட்டு வருகின்ற தோட்டக்கலை பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் பல்வேறான வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது.

### பழங்கள்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளிற்கமைவாக, 2022ஆம் ஆண்டு காலப்பகுதியில் பழ உற்பத்தியானது கலப்புச் செயலாற்றமொன்றைப் பதிவுசெய்தது.** 2022இல், பழங்கள் உற்பத்தியானது முன்னைய ஆண்டை விட தோடம்பழம், எலுமிச்சை, றம்புட்டான், ஆணைக்கொய்யா மற்றும் முலாம்பழம் என்பவற்றின் உற்பத்தியில் கணிசமான சுருக்கத்துடன் 26.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த அதேவேளை மாம்பழம், பப்பாளி, வாழைப்பழம் மற்றும் அன்னாசி என்பன உற்பத்தியில் அதிகரித்து காணப்பட்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில், ஐ.அ.டொலர் 37.6 மில்லியன் பெறுமதியைக் கொண்ட வாழைப்பழம் மற்றும் பப்பாளி உள்ளடங்கலான 41,526 மெற்றிக் தொன்களைக் கொண்ட பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் ஐ.அ.டொலர் 42.2 மில்லியன் பெறுமதியைக் கொண்ட 32,591 மெற்றிக் தொன்கள் பழங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இறக்குமதி செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பல பழங்களை இறக்குமதி செய்வதன் மீது அரசாங்கம் விதித்துள்ள வரையறைகள் காரணமாக உள்நாட்டு ரீதியில் விளையும் பழங்களுக்கான தேவை அதிகரித்துள்ள போதிலும், உள்நாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட இயலாற்றல், வழங்கல் சங்கிலிச் சிக்கல்கள் ஆகியவை உள்நாட்டுப் பழத் துறையின் சாத்தியமான விரிவாக்கத்திற்கு இடையூறாக காணப்பட்டன. உள்நாட்டு பழ உற்பத்தியாளர்களின் இயலாற்றலையும் அதேபோன்று உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளுக்கு வழங்கப்படும் பழங்களின் தரத்தையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதின் முக்கியத்துவமானது வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு நியதிகளுக்கமைவாகவும் அதேபோன்று குடித்தொகையின் ஊட்டச்சத்து நலனோம்புகையின் நியதிகளுக்கமைவாகவும் தேசிய பொருளாதாரத்திற்கு பழத்துறையின் கணிசமான பங்களிப்பின் அவசியம் மீள்வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக வேளாண்மை உள்ளீடுகள் தொடர்பிலும் அறுவடை தொடர்பிலும் சிறந்த வேளாண்மை முறைகளை ஊக்குவித்தல், உற்பத்தியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்குமிடையில் நேரடி இணைப்புக்களை உருவாக்குதல், ஒப்பந்த வேளாண்மை முறைமையை உருவாக்குதல், துறையில் அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல், பழத்தை பாதுக்காப்பதற்கும், சேகரிப்பதற்கும் பெறுமதி சேர்ப்பதற்குமாக முன்னேற்றப்பட்ட உட்கட்டமைப்பை இயலுமைப்படுத்தல் என்பன துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்தவதற்கு அத்தியாவசியமாக காணப்பட்டன. இதற்கமைய, உள்நாட்டு பழ உற்பத்தித் துறையை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆண்டு காலப்பகுதியில், வேளாண்மைத் திணைக்களத்தின் கீழ் தொழிற்படுகின்ற பழ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகமானது பழநடுகை தொடர்பிலும் பழநடுகையின் விருத்தி தொடர்பிலும் ஆலோசனைகளில் ஈடுபட்டதுடன் பழக்கன்று நடுகைக்காக உற்பத்தி தொழில்நுட்பங்கள் தொடர்பில் ஆலோசனை பணிகளை வழங்குதல், பூச்சி மற்றும் நோய் என்பவற்றை பரிசோதித்தல், பரிந்துரைக்கப்பட்ட பழ வகைகளின் சிறந்த தரமான பயிரிடுகை பொருட்களை வழங்குதல் என்பவற்றுடன் பல்வேறு ஆய்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நடாத்தியது. அதேவேளை, வேளாண்மைத் திணைக்களத்தின் இயற்கை வள முகாமைத்துவ மையமானது ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் மாம்பழம், வாழைப்பழம், மாதுளை, அன்னாசி, றம்புட்டான் மற்றும் முள்நாறிப்பழம் உள்ளடங்கலாக ஆறு பழக் கன்றுகளை பயிரிடுவதின் சாத்தியமான பிரதேசங்களை மதிப்பீடு செய்து விவரணையாக்க நடவடிக்கைகளை நிறைவுசெய்தது.

### சீனி

**உள்நாட்டு வளமாக்கிப் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் சீனிக் கைத்தொழில் பல்வேறு பின்னடைவுகளை அனுபவித்ததனால், 2019இலிருந்து பதிவுசெய்யப்பட்ட சீனி உற்பத்தியின் மேல்நோக்கிய போக்கானது 2022இல் தடைப்படுத்தப்பட்டது.** மொத்த சீனி உற்பத்தியானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 80,555 மெற்றிக்தொன்களுடன் ஒப்பிடுகையில், 2022இல் 78,857 மெற்றிக்தொன்களுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.1 சதவீத சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. செவனகல மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலைகளின் உற்பத்தியானது ஆய்விற்குரிய காலப்பகுதியில் முறையே 29.0 சதவீதத்தினாலும் 20.6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து

மொத்த சீனி உற்பத்தியின் வருடாந்த வீழ்ச்சிக்கு பங்களித்தது. எனினும், 2022 காலப்பகுதியில் கல் ஓயா மற்றும் எத்திமலை சீனித்தொழிற்சாலைகளின் சீனி உற்பத்தியானது முறையே 27.4 சதவீதத்தினாலும் 36.2 சதவீதத்தினாலும் ஆண்டிற்கு ஆண்டு விரிவடைதலொன்றைப் பதிவுசெய்தது. அதேவேளை, கல் ஓயா, செவனகல, பெல்வத்த மற்றும் எத்திமல ஆகியவற்றின் சீனி உற்பத்திகள் முறையே, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 36.2 சதவீதத்திற்கும், 16.0 சதவீதத்திற்கும், 30.6 சதவீதத்திற்கும் அத்துடன் 17.2 சதவீதத்திற்கும் வகைகூறின. ஆண்டு காலப்பகுதியில், நான்கு தொழிற்சாலைகளினால் முகாமை செய்யப்படும் கரும்பு பயிர்ச்செய்கையின் (முளைவிட்டவை) மொத்த அளவு 2.1 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டியது. அதேவேளை, கரும்பு பயிர்ச்செய்கைக்கான கடுமையான ஊட்டச்சத்துப் பற்றாக்குறையைப் பிரதிபலித்து நான்கு தொழிற்சாலைகளின் சராசரி விளைச்சலானது 11.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. இதற்கமைவாக, சராசரி விளைச்சல் 2021இல் பதிவுசெய்யப்பட்ட ஹெக்டேயர் ஒன்றுக்கு 67.2 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில், 2022இல் ஹெக்டேயர் ஒன்றுக்கு 59.7 மெற்றிதொன்களாகக் காணப்பட்டது. சீனி ஆராய்ச்சி நிறுவகத்தின் படி, 2022 இறுதியளவில் மொத்த உள்நாட்டுச் சீனித் தேவைப்பாட்டின் ஏறத்தாழ 15.0 சதவீதம் மாத்திரம் உள்நாட்டு உற்பத்தியினால் பூர்த்தி செய்யப்பட்டதுடன் எஞ்சியுள்ள கேள்வி இறக்குமதிகளினூடாகப் பூர்த்திசெய்யப்பட்டது.

**உள்நாட்டு சீனித் தொழிற்சாலையை வலுப்படுத்துவதை இலக்காகக்கொண்டும் உள்நாட்டு சீனித் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இறக்குமதிகள் மீது மிகையான தங்கியிருத்தலை குறைக்கும் பொருட்டும் அரசாங்கம் பல்வேறு முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.** உள்நாட்டு உற்பத்திக்கான பாரியளவான சாத்தியப்பாட்டையும் உள்நாட்டு தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு உள்நாட்டு சீனிப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு சீனி ஆராய்ச்சி நிறுவகமானது உள்நாட்டு சீனித் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்ட அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. உள்நாட்டு சீனி உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முதன்மை முன்னுரிமையாகப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களை விரிவுபடுத்தி தொழிற்சாலை இயலாற்றலை மேம்படுத்துவதற்கான தேவைப்பாட்டை கருத்திற்கொண்டு, 2022 ஆரம்பப்பகுதியில் லங்கா சுகர் கம்பனி (பிறைவட்) லிமிடெட்டின் துணை நிறுவனமாக வெலி ஓயா சீனித் தொழிற்சாலை என்ற புதிய சீனித் தொழிற்சாலையை தாபிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. அதேவேளை, கந்தளை சீனித் தொழிற்சாலையை மீளத் தாபித்தலுடன் தொடர்புடைய முன்னேற்றமானது சட்ட சிக்கல்கள் ஏற்பட்டதன் காரணமாக ஆண்டு காலப்பகுதியில் மிதமடைந்து காணப்பட்டது. கிளிநொச்சியில் வண்ணார்க்குளத்தில் கருப்பட்டி உற்பத்திக்காக விசேடமாக வெளியிடப்பட்ட புதிய வகையுடன் கூடிய நாற்றுக் கரும்புப் பெருக்க நாற்றுமேடையொன்றை தாபிக்கும் பணியும் 2022 காலப்பகுதியில் செயற்பாட்டிலிருந்தது. நிலைபெறத்தக்க நாற்றுக்கரும்பு உற்பத்தி மற்றும் வழங்கல் சங்கிலியைத் தாபிப்பதற்கான நாற்றுக்கரும்பு கொள்கையை உருவாக்குவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள அதேவேளை உள்நாட்டு சீனித் தொழிற்சாலை கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் கொள்கை வழிகாட்டல்களை எடுத்துரைப்பதற்கு விசேட பணிக்குழுவொன்றும் தாபிக்கப்பட்டுள்ளது.

2

## விலங்கு வளர்ப்பு

**2022இல் பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட சவால்களினால் விலங்கு வளர்ப்புத் துறையின் செயலாற்றம் தடைப்பட்டது.** ஆண்டு காலப்பகுதியில், விலங்குத் தீவினங்களின் மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதி, மேய்ச்சல் தரை மற்றும் தீவனப் பயிர்ச்செய்கைக்காக தேவைப்படும் இரசாயன வளமாக்கிகள் பற்றாக்குறை, பொருளாதாரத்தின் கடுமையான வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மை பற்றாக்குறையினால் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகளில் காணப்பட்ட சிக்கல்கள் என்பன காரணமாக ஏற்பட்ட விலங்குத் தீவனங்களின் பற்றாக்குறையினாலும் உயர்ந்தளவான செலவினாலும் ஒட்டுமொத்த பாற்பண்ணைப் பெறுமதிச் சங்கிலி கடுமையாக பாதிக்கப்பட்டது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின் பிரகாரம், மொத்தத் தேசிய பால் உற்பத்தியானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2021இல் பதிவுசெய்யப்பட்ட 513 மில்லியன் லீற்றர்களுடன் ஒப்பிடுகையில் 2022இல் 506 மில்லியன் லீற்றர்களுக்கு 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2022இல் பசும்பால் உற்பத்தி ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 419 மில்லியன் லீற்றர்களுக்கு 1.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை எருமைப்பால் உற்பத்தி ஆண்டிற்கு அண்டு அடிப்படையில் 0.8 சதவீதத்தினால் 87 மில்லியன் லீற்றர்களுக்கு சிறிதளவான சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. அதேவேளை, பசும்பால் உற்பத்தியின் சராசரிச் செலவு 2021இல் பதிவுசெய்யப்பட்ட லீற்றரொன்றுக்கு ரூ.69.30இலிருந்து, 2022இல் லீற்றரொன்றுக்கு ரூ.80.50இற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. இருப்பினும், இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு பால் மாவின் பற்றாக்குறையுடன் இணைந்து திரவப்பாலுக்கான அதிகரிக்கப்பட்ட கேள்வி மற்றும் பால்மா விலையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உயர்வின் காரணமாக, ஆண்டு காலப்பகுதியில் முறைசார் மற்றும் முறைசாரா பால் சந்தைகள் இரண்டிலும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட திரவப்பாலுக்கான உயர்ந்தளவான விலையினை பண்ணையாளர்கள் பெற்றுக் கொண்டனர். இதற்கமைவாக, பசும்பாலின் லீற்றரொன்றிற்கான சராசரிப் பண்ணை விலையானது 2021இல் ரூ.98.00இலிருந்து 2022இல் ரூ.115.00இற்கு 17.3 சதவீதத்தினால் அதிகரித்தது. 2022 ஆண்டு காலப்பகுதியில், நெல் மற்றும் சோளத்தின்

2

உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் வெளிநாட்டு நாணய திரவத்தன்மை சிக்கல்களுக்கு மத்தியில் தீவனப் பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியதன் காரணமாக, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தீவனப் பொருட்களின் குறைப்புக்களைத் தொடர்ந்து கோழி வளர்ப்புக்கான போதிய தீவனப் பொருட்கள் தொடர்பான பிரச்சனைகளுடன் கோழி வளர்ப்புத் துறை சிக்கல்களைத் தொடர்ந்தும் எதிர்கொண்டது. இதன்விளைவாக, முட்டை உற்பத்தியானது 2021இல் உற்பத்தி செய்யப்பட்ட 1,954 மில்லியன் முட்டைகளுடன் ஒப்பிடுகையில், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2022இல் 1,849 மில்லியன் முட்டைகளுக்கு 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் தரவுகளின் படி, முட்டைக்கான உற்பத்திச் செலவு 2021இல் ரூ.18.07இலிருந்து 2022இல் ரூ.38.10இற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து காணப்பட்டது. இதற்கிடையில், கோழி இறைச்சி உற்பத்தியானது 2021இல் 236,790 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில், 2022இல் 228,130 மெற்றிக் தொன்களுக்கு 3.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, கோழி இறைச்சியின் உற்பத்திச் செலவு, 2021இன் கிலோகிராமொன்றுக்கு ரூ.434.19இலிருந்து 2022 காலப்பகுதியில் கிலோகிராமொன்றுக்கு ரூ.965.66இற்கு அதிகரித்தது. 2022இல், முட்டைகள் மற்றும் கோழி இறைச்சி மீது அரசாங்கம் விலைக் கட்டுப்பாடுகளை விதித்தபோதிலும், குறிப்பாக முட்டை வழங்கலில் ஏற்பட்ட கடுமையான பற்றாக்குறைகளும், இதன்விளைவாக ஏற்பட்ட இருப்புக்களின் பதுக்கல்களும் ஆண்டுமுழுவதும் முட்டை விலையை உயர்த்துவதற்கு ஏதுவாக அமைந்தது. மேலும், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஆட்டிறைச்சியின் உற்பத்தி 9.2 சதவீதத்தினால் 2,730 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்த அதேவேளை, 2022இல் பன்றியிறைச்சியினதும் மாட்டிறைச்சியினதும் உற்பத்திகள் முறையே 5.3 சதவீதத்தினாலும் 21.4 சதவீதத்தினாலும் முறையே 9,300 மெற்றிக் தொன்களுக்கும் 21,890 மெற்றிக் தொன்களுக்கும் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 2.5
கால்நடைத்துறை புள்ளிவிபரங்கள்

| துணைத்துறை | 2021 (அ) | 2022 (ஆ) | மாற்றம் (%) 2020/21 (அ) | மாற்றம் (%) 2021/22 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. மொத்த மந்தைகள் (எண்ணிக்கை) (மில்) | 1.5 | 1.5 | 2.6 | -0.8 |
| கறவைப் பசுக்கள் | 1.1 | 1.1 | 2.5 | -0.3 |
| எருமைகள் | 0.3 | 0.3 | 3.2 | -2.5 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 513.3 | 506.4 | 4.4 | -1.3 |
| பசும்பால் | 425.4 | 419.2 | 2.8 | -1.5 |
| எருமைப்பால் | 87.9 | 87.3 | 12.9 | -0.8 |
| 3. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 98.00 | 115.00 | 19.5 | 17.3 |
| 4. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1,953.7 | 1,848.6 | 4.5 | -5.4 |
| 5. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 236.8 | 228.1 | 9.5 | -3.7 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

**விலங்குவளர்ப்பு தொழிற்துறை எதிர்கொண்ட சமகால சவால்களைக் கருத்திற்கொண்டு, துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் 2022 ஆண்டு முழுவதும் தொடர்ச்சியடைந்தன.** அண்மைய ஆண்டுகளில் முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியில் இலங்கை ஏறத்தாழ தன்னிறைவு கொண்டதாக காணப்பட்டதனால், உள்நாட்டு நுகர்வுத் தேவைப்பாடுகள் பெரும்பாலும் உள்நாட்டு உற்பத்தியின் மூலம் பூர்த்திசெய்யப்பட்ட அதேவேளை, ஏற்றுமதிச் சந்தைக்கு நம்பிக்கைக்குரிய கைத்தொழில் துறையொன்றாக மேம்பட்டுள்ளது. எவ்வாறெனினும், தீவனப் பொருட்களின் கிடைப்பனவின்மை மற்றும் உயர்த்தப்பட்ட செலவு என்பன உற்பத்தி கட்டுப்பாடுகளைத் தீவிரப்படுத்தி, இவ்விலங்குப் புரதங்களின் வழங்கல் குறைப்பாடுகளுக்கு வழிவகுத்தது. இப்பின்னணியில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து, சோளம் மற்றும் விலங்குத் தீவன உற்பத்திக்கான ஏனைய பொருத்தமான தானியங்களை இறக்குமதி செய்வதற்கு பல்வேறு வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் நாட்டின் வெளிநாட்டு கணக்குகளிலுள்ள சிரமங்களைக் குறைக்கும் நோக்கில் உள்நாட்டு விலங்கு வளர்ப்பு உற்பத்தித் துறையும் ஊக்குவிக்கப்பட்டது. மேலும், இலங்கையில் தற்போதுள்ள பசுக்களின் மரபணு ஆற்றலை மேம்படுத்துவதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான விலங்கு வளர்ப்பு (பாற்பண்ணை) இனப்பெருக்க செயற்றிட்டம், மருத்துவ மற்றும் உப மருத்துவ முலையழற்சிகளைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அனைத்தையுமுள்ளடக்கிய முலையழற்சி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம், மற்றும் பாதம் மற்றும் வாய் சம்பந்தப்பட்ட நோய், இரத்தக்கசிவு செப்டிசீமியா, பிளக்குவாட்டர் தொற்றுநோய் மற்றும் விலங்குகளிலிருந்து மனிதருக்கு பரவும் பற்றீரியா (புருசெல்லா) நோய்களுக்கு எதிரான பண்ணை விலங்குகளுக்கான தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக பல்வேறு செயற்றிட்டங்களை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் முன்னெடுத்தது. மேலும், ஐக்கிய அமெரிக்காவின் வேளாண்மைத் திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி உதவியுடன் பாற்பண்ணை தயாரிப்பாளர்களின் உற்பத்தித்திறனையும் அவர்களின் உற்பத்திகளின் தரத்தையும் மேம்படுத்துவதற்கான சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்துவதை இலக்காகக் கொண்ட சந்தை சார்ந்த பாற்பண்ணை செயற்றிட்டமும் செயற்பாட்டிலிருந்தது.

## மீன்பிடி

**பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியில் 2022 காலப்பகுதியில் மீன்பிடித் துறையானது பின்னடைவொன்றை அனுபவித்தது.** குறிப்பாக கடல் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக, உள்நாட்டு எரிபொருள் பற்றாக்குறையினால் மீன்பிடி நடவடிக்கைகள் மற்றும் வழங்கல் சங்கிலிகள் தொடர்பில் ஏற்பட்ட இடையூறுகளினால்

அட்டவணை 2.6
மீன் உற்பத்தி

'000 மெற்றித்தொன்கள்

| துணைத்துறை | 2021 | 2022 (அ) | மாற்றம் (%) 2020/21 | மாற்றம் (%) 2021/22 (அ) |
|---|---|---|---|---|
| கடல் | 332 | 281 | 1.5 | -15.4 |
| கரையோரம் மற்றும் களப்பு | 178 | 149 | -2.4 | -16.2 |
| கடற்கரையிலிருந்து தொலைவில் | 153 | 131 | 6.3 | -14.5 |
| நன்னீர் மீன்பிடி | 104 | 117 | 2.4 | 11.9 |
| பிடிப்பு | 81 | 95 | -4.3 | 17.5 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 9 | 8 | -10.2 | -15.7 |
| இறால் வளர்ப்பு பண்ணைகள் | 14 | 14 | 95.8 | -2.3 |
| மொத்தம் | 436 | 397 | 1.7 | -8.9 |

(அ) தற்காலிகமானது

*மூலம்:* கடற்தொழில் அமைச்சு

முக்கியமாகத் தூண்டப்பட்டு, கடந்த ஆண்டுடன் ஒப்பிகையில், 2022இல் மொத்த மீன் உற்பத்தி 397,230 மெற்றிக் தொன்களுக்கு 8.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கமைவாக, 2022இல் மொத்த மீன் உற்பத்தியின் ஏறத்தாழ 71 சதவீதத்திற்கு வகைகூறிய கடல்மீன் உற்பத்தியானது 2022இல் 280,610 மெற்றிக் தொன்களுக்கு 15.4 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. எனினும், நீர்நிலைகளின் பொருத்தமான முகாமைத்துவம் மற்றும் நீர்நிலைகளில் அதிகரித்த இருப்புகள் காரணமாக ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு மீன்பிடித் துறை முன்னேற்றமொன்றைப் பதிவுசெய்து 2021இன் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில், ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தியில் 11.9 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு அதிகரிப்பை விளைவித்தது. அதிகரித்த ஏற்பாட்டுச் செலவுகளின் விளைவாக 2022இல் மீன் வகைகளின் சில்லறை விலைகள் பெருமளவில் உயர்ந்து காணப்பட்ட அதேவேளை, 2021இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2022 ஓகத்திலும் நவெம்பரிலும் மண்ணெண்ணெய் விலைகளில் ஏற்பட்ட மேல்நோக்கிய திருத்தங்கள் ஆண்டின் பிற்பகுதியில் விலைகளை உயர் மட்டத்தில் வைத்திருந்தது. மீன்பிடி அமைச்சின் படி, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் மொத்த மீன் ஏற்றுமதிகள் 3.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்து, துறையின் குறைந்தளவான செயலாற்றமொன்றைப் பிரதிபலித்த அதேவேளை, ஆய்விற்குரிய காலப்பகுதியில், அளவு நியதிகளில், மீன் இறக்குமதிகள் 25.7 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றை பதிவுசெய்தது. வலு நெருக்கடிக்கு மத்தியில், மீன்பிடித் துறையானது பல்வேறு பின்னடைவுகளை எதிர்கொண்டதுடன் கொந்தளிப்பான காலங்களில் தொடர்ச்சியான மீன்பிடி நடவடிக்கைகளை உறுதிசெய்து அதன்மூலம் கடுமையான பொருளாதார அதிர்வுகளிலிருந்து பாதுகாத்து மீன்பிடி கைத்தொழில்களின் செயலாற்றத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை எடுப்பதற்கு தூண்டியது. இதற்கமைவாக, கையேடு முறைமையை இயலச்செய்வதன் மூலமாக மீன்பிடி நடவடிக்கைகளுக்கான எரிபொருள் வழங்குதல் உறுதிப்படுத்தப்பட்ட அதேவேளை, மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் இருப்புக்களை விநியோகிப்பதற்கு முன்னுரிமை அடிப்படையொன்றில் முக்கிய மீன்பிடி பிராந்தியங்களில் நிரப்பு நிலையங்கள் இனங்காணப்பட்டன.

**2022 காலப்பகுதியில் மீன்பிடி உட்கட்டமைப்பு தளத்துடன் தொடர்புடைய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.** இதற்கமைவாக, மீன்பிடி அமைச்சானது பல்வேறு மீன்பிடித் துறை அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டுவந்த அதேவேளை, நிலையான மீன்பிடி நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்கு சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடி நடவடிக்கைகளை தடுத்திருந்தது. வெல்லன்கர மீன்பிடித் துறைமுகத்தின் கட்டுமானப்பணிகள் 2022மாச்சில் நிறைவுசெய்யப்பட்டதுடன் 2022 காலப்பகுதியில் கந்தர மீன்பிடித் துறைமுகம், பலப்பிட்டிய மீன்பிடித் துறைமுகம், மற்றும் ரேவக்கை மீன்பிடித் துறைமுகம் உள்ளடங்கலாக பல்வேறு துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கடலோரப் பகுதிகளில் இயற்கை மீன்களின் தொகையை அதிகரிப்பதற்கு பல்வேறு நீர்த்தடாகங்களைச் சுத்தம்செய்து ஆழப்படுத்துவதை இலக்காகக்கொண்டு நீர்த்தடாக பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆண்டு காலப்பகுதியில் செயற்பாட்டிலிருந்த அதேவேளை, அறுவடைக்குப் பிந்தைய இழப்புக்களை குறைப்பதுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதேவேளை, உள்நாட்டு மீன் மற்றும் உயிரின வளர்ப்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேசிய உயரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது. இது மீன் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது. நீர்த்தேக்க இருப்புகளுக்கு தேவைப்படும் மீன் குஞ்சு வழங்கலை அதிகரிப்பதற்கு அம்பாறை, திருகோணமலை, மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட மூன்று மீன் இனப்பெருக்க அலகுகள் தாபிக்கப்பட்டதுடன் இவ்வலகுகள் உள்நாட்டிற்கு மீன் குஞ்சுகளின் தொடர்ச்சியான நிரம்பலை வழங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. மீன் குஞ்சிற்கு பின்னரான பருவ வளர்ச்சிக்கு உதவுவதற்காக சிறியளவிலான மீன் குஞ்சு உற்பத்திப் பிரிவுகளை மேம்படுத்தல் மற்றும் மீன் குஞ்சு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி நிலையங்களைப் புனரமைத்து மேம்படுத்தல் என்பன ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டன. இறால் வளர்ப்பு நாட்டில் மிகவும் இலாபம் தரத்தக்க மீன்வளர்ப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக மாறியமையால் சாத்தியமான அனைத்து பிரதேசங்களிலும் இறால் வளர்ப்பை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைவாக, வினைத்திறன்மிக்க நீர் மீள்சுழற்சி முறைமையொன்றை அறிமுகப்படுத்தி பண்ணைப் பிரதேசங்களின் உயிரியல் பாதுகாப்பை மேம்படுத்துவதன் மூலமாக இறால்

2

அட்டவணை 2.7
முக்கிய உணவுப் பண்டங்களின் கிடைப்பனவு

| விடயம் | அலகு | 2010 | | | 2021 (அ) | | | 2022 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) | உற்பத்தி | இறக்குமதிகள் | தலைக்குரிய கிடைப்பனவு (கி.கி/ஆண்டு) |
| அரிசி (இ) | '000 மெ.தொன் | 3,011 | 126 | 152 | 3,203 | 147 | 151 | 2,081 | 783 | 129 |
| சோளம் | '000 மெ.தொன் | 162 | 16 | 9 | 472 | 23 | 22 | 259 | 191 | 20 |
| கோதுமை | '000 மெ.தொன் | - | 1,051 | 51 | - | 1,319 | 60 | - | 817 | 37 |
| பெரிய வெங்காயம் | '000 மெ.தொன் | 59 | 158 | 10 | 66 | 257 | 15 | 18 | 264 | 13 |
| சீனி | '000 மெ.தொன் | 31 | 548 | 28 | 81 | 582 | 30 | 79 | 460 | 24 |
| உருளைக் கிழங்கு | '000 மெ.தொன் | 52 | 130 | 9 | 76 | 117 | 9 | 48 | 154 | 9 |
| உடன் மீன் | '000 மெ.தொன் | 385 | 14 | 19 | 436 | 10 | 20 | 397 | 4 | 18 |
| பசும்பால் | மில்லியன் லீற்றர்கள் | 192 | - | 9(ஈ) | 425 | - | 19(ஈ) | 419 | - | 19(ஈ) |
| தேங்காய் எண்ணெய் | '000 மெ.தொன் | 65 | 3 | 3 | 43 | 99 | 6 | 69 | 14 | 4 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) 1 மெற்றிக்தொன் நெல் = 0.68 மெற்றிக்தொன் அரிசி
(ஈ) ஆண்டொன்றிற்கான லீற்றர்கள்


*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
லங்கா சீனிக் கம்பனி (தனியார்) லிமிட்டெட் - செவனகல அலகு
லங்கா சீனிக் கம்பனி (தனியார்) லிமிட்டெட் - பெல்வத்தை அலகு
கல்லோயா (ஹிங்குரான) சீனிக் கைத்தொழில் லிமிட்டெட்
எத்திமல பிளான்ரேஷன் (தனியார்) லிமிட்டெட்
கடற்றொழில் அமைச்சு
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

வளர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கு வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட அதேவேளை, புத்தளத்திலுள்ள இறால் பண்ணைகளுக்காக டச்சு கால்வாயை தூர்வாறுதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட மின்சார வழங்கலை நிறுவுதல் போன்ற நடவடிக்கைளும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. இறால் பண்ணைக்கு மேலதிகமாக, வர்த்தக ரீதியான நீர் உயிரின வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு கடற்சாதாழை, கடற்பாசி, கடலட்டை மற்றும் பால்மீன் பண்ணை வளர்ப்பு என்பன அபிவிருத்தியடைந்து வந்தன. தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் புத்தளம் கடற்பிரதேசங்களில் சமுதாயத்தினை அடிப்படையாகக்கொண்ட கடற்பாசி வளர்ப்பு நடவடிக்கைகளை வசதிப்படுத்தியது. கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களிலுள்ள கடலட்டை ஏற்றுமதி கிராமங்களில் கொத்தணி அடிப்படையிலான கடலட்டைப் பண்ணைகளை உருவாக்குவதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்ட அதேவேளை மன்னாரிலும் நீர் உயிரின வளர்ப்பு வலயமொன்றைத் தாபிப்பதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அலங்கார மீன் உற்பத்தியின் உயர்ந்தளவான பெறுமதியை அதிகரித்து, அதன்மூலம் வெளிநாட்டு வருவாய்களை அதிகரிப்பதை இலக்காகக்கொண்டு, தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது புதிய அலங்கார மீன் வளர்ப்பை அபிவிருத்தி செய்தல், இனப்பெருக்கத்திற்காக மீன் குஞ்சுகளை வழங்குதல், நோய் நிர்ணய செயற்பாடுகள், பயிற்சியளித்தல், மற்றும் தொழில்நுட்ப உதவியளித்தல் உள்ளடங்கலாக அலங்கார மீன் உற்பத்தி தொழிற்சாலையை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டது. மேலும், பங்கதெனியாவில் கடல்சார் அலங்கார மீன் இனப்பெருக்க நிலையமொன்றை தாபிப்பதற்கும் தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## கைத்தொழில்

**வங்கித்தொழில் முறைமையில் காணப்பட்ட வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையின் பற்றாக்குறையின் விளைவாக காணப்பட்ட நீண்ட கால வலு நெருக்கடி மற்றும் முக்கிய மூலப்பொருட்களுக்கான பற்றாக்குறையுடன் இணைந்து உயர்ந்த பணவீக்கச் சூழல்களின் காரணமாக கொள்வனவுச் சக்தியில் ஏற்பட்ட தேய்வினைத் தொடர்ந்து நிலவிய குறைவடைந்த கேள்வி நிலைமைகள் 2022 காலப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளைப் பெருமளவிற்குப் பாதித்தன.** கொள்கைத் தலையீடு ஆண்டின் பிற்பகுதியில் நிரம்பல் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்த உதவிய போதிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகள் இரண்டிலுமிருந்தும் தோன்றிய இப்பல்வேறு சவால்களின் காரணமாக கைத்தொழில் நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 5.7 சதவீதம்

வரைபடம் 2.6
கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2022 (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 16.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. தயாரிப்பு மற்றும் கட்டடவாக்க நடவடிக்கைகளின் குறைவடைந்த செயலாற்றம் கைத்தொழில் நடவடிக்கைகளின் சுருக்கத்திற்கு வழியமைத்த வேளையில் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள், மின்வலு, வாயு, நீராவி மற்றும் வழிச்சீராக்கி வழங்கல் நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்து கைத்தொழில் நடவடிக்கைகள் ஒட்டுமொத்தமாகப் பின்னடைவதனை மேலும் தீவிரப்படுத்தின. எனினும், நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள், வடிகால், கழிவு சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் இவ்வாண்டுப்பகுதியில் விரிவடைந்து ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு சாதகமாகப் பங்களித்தன. கைத்தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் கைத்தொழிலுடன் தொடர்பான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் உற்பத்தி மற்றும் கேள்வித் துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் சராசரியாக சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டின.

## தயாரிப்பு

**உள்நாட்டு அதிர்வுகளுக்குப் பெருமளவிற்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய புடவை தயாரிப்பு, அணியும் ஆடைகள் மற்றும் தோல் தொடர்பான உற்பத்திகள் தவிர்ந்த, அனைத்து தயாரிப்பு நடவடிக்கைகளும் இவ்வாண்டுப்பகுதியில் சுருங்கியமைக்கு நீடிக்கப்பட்ட மின்வெட்டுக்கள், எரிபொருள் மற்றும் முக்கிய மூலப்பொருட்களின் பற்றாக்குறை, ஏற்பாட்டுப் பிரச்சனைகள் மற்றும் குறைவடைந்த கேள்வி நிலைமைகள் என்பனவற்றின் மோசமான தாக்கங்களே காரணமாகும்.** இதன்படி, ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளினதும் பெறுமதிகூட்டல் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 7.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 12.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளின் மிகப்பெரும் பங்களிப்பாளராகவுள்ள உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு 2022இல் 14.2 சதவீதத்தினால் கணிசமானளவிற்கு சுருக்கமடைந்து ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளின் குறிப்பிடத்தக்களவு சுருக்கத்திற்கு வழிவகுத்தது. மேலும், ஏனைய உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், அடிப்படை உலோகம் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் என்பன பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் ஒட்டுமொத்த தயாரிப்பு நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய பங்களிப்பாளராக விளங்கின. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் மற்றும் மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்[5] என்பன இவ்வாண்டுப்பகுதியின் சராசரியின் மீது சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டின.

வரைபடம் 2.7

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு (அ)




(அ) இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்க கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

**தயாரிப்பு நடவடிக்கைகளிலிருந்தான பெறுமதி சேர்த்தலானது 2022இல் எதிர்மறையான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்ததுடன், இது இலங்கைப் பொருளாதாரம் அனுபவிக்கும் முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார நெருக்கடியிலிருந்து உருவாகும் பல்வேறு நெருக்கடிகளுக்கு காரணமாக அமையலாம்.** மோசமான பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில், மூலப் பொருட்களின் பற்றாக்குறைகள், சீர்குலைந்த போக்குவரத்து வலையமைப்புக்கள், தடைப்பட்ட மின்சார வழங்கல், அதிகரித்த உள்ளீட்டு விலைகள் போன்றன உள்ளடங்கலாக பன்முகப்பட்ட சவால்களை தயாரிப்புத் துறை எதிர்கொண்டது. இது ஆண்டு காலப்பகுதியில் துறையின் செயலாற்றத்தில் மோசமான தாக்கமொன்றை ஏற்படுத்தியது. பணவீக்க அதிகரிப்பு மற்றும் கையாளத்தக்க வருமானத்தின் உண்மைப் பெறுமதி குறைவடைதல், தயாரிப்புத் துறையின் செயலாற்றத்தில் மேலும் தடையேற்படுதல் என்பனவற்றுக்கு மத்தியில் ஆண்டு காலப்பகுதியில், ஒட்டுமொத்த சந்தை கேள்வியானது தளர்வுற்றது. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் பிரதிபலிக்கப்பட்டவாறு, மொத்த கைத்தொழில் துறையின் ஏறத்தாழ 59 சதவீதத்திற்கு வகைகூறிய ஒட்டுமொத்த தயாரிப்புத் துறையானது, கடந்த ஆண்டின் 7.3 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 12.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

5 கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது முந்தைய மாதத்துடன் ஒப்பிட்டு மாதாந்த அபிவிருத்திகளை வெளிக்காட்டும் பொருட்டு முன்னனி நிறுவனங்களை உள்ளடக்கிய கருத்து அளவீட்டின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட ஓர் வியாபித்தல் சுட்டெண்ணாகும்.

2

வரைபடம் 2.8
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

உணவு உற்பத்திகள், புடவைகள், கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள், ஏனைய உலோகமல்லா கனிம உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள், மற்றும் அடிப்படை உலோக உற்பத்திகள் என்பனவற்றின் தயாரிப்பின் துணைத் துறைகள் 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சுருக்கங்களைப் பதிவுசெய்து, கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஒட்டுமொத்த சுருக்கத்திற்கு பெருமளவு பங்களிதன. எனினும், அவ்வவ்போது அவதானிக்கப்பட்ட தற்காலிக இடையூறுகள் காணப்பட்ட போதிலும், சுட்டெண்ணின் ஏறத்தாழ 30 சதவீதத்திற்கு பங்களிக்கும் அணியும் ஆடைகள், இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகள், குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள், தோல் மற்றும் தொடர்புடைய உற்பத்திகள், மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற துணைத் துறைகள் ஆண்டு காலப்பகுதியில் ஒட்டுமொத்த வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன.

**2022இல் உணவுத் தயாரிப்பு நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க சுருக்கமொன்றைப் பதிவுசெய்த அதேவேளை, குடிபான தயாரிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வலுவான வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.** கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் மூன்றில் ஒரு பங்கிற்கு வகைகூறிய உணவு உற்பத்திகளின் துணைத் துறையானது 2021இன் 0.2 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைத் தொடர்ந்து, 2022இல் 14.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது. உணவு உற்பத்தி துணைத் துறையின் குறைந்த செயலாற்றமானது முக்கியமாக, வழங்கல் சங்கலி மற்றும் விநியோக வழிகளில் ஏற்பட்ட நெருக்கடியால் தூண்டப்பட்ட இடையூறுகளுடன், அரிசி தகரத்திலடைக்கப்பட்ட மீன் உற்பத்திகள், பால் மா, கோதுமை மா, பாண் மற்றும் தேயிலை போன்ற உற்பத்திகளின் வீழ்ச்சி, மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்களின் அதிகரித்த செலவு மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட பல்வேறு உணவுப் பொருட்களின் மட்டுப்படுத்தப்பட்ட வழங்கல் என்பனவற்றினால் தூண்டப்பட்டிருந்தது. மறுபுறம், மதுபானம், பியர் மற்றும் மென் குடிபானங்கள் உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக ஆண்டு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஏனைய துணைத் துறைகளுக்கு மத்தியில் குடிபானங்களின் துணைத் துறையின் தயாரிப்புச் செயலாற்றமானது குறிப்பிடத்தக்க விரிவடைதலைப் பதிவுசெய்தது. இதற்கமைவாக, குடிபானத் தயாரிப்பு நடவடிக்கைகள், 2021இன் 9.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சிக்கு மேலாக, 2022இல் 20.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. 2022இன் குடிபான தயாரிப்பு நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த சாதகமான செயலாற்றம் இருந்தபோதிலும், 2022இன் நான்காம் காலாண்டு பகுதியில் துறைச் செயலாற்றத்தில் சிறிதளவான மிதமடைலொன்று அவதானிக்கப்பட்டது.

அட்டவணை 2.8
கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்
(2015=100)


| பிரிவு | கை. உ. சுட்டெண்ணில் நிறை ஏற்றங்கள் (%) | 2021 (அ) | 2022 (ஆ) | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | | | | 2020/21 (அ) | 2021/22 (ஆ) |
| 1. உணவு உற்பத்திகளின் தயாரிப்பு | 35.2 | 109.3 | 93.1 | 0.2 | -14.8 |
| 2. குடிபானங்களின் தயாரிப்பு | 3.8 | 106.0 | 127.5 | 9.8 | 20.3 |
| 3. புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பு | 1.7 | 77.9 | 83.2 | 8.0 | 6.8 |
| 4. புடவைகளின் தயாரிப்பு | 3.3 | 128.7 | 101.5 | 25.9 | -21.1 |
| 5. அணியும் ஆடைகளின் தயாரிப்பு | 19.8 | 95.4 | 100.5 | 17.5 | 5.3 |
| 6. தோல் மற்றும் தொடர்பான உற்பத்திகளின் தயாரிப்பு | 0.3 | 78.6 | 87.4 | 1.3 | 11.2 |
| 7. தளபாடம் தவிர்ந்த மரம் மற்றும் மரசார் உற்பத்திகள், அடைப்பான்களின் தயாரிப்பு, வைக்கோல் பொருட்கள் மற்றும் பின்னல் பொருட்களின் தயாரிப்பு | 0.2 | 82.5 | 81.0 | 15.0 | -1.8 |
| 8. தாள் மற்றும் தாள் உற்பத்திகளின் தயாரிப்பு | 1.7 | 86.5 | 49.0 | 5.8 | -43.4 |
| 9. அச்சுப் பதிப்பு மற்றும் பதிவு செய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு | 1.4 | 117.9 | 112.1 | 4.8 | -4.9 |
| 10. சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பு | 7.4 | 71.1 | 30.0 | -26.8 | -57.8 |
| 11. இரசாயனம் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பு | 4.1 | 89.8 | 98.6 | -4.7 | 9.8 |
| 12. அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகளின் தயாரிப்பு | 0.1 | 117.9 | 102.5 | 12.6 | -13.1 |
| 13. இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்களின் தயாரிப்பு | 5.7 | 102.9 | 92.7 | 35.7 | -9.9 |
| 14. ஏனைய உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு | 7.8 | 137.4 | 113.5 | 23.0 | -17.4 |
| 15. அடிப்படை உலோகங்களின் தயாரிப்பு | 2.4 | 133.6 | 88.1 | 20.7 | -34.1 |
| 16. பொறி மற்றும் இயந்திரம் தவிர்ந்த உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்பு | 1.3 | 124.6 | 72.0 | 23.5 | -42.2 |
| 17. இலத்திரனியல் சாதனங்களின் தயாரிப்பு | 2.0 | 81.4 | 65.1 | 20.6 | -20.0 |
| 18. பொறி மற்றும் இயந்திர உற்பத்திகளின் தயாரிப்பு வே.எ.வ. | 0.7 | 122.0 | 139.1 | 18.6 | 14.0 |
| 19. தளபாட உற்பத்தி | 0.8 | 77.5 | 63.3 | 0.7 | -18.3 |
| 20. ஏனைய உற்பத்திகள் | 0.3 | 69.6 | 69.6 | 6.0 | - |
| கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் | | 104.2 | 91.6 | 7.3 | -12.1 |

வே.எ.வ - வேறு எங்கும் வகைப்படுத்தப்படாதவை
(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் இரண்டாவது பாரிய துணைத் துறையாக விளங்கும் அணியும் ஆடைகள் தயாரிப்பானது உலகளாவிய வழங்கல் சங்கலியின் மீட்சியினால் ஆதரவளிக்கப்பட்டு, 2022இல் சாதகமான மீட்சியொன்றைப்**

வரைபடம் 2.9
இயலளவுப் பயன்பாடு




குறிப்பு: ஒவ்வொரு பிரிவுக்குமான நிறையிடல்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**பதிவுசெய்த அதேவேளை, புடவைகள் துணைத் துறை சுருக்கமொன்றைப் பதிவுசெய்திருந்தது.** இதற்கமைவாக, அணியும் ஆடைகளின் துணைத் துறையின் தயாரிப்பானது 2021இல் பதிவுசெய்யப்பட்ட 17.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022இல் 5.3 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. அணியும் ஆடைகள் துறை தொடர்பிலான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், ஏற்பாட்டுச் சிக்கல்கள், மற்றும் மின்சாரத் தடைகள் போன்ற மோசமான தாக்கங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு கொள்கைத் தீர்மானங்களினால் பெருமளவில் ஈடுசெய்யப்பட்டன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஏற்றுமதியாளர்கள் ஐ.அ.டொலர்களைப் பயன்படுத்தி இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து எரிபொருளை நேரடியாக வாங்குவதை அனுமதித்தமை மற்றும் மூலப்பொருள் இறக்குமதிகளுக்கான தீர்வைச் சலுகைகளை வழங்கியமை என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைவாக, செலாவணி வீதத்தின் தேய்மானமும் குறிப்பாக இலங்கையின் முக்கியமான ஏற்றுமதி இடங்களில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிலிருந்தான உலகளாவிய மீட்பும் அணியும் ஆடை துணைத்துறையின் ஏற்றுமதி வருமானத்தில் சாதமான விளைவை ஏற்படுத்தியது. எனினும், புடவைகள் உற்பத்திகளின் தயாரிப்பானது உலகளாவிய நோய்த்தொற்றுக்கு பின்னர் 2021இல் 25.9 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியுடன் வலுவான மீட்சியொன்றைப் பதிவுசெய்த போதும், முடிக்கப்பட்ட துணி, அச்சிடப்பட்ட துணி மற்றும் தேங்காய் நார் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பெரிதும் தூண்டப்பட்டு, 2022இல் ஏறத்தாழ 21.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்தது.

**ஏனைய உலோகமற்ற கனிம உற்பத்திகளின் தயாரிப்பு, அடிப்படை உலோகங்களின் தயாரிப்பு, மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் துணைத் துறைகள் என்பனவற்றில் ஆண்டு காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட கணிசமானளவு சுருக்கங்களுடன் 2022இல் ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றைப் பதிசெய்தன.** இதற்கமைவாக, 2021இல் 20 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சிகளைப் பதிவுசெய்த ஏனைய உலோகமற்ற கனிம உற்பத்திகளின் தயாரிப்பு, அடிப்படை உலோகங்களின் தயாரிப்புத் துணைத் துறை மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் துணைத் துறை என்பன ஆண்டு காலப்பகுதியில் முறையே, 17.4 சதவீதத்தினாலும், 34.1 சதவீதத்தினாலும், 42.2 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தன. உள்நாட்டு கட்டுமானத் துறையின் குறைந்தளவான கேள்வி காரணமாக இத்துணைத் துறைகளின் உற்பத்திகளுக்கான கேள்வியில் சுருக்கம் ஏற்பட்டது. அரசாங்கத்தினால் நிதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்களை இடைநிறுத்துதல், அதிகரித்துவரும் மூலப்பொருள் செலவுகள், மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து இவை பல்வேறு பின்னடைவுகளை எதிர்கொண்டன. சீமெந்து, கூரை தாள்கள், தரை ஓடுகள், நெளி தாள்கள் மற்றும் கூரை ஓடுகள் போன்றவற்றின் உற்பத்தியானது கட்டுமானத் துறையிலிருந்து குறைந்தளவான கேள்வியைப் பிரதிபலித்து 2022 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க சுருக்கங்களைப் பதிசெய்தது. இது ஏனைய உலோகமற்ற கனிம உற்பத்திகளின் செயலாற்றத்தை மோசமாகப் பாதித்தது. அதேவேளை, ஆய்விற்குரிய காலப்பகுதியில், அடிப்படை இரும்பு மற்றும் உருக்கு, உருக்குத் தளபாடம் ஆகியவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் அடிப்படை உலோகங்களின் தயாரிப்புத் துறை மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் தயாரிப்புத் துணைத் துறை என்பனவற்றில் ஏற்பட்ட ஒட்டுமொத்த சுருக்கத்திற்கு பெருமளவில் பங்களித்தன.


**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணில் 7 சதவீதத்திற்கு மேலாக வகைகூறும் கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் துணைத் துறையின் தயாரிப்பானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 2022இலும் சுருக்கமொன்றை பதிவுசெய்தது.** இதற்கமைவாக, கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் தயாரிப்பானது ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 57.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்து, 2016 தொடக்கம் வரலாற்றில் பாரியளவான சுருக்கத்தைப் பதிவுசெய்திருந்தது. உள்நாட்டுச் சந்தையின் வெளிநாட்டுச் செலாவணி திரவத்தன்மைப் பற்றாக்குறைக்கு மத்தியில், மசகெண்ணெய்யின் மட்டுப்படுத்தப்பட்ட இறக்குமதி காரணமாக ஆண்டு காலப்பகுதியில் சுத்திகரிப்பு நிலையங்களின்

நீண்டகால நிறுத்தல்களினால் இவ்வீழ்ச்சி பிரதானமாக தூண்டப்பட்டிருந்தது. இதற்கமைவாக, டீசல், பெற்றோல் மற்றும் உலையெண்ணெய் உள்ளடங்கலாக சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் 2022இல் வீழ்ச்சியடைந்தன. எனினும், ஆண்டு காலப்பகுதியில் கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்தியின் தயாரிப்பானது பெப்புருவரி, யூன், ஓகத்து, செத்தெம்பர் மற்றும் திசெம்பர் போன்ற மாதங்களில் மாதத்திற்கு மாத அதிகரிப்புகளைப் பதிவுசெய்தது.

**தோலுடன் தொடர்புடைய உற்பத்திகள், மற்றும் இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகளின் தயாரிப்பின் துணைத் துறைகள் 2022 காலப்பகுதியில் சாதகமான வளர்ச்சிகளைப் பதிவுசெய்தன.** தோலுடன் தொடர்புடைய உற்பத்திகளின் துணைத் துறையின் தயாரிப்பானது 2021இன் 1.3 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், முடிக்கப்பட்ட தோல், இயற்கையான தோல் ஜாக்கெட்டுகள் மற்றும் காலணிகளின் உற்பத்திகளின் விரிவாகத்தினால் 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையலில் 11.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, இரசாயனங்கள் மற்றும் இரசாயன உற்பத்திகளின் துணைத் துறையின் தயாரிப்பும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.8 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. பிளாத்திக் பை மற்றும் சலவைத் தூள் உற்பத்திகளின் அதிகரிப்பானது இவ் வளர்ச்சிக்கு பங்களித்தன.

**இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகள் துணைத் துறையின் தயாரிப்பும் அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் தயாரிப்புகள் துணைத் துறையின் தயாரிப்பும் ஆண்டு காலப்பகுதியில் சுருக்கங்களைப் பதிவுசெய்தன.** இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகளின் தயாரிப்பானது 2021இன் 35.7 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க ஆண்டிற்கு ஆண்டு விரிவடைதலொன்றைப் பதிவுசெய்த போதும்

வரைபடம் 2.10
2022இல் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு




குறிப்பு: ஒவ்வொரு பிரிவுக்குமான நிறையிடல்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

2022இல் 9.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது. உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் கொவிட்-19 பாதிக்கப்பட்டவர்கள் குறைந்ததைத் தொடர்ந்து மருத்துவ இறப்பர் கையுறைகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் முக்கியமாக இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகள் துணைத் துறையில் சுருக்கம் ஏற்பட்டது. இதற்கு மேலதிகமாக, ரயர்கள், சிப்புகள், இறப்பர் தொகுதி மற்றும் இறப்பர் தாள் என்பனவற்றில் ஏற்பட்ட குறைப்பும் இச்சுருக்கத்திற்கு பங்களித்தது. அதேவேளை, மருத்துவப் பொருட்களுக்கும் ஏனைய சுகாதாரத்துடன் தொடர்புடைய பொருட்களுக்குமான தூண்டப்பட்ட கேள்வியுடன் நோய்த்தொற்றின் தொடக்கத்திலிருந்து படிப்படியான விரிவாக்கமொன்றைக் காண்பித்த அடிப்படை மருந்தாக்கல் உற்பத்திகள் மற்றும் மருந்தாக்கல் தயாரிப்புகள் துணைத் துறையின் தயாரிப்பானது 2022 காலப்பகுதியில் 13.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு சுருக்கமொன்றைப் பதிவுசெய்தது.

**மரப்பொருட்கள் (தளபாடங்கள் நீங்கலாக), மின்சார சாதனங்கள், தளபாடங்கள், கடதாசி, மற்றும் கடதாசிப் பொருட்கள், மற்றும் அச்சிடுதல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடக மீளுருவாக்க தயாரிப்புக்கள் போன்ற ஏனைய கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணின் துணைத் துறைகள் சுருக்கங்களைப் பதிவுசெய்திருந்தபோதிலும், புகையிலை உற்பத்திகள் மற்றும் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் துணைத் துறைகளின் தயாரிப்பானது 2022இல் விரிவடைதல்களைப் பதிவுசெய்தன.** நெளி கடதாசிகள், அட்டைப் பெட்டிகள், கடதாசிப் பைகள், மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் உற்பத்தியில் ஏற்பட்ட குறைவடைதல் காரணமாக, கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்களின் துணைத் துறையின் தயாரிப்பானது 2022இல் மிதமான செயலாற்றமொன்றைக் காண்பித்திருந்தது. இதற்கமைவாக, கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள் துணைத் துறையானது 2022இல் 43.4 சதவீதம் கொண்ட கணிசமானளவு ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், நாணயத் தாள்கள் மற்றும் பத்திரிகை அச்சிடுவதிலுள்ள வீழ்ச்சிகளுடன் இணைந்து ஆய்விற்குரிய காலப்பகுதியில் ஏற்பட்ட வழங்கல் பற்றாக்குறைகள் காரணமாக அச்சிடுதல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட ஊடக மீளுருவாக்க துணைத் துறையும் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.9 சதவீதம் கொண்ட சுருக்கமொன்றை எடுத்துக்காட்டியது. மின்சார உபகரணங்களின் தயாரிப்பின் ஒட்டுமொத்த செயலாற்றமானது மின்சார பெனல் பலகைகள், மற்றும் சுருள் சாதனங்களுக்கான குறைவடைந்த கேள்வி காரணமாக மின்சார உபகரணங்களின் தயாரிப்பின் ஒட்டுமொத்த செயலாற்றமும் 2022இல் பாதிப்படைந்திருந்தது. எனினும், இயந்திரம் மற்றும் உபகரண துணைத் துறையின் தயாரிப்பானது முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 18.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2022 காலப்பகுதியில் 14.0 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப்

பதிவுசெய்தது. அதேவேளை, சிகரெட்டுக்களின் தயாரிப்பின் அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டு புகையிலை உற்பத்திகளின் தயாரிப்பும் 2022இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தது.

## கைத்தொழில் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**ஆண்டு காலப்பகுதியில், பல்வேறு கொள்கை முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதனூடாக கைத்தொழில் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளித்த அதேவேளை பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து மீட்சியடைய கைத்தொழிலத் துறைக்கு துணையளித்தது.** இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்திக்கான அனைத்தையுமுள்ளடக்கியதும் முழுமையானதுமான கொள்கை கட்டமைப்பை நிறுவும் நோக்குடன், 2023-2048 வரையான காலப்பகுதிக்கான கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையை கைத்தொழில் அமைச்சு நிறைவுசெய்தது. மேலும், கைத்தொழில் அபிவிருத்திக்கான தேசிய கொள்கையானது உலகளாவிய போட்டித்தன்மையை கொண்டதும் அனைவரையும் வசதிக்குட்படுத்துகின்ற வளர்ச்சியை ஊக்குவிக்கின்ற தேசிய கைத்தொழில் தளமொன்றைத் தாபிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. கைத்தொழில் அபிவிருத்திகான தேசிய கொள்கையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொருட்டு, கண்காணிப்பிற்கான நடைமுறைப்படுத்தல் கட்டமைப்பு, பொறிமுறைகள், மற்றும் காலமுறையான மீளாய்வுகளை நடாத்துவதற்கான முறையியல் போன்றன உள்ளடங்கலாக, மூலோபாய நடைமுறைப்படுத்தல் திட்டங்கள் 5 ஆண்டுகால இடைவெளிகளுக்காக தயாரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2023 பெப்புருவரியில், 2023-2027 வரையான காலப்பகுதிக்கான மூலோபாய நடைமுறைப்படுத்தல் திட்டத்துடன் இணைந்து நிறைவுசெய்யப்பட்ட கைத்தொழில் அபிவிருத்திக்கான கொள்கை ஒப்புதலுக்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதேவேளை, 2012இல் நிறுத்தப்பட்ட பொது தனியார் பங்குடைமை திட்டத்தின் கீழ் எம்பிலிப்பிட்டி கடதாசி ஆலைகளில் உற்பத்தியை மீண்டும் தொடங்குவதற்கு 2022 பெப்புருவரியில் அமைச்சரவை ஒப்புதலளித்தது. இச்செயற்றிட்டமானது அதன் முதற்கட்ட அபிவிருத்தியில் ஐ.அ.டொலர்கள் 16 மில்லியன் கொண்ட முதலீடொன்றை உள்ளடக்கியதுடன் இயந்திரத்தையும் உட்கட்டமைப்பையும் தரமுயர்த்துவதன் மூலமாக நேரடி மற்றும் நேரடியற்ற சந்தைகளுக்கு கைத்தொழில் சார்ந்த தரக் கடதாசிகளை தயாரிப்பதை இலக்காகக் கொண்டிருந்தது. இத்தொழிற்சாலை, 2024இல் அதன் எதிர்பார்க்கப்பட்ட நிறைவடைதலின் போது ஆண்டுக்கு ஏறத்தாழ 74,000 மெற்றிக் தொன்கள் கொண்ட கடதாசி உற்பத்தியை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டு காலப்பகுதியில், பொது தனியார் பங்குடைமை மாதிரியொன்றின் கீழ், குருஞ்சத்தீவு உப்பளத்தில் தொழிற்பாடுகளை மீளஆரம்பித்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இச்செயற்றிட்டத்தை நிறைவுசெய்தவுடன், உப்பளங்களில், ஆண்டிற்கு ஏறத்தாழ 30,000 மெற்றிக் தொன்கள் கொண்ட உப்பு உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், வாகனம் தயாரித்தல், பொருத்துதல், உதிரிப்பாகங்களைத் தயாரித்தல் எனபனவற்றுக்கான நியம தொழிற்படுத்தல் நடைமுறை வழிகாட்டல்களை உள்நாட்டு வாகனங்களின் உள்ளகப் பொருத்துதல் தொடர்ந்தும் விரிவுபடுத்தியது. 2022ஆம் ஆண்டின் இறுதியில், 20 தயாரித்தல் கம்பனிகள், நியம தொழிற்படுத்தல் நடைமுறைகளின் கீழ் பதிசெய்யப்பட்டிருந்த அதேவேளை ஆண்டு காலப்பகுதியில், 10,490 வாகனங்கள் பொருத்தப்பட்டன. இதற்கிடையில், இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம், பன்னாட்டு பங்காளருடன் கூட்டிணைந்து 2022இல் இலங்கையின் முதல் உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்கப் பூங்காவை தாபித்தது. இப் பூங்கா, நாட்டில் உயிரியல் தொழில்நுட்ப புத்தாக்கத்தின் வரலாற்று நிலையமாக காணப்பட்டு இலங்கைக்கான உள்நாட்டு மற்றும் பன்னாட்டு முதலீட்டை கவருமெனவும் இதன்மூலம் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளுக்காக இலங்கையின் ஆற்றலை அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட 'சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி இணைப்பு தளமானது' 2022 ஒத்தோபரில் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. பெண்களின் நிதியியல் அறிவையும் வியாபார முகாமைத்துவ இயலுமைகளை மேம்படுத்துவதற்கு பெண்கள் வழிநடத்தும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தொடர்பில் குறித்த கவனத்துடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு மத்தியில் அறிவு, திறன்கள் மற்றும் வலையமைப்பிற்கான அடைதலை இத்தளம் வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், 'நிபுணத்தா உதான நிகழ்ச்சித்திட்டம்' ஆரம்பிக்கப்பட்டு பிராந்தியத்தின் தொழிற்கல்வி பயிற்சி தேவைப்பாடுகளை வழங்கும்பொருட்டு வடமேற்கு மாகாணத்தில் முன்னேற்றம் கண்டுள்ளது. அதேவேளை, மாத்தறையிலுள்ள ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரியின் அபிவிருத்தியும் செயற்பாட்டிலிருந்தது. எனினும், 2022ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், அரசாங்கத்தின் இறுக்கமான வரவுசெலவுத் திட்ட கட்டுப்பாடுகள் காரணமாக, 2022 ஏப்பிறல் தொடக்கம் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

2

**ஏற்றுமதி அபிவிருத்தி சபையும் முதலீட்டு சபையும் வெளிநாட்டு முதலீட்டை கவர்வதற்கு பல்வேறு வழிமுறைகளை முன்னெடுத்த அதேவேளை ஏற்றுமதி சார்ந்த உள்நாட்டு தயாரிப்பு நடவடிக்கைகளையும் தீவிரமாக ஊக்குவித்தது.** 2022இற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டவாறு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது 'தேசிய பொதியிடல் நிலையத்தை' மீளச் செயற்படுத்தவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இது பன்னாட்டு சந்தைகளுக்கு ஏற்றவாறு உள்நாட்டு பொதியிடல் பொருட்களையும் வடிவமைப்புக்களையும் ஊக்குவித்து அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. மேலும், ஆடைகள், மாணிக்கம் மற்றும் ஆபரணம், மின்சாரம் மற்றும் மின்சார உற்பத்திகள், இறப்பர் அடிப்படைப் பொருட்கள், மற்றும் படகு மற்றும் படகு கட்டுதல் போன்றன உள்ளடங்கலாக, பல்வேறு தெரிந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதித் துறைகளை ஊக்குவிப்பதற்கு 2022-2026 வரையான காலப்பகுதிக்கான தேசிய ஏற்றுமதி நாமமொன்றையும் ஊக்குவிப்புத் திட்டமொன்றையும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை உருவாக்கியது. மேலும், ஏற்றமதித் துறைகளின் செயலாற்றத்தை மேம்படுத்துவதற்கு கருத்தியல் முன்னுரிமைகளை இனங்காண்பதற்கு 24 முக்கிய ஏற்றுமதித் துறைகளை உள்ளடக்கி, ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் கீழ் 2021இல் நியமிக்கப்பட்ட ஏற்றமதி மதியுரைக் குழுக்களினால் ஆண்டுகாலத்தில் கூட்டத்தொடர்கள் நடாத்தப்பட்டிருந்தன. மேலும், ஆண்டு காலப்பகுதியில் ஏற்றுமதி சார்ந்த வியாபாரங்களின் ஊக்குவிப்பை இலக்காகக்கொண்டு, வர்த்தகச் சந்தைகள், சந்தை இணைப்பு உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், விழிப்பூட்டல் அமர்வுகள், மற்றும் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன உள்ளடங்கலாக, ஊக்குவிப்பு நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன. அதேவேளை, முதலீட்டுச் சபையானது உள்நாட்டு மற்றும் பன்னாட்டு தொழில்முயற்சிகளை ஆதரவளிக்கும் நிறுவனங்களையும், ஆராய்ச்சி நிறுவனங்களையும் இணைக்கும் தளமாக செயலாற்றுவதற்கு புதிய வியாபாரத் தரவுத்தளமொன்றை நிறுவியதுடன் அவர்களின் வரவிருக்கும் முன்மொழிவுகள் அல்லது புத்தாக்கங்களுக்கான பொருத்தமான பங்காளர்களை நாடியது. மேலும், முதலீட்டாளர்களுக்கு வியாபாரம் செய்வதை எளிதாக்கும் வேறுபட்ட முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதன் மூலமாக முதலீட்டு அனுமதி செயன்முறையை ஒழுங்குமுறைப்படுத்தி துரிதப்படுத்துவதற்கு 'முதலீட்டாளர் வசதிப்படுத்தல் நிலையமொன்று' நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

**உள்நாட்டு கைத்தொழில் துறையை வசதிப்படுத்தவதற்குரிய பல்வேறு முயற்சிகளை ஏனைய அரசாங்க முகவராண்மைகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தின.** தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி வியாபாரங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் 'இலங்கையில் தயாரிக்கப்பட்டது' என்ற வர்த்தக நாமத்தை மேம்படுத்துவதற்கான தமது முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்தது. இந் நோக்கத்திற்காக, தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது மாவட்ட மட்ட மற்றும் பிரதேச வர்த்தகச் சந்தைகளை முன்னெடுத்து மாத்தளை மாவட்டத்தில் முதல் 'இலங்கையில் தயாரிக்கப்பட்டது' என்ற உரிமக் கடையைத் திறந்து வைத்தது. 2022இல், தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது 1,292 தொழில்முனைவோர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதுடன் அதன் 'பிராந்திய தொழில்முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்' மூலமாக 957 வியாபாரங்கள் மற்றும் 1,573 வியாபார விரிவாக்கங்களை உருவாக்குவதற்கு ஆதரவளித்த அதேவேளை, உணவு நீரகற்றல், தேன், விளாம்பழம் மற்றும் ஏனைய பருவகால பொருட்கள், பலாப் பழம், மற்றும் நாணல் மற்றும் பனைமரம் போன்ற பல்வேறு கைத்தொழில் கொத்தணிகளுக்கு கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அதேவேளை, 'கைத்தொழில் 2022' தேசிய கைத்தொழில் கண்காட்சியானது 2022 பெப்புருவரியில் 20 கைத்தொழில்களின் பங்கேற்புடன், கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் நடாத்தப்பட்டது. இது உள்நாட்டு கைத்தொழில் அதிபர்களுக்கு புதிய சந்தை மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு ஆதரவளித்தது. மேலும், நாட்டின் கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் 'சிறந்த தேசத்திற்கான தொடக்க' (Getup Startup for a Wealthy Nation) முயற்சியும் தொடங்கப்பட்டது. பாடசாலை மாணவர்களுக்கான 'தொழில்முனைவோர் கழக' முயற்சி, மற்றும் தொழில்முனைவோர் எதிர்கொண்ட பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்கான 'ஆலோசனை மையங்கள்', மற்றும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் கைத்தொழில் அதிபர்களை நோக்கி நேரடி முதலீட்டுக்கான இணைய அடிப்படையிலான 'முதலீட்டாளர் குழாம்' போன்றன உள்ளடங்கலாக முயற்சியாண்மைகளை ஊக்குவிக்கின்ற பல்வேறு அம்சங்களை இந்நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கியிருந்தது. மேலும், இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்தி சபை செல்லிட தொலைபேசி செயலி மற்றும் பதிலளிப்பு இலக்கத்தையும் அறிமுகப்படுத்தி கைத்தொழில் அதிபர்களுக்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்குமிடையிலான நெருங்கிய தொடர்பை வசதிப்படுத்துவதற்கான தளமொன்றை உருவாக்கியது. அதேவேளை, நாடு முழுவதும் சிறிய அளவிலான தொழில்முனைவோரை வலுப்படுத்துவதை இலக்காகக் கொண்டு உற்பத்தித்திறன் வாய்ந்த மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை தேசிய உற்பத்தித்திறன் செயலகம் தொடர்ந்தும் நடாத்தியது.

**பயிற்சியளித்தல் மற்றும் ஊக்குவிப்பு முயற்சிகளில் ஈடுபடுத்தல் மூலமாக நாட்டில் உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்களின் கைத்தொழில்களுக்கு கைத்தொழில் சம்மேளனம் தொடர்ந்தும் ஆதரவளித்தது.** ஆண்டு காலப்பகுதியில், வர்த்தகம் மற்றும் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு பல்வேறு வர்த்தக பிரதிநிதித்துவம், வலையமைப்பு நிகழ்வுகள்,

பன்னாட்டு செயலமர்வுகள், மற்றும் கலந்துரையாடல் கூட்டங்கள் போன்றனவற்றை இலங்கை வர்த்தக சம்மேளனம் தொடர்ந்தும் வசதிப்படுத்தியது. மேலும், 'எல்லைகள் முழுவதும் வர்த்தகம் செய்வதற்கான வியாபார உத்திகள்' என்ற தொனிப்பொருளின் கீழ், இலங்கை வர்த்தக சம்மேளனமானது ஏற்றுமதி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் வர்த்தக அறிவை அதிகரிப்பதற்கு பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மையுடன் கூட்டிணைந்தது. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனமானது சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சித் துறைக்கு அறிவூட்டி வலுவூட்டுவதற்கு அர்ப்பணிப்புடன் காணப்பட்டு நாடளாவிய ரீதியில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்திருந்தது. பெண்களின் முயற்சியாண்மையை மேம்படுத்துவதன் மூலம் மேம்பட்ட வர்த்தக வாய்ப்புக்களை வலையமைப்பதை இலக்காகக் கொண்டு இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் 2022 காலப்பகுதியில், அரசாங்க அதிகாரசபைகள், பிராந்திய சம்மேளனங்கள், மற்றும் பன்னாட்டு ஒழுங்கமைப்புகள் என்பனவற்றுடன் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டது.

**தொழில்நுட்ப மேம்பாடுகளை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்ட அரசாங்கத்தின் முயற்சிகள் ஆண்டு முழுவதும் தொடர்ந்தன.** அரசாங்கத்தின் ஒட்டுமொத்த முயற்சிகளை நிறைவுசெய்யும் வகையில், தேசிய அடிப்படை ஆய்வுகள் நிறுவகமானது உள்நாட்டு தயாரிப்பு கைத்தொழில்களில் தொழில்நுட்பத்தையும் ஆய்வையும் பயன்படுத்துவதை வசதிப்படுத்துவதற்கு தொழில்நுட்பப் பரிமாற்றல் கொள்கையொன்றை உருவாக்கியது. மேலும், தனியார்துறை கம்பனியொன்றுடன் கூட்டிணைந்து தேசிய அடிப்படை ஆய்வுகள் நிறுவகமானது கைத்தொழில் நோக்கங்களுக்காக பாசிகளைப் பயன்படுத்தி உயிரியல் டீசல் உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தியதுடன் வேளாண்மை அபிவிருத்திகள் முயற்சிகளுக்காக 280,000 ஏக்கர்கள் கொண்ட வயல்களுக்கு உயிரியல் வளமாக்கியை அறிமுகப்படுத்தியது. அதேவேளை, இலங்கை நனோ தொழில்நுட்ப நிறுவனமானது வலு, மேம்பட்ட பொருட்கள், கனிமங்கள், புடவைப் பொருட்கள், மற்றும் செயன்முறைகள் உள்ளிட்ட முக்கியத் துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டது. மேலும், இலங்கையில் புலமைச் சொத்துக்களை வர்த்தகமயப்படுத்துவதுடன் தொடர்புடைய இடைவெளிகளை இனங்காண்பதில் விசேட கவனத்தை செலுத்தி, புத்தாக்கம் சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு ஆண்டுமுழுவதும் பல்வேறு நடவடிக்கைகளில் தேசிய புத்தாக்க முகவராண்மை தீவிரமாகப் பங்கேற்றது. தேசிய விஞ்ஞான மன்றமானது ஆராய்ச்சி அறிஞர்களுக்கு பல்வேறு ஆராய்ச்சி கொடைகளை தொடர்ந்து வழங்கி 2022 காலப்பகுதியில் புதிய உற்பத்தி அபிவிருத்தி முயற்சிகளை வசதிப்படுத்தியது.

**அரசாங்கமானது நெருக்கடியுடன் தொடர்புடைய சிக்கல்களுக்கு தீர்வுகாண்பதற்கு கைத்தொழில்களை தொடர்ந்து வசதிப்படுத்திய அதேவேளை கைத்தொழில் துறையின் தொடர்ச்சியான செயற்பாட்டை உறுதிப்படுத்தியது.** கடுமையான எரிபொருள் பற்றாக்குறைகள் நிலவிய காலப்பகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக வசதிப்படுத்தும் முகமாக இலங்கை போக்குவரத்து சபையின் முகாமைத்துவக் களஞ்சியத்தினூடாக கைத்தொழில் தொழிற்சாலைகளுக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கான விதந்துரைப்பு கடிதங்களை வழங்குவதற்கு கைத்தொழில் அமைச்சு வழிமுறைகளை முன்னெடுத்தது. மேலும், உள்நாட்டு தயாரிப்பாளர்களுக்கு ஆதரவளித்து அவர்களின் தொழிற்பாடுகளை தக்கவைப்பதற்கான ஆற்றலை உறுதிப்படுத்துவதற்கு இந்திய கொடுகடன் வசதியின் கீழ் வெளிநாட்டுச் செலாவணி வசதிகள் வழங்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு துணையளித்தது. அதேவேளை, முன்னெப்பொழுதுமில்லாத பேரண்டபொருளாதார அழுத்தங்களினாலும் கொவிட்-19 நோய்த்தொற்றினாலும் ஏற்பட்ட கடுமையான விளைவுகளைக் கருத்திற்கொண்டு, 2022 யூலையிலிருந்து ஆறுமாத காலப்பகுதிக்கு சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக, அனைத்து பொருளாதாரத் துறைகளிலுமுள்ள பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களுக்கு விடயத்திற்கு விடயம் அடிப்படையில் பொருத்தமான கொடுகடன் சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற வங்கிகளையும் வங்கியல்லா நிதியியல் நிவனங்களையும் இலங்கை மத்திய வங்கி கேட்டுக்கொண்டது. மேலும், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் வகையில், 'சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் கொடுகடன்வசதி' கடன் திட்டத்தின் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 13.5 மில்லியன் கொண்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியின் பகிர்ந்தளிக்கப்படாத தொகையானது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் அவசரப் பதிலிறுப்பு முயற்சிகளுக்காக மீள்ஒதுக்கீடு செய்யப்பட்டது. வேளாண்மை, சுற்றுலா மற்றும் ஏனைய ஏற்றுமதி சார்ந்த துறைகளில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தளவு தொழில்முயற்சிகளுக்கு சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதத்திலும் நியாயமான எல்லையொன்றிலும் நிர்ணயிக்கப்பட்ட வீதத்தில், வசதியான தொழிற்படு மூலதனக் கடன்களை வழங்குவது இவ் மீள்ஒதுக்கீட்டின் முதன்மை குறிக்கோளாக காணப்பட்டது. மேலும், மூலப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக ஆடைத் தயாரிப்பாளர்கள் எதிர்கொண்ட சவால்களைக் கருத்திற்கொண்டு உள்நாட்டில் தயாரிக்கப்படாத தேவையான துணைப்பொருட்களையும் பொருட்களையும் இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்வைச் சலுகைகளை வழங்குவதற்கு 2022 ஓகத்தில் அமைச்சரவை ஒப்புதலளித்தது.

## கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

**நிரம்பல் மற்றும் கேள்விப்பக்க தடங்கல்கள் இரண்டினதும் காரணமாக கட்டடவாக்க நடவடிக்கைள் கடுமையாக பாதிக்கப்பட்டு 2022இல் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 4.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 20.9 சதவீதம் கொண்ட சுருக்கத்தினை ஏற்படுத்தின.** மூலப்பொருட்கள் மற்றும் எரிபொருள் பற்றாக்குறைகள் அதிகரித்துச் செல்லும் உள்ளீட்டுச் செலவுகளுடன் இணைந்தமை, குறைவடைந்த நிரம்பலர் கொடுகடன் மற்றும் நிறைவடைந்த அரசின் செயற்றிட்டங்கள் மீது செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் என்பனவற்றுடன் சேர்ந்து கட்டடவாக்க நடவடிக்கைகளிலுள்ள வழங்கல்பக்கப் பிரச்சனைகளுக்கு வழிவகுத்தன. இது, அரசினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் இடைநிறுத்தப்பட்டமையிலிருந்தும் தனியார் துறை முதலீடுகளைக் கட்டுப்படுத்திய உயர்ந்த வட்டி வீதச் சூழ்நிலைகளிலிருந்தும் தோன்றிய வழங்கல்பக்க இடையூறுகளினால் மேலும் அதிகரித்தது. கட்டடவாக்கத் துறையில் காணப்பட்ட குறைந்த செயலாற்றம் கட்டுமானத்துடன் தொடர்பான குறிகாட்டிகளிலும் பிரதிபலித்தது. இதன்படி, நாட்டின் மொத்த சிமெந்து கிடைப்பனவு, 2021இல் பதிவுசெய்யப்பட்ட 0.8 சதவீதம் கொண்ட சிறிதளவு வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 35.9 சதவீதம் கொண்ட கணிசமான வீழ்ச்சியைப் பதிவுசெய்ததுடன் கட்டடவாக்கப் பொருட்களின் இறக்குமதியும் 2021இன் 4.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 35.8 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. மேலும், தனிப்பட்ட வீடமைப்புக் கட்டுமானங்களுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடனும் 2022 திசெம்பர் இறுதியில் சுருக்கமொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, மண் அகழ்வு போன்ற கட்டடவாக்க நடவடிக்கைகளுக்கு உள்ளீடுகளை வழங்குகின்ற முக்கியமாக சுரங்கமகழ்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 31.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. மேலும், இரத்தினக்கல் அகழ்வுகளின் பின்னடைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இரத்தினக்கல் ஏற்றுமதி அளவுகள் 2022இல் 8.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.


## மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு

**மின்வலு, நீர் மற்றும் கழிவுச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 2.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 4.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.** இதன்படி, இவ்வாண்டுப்பகுதியில் நிரம்பல் இடையூறுகள் மற்றும் மேல்நோக்கிய விலைத் திருத்தங்களினால் கணிசமாக பாதிக்கப்பட்ட மின்வலு, வாயு, நீராவி மற்றும் வளிச்சீராக்கி வழங்கல் நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 4.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 5.9 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல் நடவடிக்கைகள், வடிகால், கழிவு சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் நடவடிக்கைகள் முறையே 0.6 சதவீதத்தினாலும் 3.9 சதவீதத்தினாலும் அதிகரித்து 2021இல் பதிவுசெய்யப்பட்ட 17.8 சதவீதம் மற்றும் 3.3 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்தன.

## பணிகள்

**பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் நீண்ட கால வலு நெருக்கடி, பொருட்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு மற்றும் உயர் பணவீக்கம் என்பனவற்றினால் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்ட பணி நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 2.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன.** ஒட்டுமொத்தச் சுருக்கத்திற்கு உண்மைச் சொத்து, காப்புறுதி, நிதியியல், மனித ஆரோக்கியம் மற்றும் தொழில்சார் பணிகள் என்பனவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் தூண்டுதலாக அமைந்தன. மேலும், தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டப்படுத்தல், நிகழ்ச்சித்திட்டமிடல் மற்றும் ஒலிபரப்புதல் மற்றும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளும் இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமடைந்தன. எனினும், தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணிகள் கணிசமாக வளர்ச்சியடைந்தமைக்கு சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றின் மீட்சி முக்கிய காரணமாக அமைந்த வேளையில், போக்குவரத்து, தொலைத்தொடர்பூட்டல், கல்வி, பொது நிருவாகம், அஞ்சல் மற்றும் கூரியர் பணிகள் சாதகமான பங்களிப்புக்களைப் பதிவுசெய்தன. இலங்கை மத்திய வங்கியினால் மாதாந்தம் திரட்டப்படும் பணிகள் நடவடிக்கைகளுக்கான உற்பத்தியாளர் முகாமைத்துவச்


வரைபடம் 2.11
பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதங்கள் - 2022 (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.12
கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (அ)




(அ) இது ஓர் வியாபித்தல் சுட்டெண் (diffusion index) ஆவதுடன் 0 மற்றும் 100 இற்கு இடையிலான பெறுமதியை கொண்டிருப்பதோடு நடுநிலையான 50இற்கு மேலான சுட்டெண் பெறுமதி பொருளாதார நடவடிக்கைகளில் ஓர் விரிவாக்கத்தைக் குறிக்கும் அதேவேளையில் 50இற்க கீழான சுட்டெண் பெறுமதியானது சுருக்கத்தினையும் குறிக்கின்றது.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

சுட்டெண் பணி நடவடிக்கைகளில் காணப்பட்ட அபிவிருத்திகளை எடுத்துக்காட்டியது. மேலும், பணிகள் தொடர்பான வியாபாரத் தோற்றப்பாட்டு அளவீட்டின் கேள்வி மற்றும் விற்பனைத் துணைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் சராசரியாக சுருக்கமொன்றினை எடுத்துக்காட்டின.

## மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

**வழங்கல்பக்க இடையூறுகள் மற்றும் குறைவடைந்த கேள்வி நிலைமைகள் என்பன மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளை மழுங்கடித்து பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 0.2 சதவீதம் கொண்ட சிறிதளவு சுருக்கத்தினைத் தோற்றுவித்தன.** 2021/2022 பெரும்போக காலத்தில் குறைந்தளவு அறுவடையிலிருந்து தோன்றிய வழங்கல் பின்னடைவுகள், நுகர்வுப்பொருள் இறக்குமதிகள் உள்ளிட்ட இறக்குமதி அளவுகளில் கணிசமான சுருக்கத்தினைத் தோற்றுவித்த இறக்குமதிக் கட்டுப்பாடுகள், எரிபொருள் நிரம்பலுக்கு ஏற்பட்ட இடையூறுகள் என்பன இவ்வாண்டின் பெரும்பாலான காலப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகள் மோசமாகப் பாதிக்கப்படுவதற்கு காரணமாயின. உயர்ந்த பணவீக்கச் சூழ்நிலையின் கீழ் கொள்வனவு வலு மோசமடைந்தமையின் காரணமாக குறைவடைந்த கேள்வி, வரிகள் மற்றும் பொதுப் பயன்பாட்டுத் தீர்வைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, உயர்ந்த வட்டி வீதங்களின் காரணமாக நுகர்வோர் கொடுகடன்கள் குறைவடைந்தமை என்பன சூழ்நிலையினை குறிப்பாக, ஆண்டின் பின்னரைப்பகுதியில் மேலும் தீவிரப்படுத்தின.

## போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல்

**உலகளாவிய நோய்த்தொற்றுக்குப் பின்னரான மீட்சியால் பெறுமதிகூட்டப்பட்ட போக்குவரத்து நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 0.9 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.5 சதவீதத்தினால் அதிகரித்து காணப்பட்டது.** போக்குவரத்துடன் தொடர்பான குறிகாட்டிகளைப் பரிசீலனையில் கொள்கையில் இலங்கை போக்குவரத்துச் சபை, தனியார் பேருந்து தொழிற்பாட்டாளர்கள் மற்றும் இலங்கைப் புகைவண்டி என்பனவற்றினால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கி.மீற்றர்கள் 2022இல் கணிசமானளவிற்கு உயர்வடைந்து எரிபொருள் செலவு மற்றும் பொதுப் போக்குவரத்திற்கு எரிபொருள் வழங்கலில் காட்டப்பட்ட முன்னுரிமை என்பனவற்றின் காரணமாக பொதுப் போக்குவரத்து முறைக்கான கேள்வி அதிகரித்தமையைப் பிரதிபலித்தன. மேலும், வான் போக்குவரத்துப் பணிகள், இவ்வாண்டுப்பகுதியில் சிறிலங்கன் எயார்லையின்சின் பயணிகள் கி.மீற்றர்கள் மற்றும் சரக்கு கி.மீற்றர்களில் ஏற்பட்ட அதிகரிப்பினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு சுற்றுலா நடவடிக்கைகளின் மீட்சியுடன் படிப்படியாக மீட்சியடைந்தன. எனினும், துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளினைப் பரிசீலனையில் கொள்கையில் கொள்கலன் கையாளல் (இருபது அடிக்குச் சமனான அலகுகளின் நியதிகளில்), சரக்குக் கையாளல் என்பன இவ்வாண்டுப்பகுதியில் சுருக்கமடைந்தமைக்கு உலகளாவிய வர்த்தக அளவுகள் மெதுவடைந்தமையே முக்கிய காரணமாகும்.

## தங்குமிட வசதி மற்றும் உணவுப் பணி நடவடிக்கைகள்

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று என்பனவற்றின் காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 27.0 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியைப் பதிவுசெய்தன.** வலுப் பற்றாக்குறை மற்றும் சமூக அமைதியின்மையின் காரணமாக ஏற்பட்ட தடங்கல்களுக்கு மத்தியிலும், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இந்நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தன. உள்நாட்டு நாணயத்தில் ஏற்பட்ட தேய்வு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு மிகக் கவர்ச்சிகரமான விடுமுறைச் சுற்றுலாத் தலமாக இலங்கையை மாற்றியது. மேலும், அநேக சுற்றுலா விடுதிகள் குறிப்பாக, எரிபொருள் பற்றாக்குறை நிலவிய காலப்பகுதியில் போக்குவரத்து வசதிகளை இலவசமாக வழங்குவது உள்ளிட்ட பிரத்தியேகமான பொதிகளை வழங்கின. எனினும், இலங்கைப் பொருளாதார நெருக்கடியின் எதிர்மறையான தாக்கங்கள் பற்றி குறிப்பிட்ட பன்னாட்டு ஊடகங்களினால் சுற்றோட்டப்படுத்தப்பட்ட விடயங்கள் மற்றும் பல வெளிநாட்டு அரசாங்கங்களினால் விடுக்கப்பட்ட எச்சரிக்கையுடன் கூடிய பயண ஆலோசனைகள் இவ்வாண்டுப்பகுதியில் சுற்றுலாத் தொழில் துறையின் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக விளங்கின. மேலும், கியூஆர்

2

குறியீட்டு முறைமையின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான எரிபொருள் கிடைத்தமை, நீண்ட தூர பயணங்களிலிருந்து உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை தடைசெய்தது.

## நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்

2

**நிதியியல், காப்புறுதி மற்றும் வதிவிட சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் 2021இன் 7.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 15.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு அனைத்து மூன்று நடவடிக்கைகளினதும் பெறுமதிகூட்டல்களில் அறிவிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க சுருக்கமே காரணமாகும்.** உயர்ந்த வட்டி வீத சூழல் கொடுகடனுக்கான ஒட்டுமொத்தக் கேள்வியை குறைத்த வேளையில், இக்காலப்பகுதியில் நிலவிய உயர்ந்த விலை மட்டங்கள், நிலையான விலைகளைப் பரிசீலனையில் கொள்ளும் போது இப்பணிகளின் பெறுமதிகூட்டல்களைப் பாதித்தது. மேலும், காலாண்டு அடிப்படையில் இலங்கை மத்திய வங்கியினால் நடாத்தப்பட்ட கொடுகடன் வழங்கல் அளவீட்டில் எடுத்துக்காட்டப்பட்டவாறு உயர்ந்த பணவீக்கச் சூழல் மற்றும் நலிவடைந்த பொருளாதார நிலைமைகளின் கீழ் கடன்பாட்டாளர்களின் மீள்கொடுப்பனவு இயலாற்றல் மோசமடைந்தமையின் முக்கிய காரணமாக கடன் வழங்குவதற்கான விருப்பம் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, நிதியியல் பணி நடவடிக்கைகள் மற்றும் துணை நிதியியல் பணிகள் 2021இன் 7.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 11.0 சதவீதத்தினால் சுருக்கமடைந்த வேளையில் வதிவிடச் சொத்துடமையை உள்ளடக்கிய உண்மைச் சொத்து நடவடிக்கைகள் முன்னைய ஆண்டின் 4.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 12.1 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. அதேவேளை, காப்புறுதி, மீள்காப்புறுதி மற்றும் ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைகளும் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 26.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 47.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமைக்கு ஓய்வூதிய நிதியிடல் நடவடிக்கைளில் காணப்பட்ட குறைந்த செயலாற்றமே முக்கிய காரணமாக அமைந்தது.

## தகவல் மற்றும் தொடர்பூட்டல்

**உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மற்றைய பல பொருளாதார நடவடிக்கைகளை விஞ்சிக் காணப்பட்ட தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல் மற்றும் ஆலோசனைப் பணி நடவடிக்கைகள் முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட கேள்வி வழமைக்குத் திரும்பியமை மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரங்கள் மெதுவடைந்தமை என்பனவற்றின் காரணமாக 2021இல் பதிவுசெய்யப்பட்ட 21.0 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெறுமதிகூட்டல் நியதிகளில் 2022இல் 0.3 சதவீதத்தினால் சிறிதளவில் சுருக்கமடைந்தன.** மின்வலு மற்றும் எரிபொருள் விநியோகத்தில் காணப்பட்ட தடங்கல்கள் மற்றும் தொழில்நுட்ப சாதனங்களில் காணப்பட்ட பற்றாக்குறை என்பனவும் இந்நடவடிக்கைகளைப் பாதித்தன. இதன்படி, இப்பிரிவின் பிரதான பங்களிப்பாளரான தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சிப்படுத்தல் ஆலோசனை மற்றும் அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 25.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 2.3 சதவீதத்தினால் சுருக்கமடைந்தமைக்கு உலகளாவிய கேள்வி மெதுவடைந்தமை மற்றும் இக்காலப்பகுதியில் நிலவிய நீண்ட கால மின்வெட்டு போன்ற வழங்கல்பக்கப் பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்டன. அதேவேளை, தொலைத்தொடர்பூட்டல் நடவடிக்கைகள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 14.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு தொலைத்தொடர்பூட்டல் பணிகள் மீது விதிக்கப்பட்ட வரிகள் மீதான மேல் நோக்கிய திருத்தத்துடன் சேர்ந்து உயர்ந்த பணவீக்க நிலைமைகளின் காரணமாக கொள்வனவுச் சக்தி மோசமடைந்தமையிலிருந்து தோன்றிய குறைவடைந்த கேள்வியே காரணமாகும்.

## ஏனைய பணிகள் நடவடிக்கைகள்

**நாட்டில் நிலவிய மோசமான பொருளாதார நடவடிக்கைகளின் பாதிப்புக் காரணமாக 2022இல் பெரும்பாலான ஏனைய பணி நடவடிக்கைகளின் பெறுமதிகூட்டல் சுருக்கமடைந்தது.** இந்நடவடிக்கைளில் பெரும்பாலானவை ஆண்டின் முதலரைப்பகுதியில் காணப்பட்ட நிரம்பல் பற்றாக்குறையினால் முக்கியமாக பாதிக்கப்பட்டனவெனினும் அதே நடவடிக்கைகள் ஆண்டின் பின்னரைப்பகுதியில் குறைவடைந்த கேள்வி நிலைமைகளினால் பாதிக்கப்பட்டன. இதன்படி, தொழில்சார் நிபுணத்துவப் பணிகள் மற்றும் நிகழ்ச்சிப்படுத்தல் மற்றும் ஒலிபரப்பு நடவடிக்கைகள் 2022இல் முறையே 4.0 சதவீதத்தினாலும் 11.0 சதவீதத்தினாலும் சுருக்கமடைந்தமைக்கு ஒப்பீட்டு ரீதியில் சாதகமற்ற வியாபாரச் சூழல் காணப்பட்டமையே காரணமாகும். கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட ஆண்டு காலப்பகுதியில் உயர்மட்டங்களில் வளர்ச்சியடைந்த மனித சுகாதார நடவடிக்கைகள் 2022இல் 8.4 சதவீதத்தினால் சுருக்கமடைந்தன. அதேவேளை, கல்வி, பொது நிருவாகம் மற்றும் பாதுகாப்பு, அஞ்சல் மற்றும் கூரியர் பணிகள் 2022இல் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமான முறையில் பங்களித்தன.

## 2.5 செலவினம்

**பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினங்களைக் கொண்ட மொத்த உள்நாட்டுச் செலவினம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 13.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 32.3 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் நிலவிய உயர்ந்த மட்டங்களில் காணப்பட்ட விலைகளே பெருமளவிற்குக் காரணமாக அமைந்தன.** மொத்த உள்நாட்டுச் செலவினத்தில் நுகர்வுச் செலவினம் 2021இன் 8.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 34.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் முதலீட்டுச் செலவினமும் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 25.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 28.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் பக்கத்தில், நடைமுறை விலைகளில் வெளிநாட்டுக் கேள்வி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 34.7 சதவீதம் கொண்ட சுருக்கத்திற்கு மாறாக 2022இல் 34.1 சதவீதத்தினால் மேம்பட்டது. இதற்கு இறக்குமதிப் பொருட்கள் மற்றும் பணிகளில் காணப்பட்ட 41.2 சதவீத வளர்ச்சியை விஞ்சி ஏற்றுமதிப் பொருட்கள் மற்றும் பணிகள் இவ்வாண்டுப்பகுதியில் 74.1 சதவீத கணிசமான வளர்ச்சியை பதிவுசெய்தமையே காரணமாகும். நடைமுறை விலைகளில், ஏற்றுமதிகளுடன் ஒப்பிடுகையில் இறக்குமதிகளில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு இவ்வாண்டுப்பகுதியில் தேய்வடைந்த வர்த்தக மாற்று விகிதத்தினால் பிரதிபலிக்கப்பட்டவாறு இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணி திரவப் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் முக்கிய ஏற்றுமதி அமைவிடங்களின் நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் கடுமையான வீழ்ச்சியினால் ஏற்றுமதி இலாபம் அடைந்தமையும் பெருமளவிற்குக் காரணமாக அமைந்தது. இதன்படி, நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தி, மொத்த உள்நாட்டுச் செலவினத்தின் கூட்டுத்தொகை மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி என்பன 2021இன் 12.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 37.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

**நிலையான விலைகளில், மொத்த உள்நாட்டுச் செலவினம் கணிசமானளவிற்கு சுருக்கமடைந்தமைக்கு கொள்வனவுச் சக்தி தேய்வடைந்தமை, முதலீடு மற்றும் நுகர்வு இரண்டினையும் ஊக்கமிழக்கச் செய்த உயர்ந்த வட்டி வீதச் சூழல் மற்றும் பொருட்களின் பற்றாக்குறை என்பன பெருமளவிற்குக் காரணங்களாக அமைந்தன.** இதன்படி, நுகர்வு மற்றும் முதலீடுகள் இரண்டின் மீதான செலவினம் 2022இல் முறையே 7.5 சதவீதத்தினாலும் 24.9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து மொத்த உள்நாட்டுச் செலவினம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 2.7 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 13.2 சதவீதம் கொண்ட சுருக்கத்தைத் தோற்றுவித்தது. அதேவேளை, நிலையான விலைகளில், தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது அளவு நியதிகளில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றின் இணைந்த விளைவாக 2022இல் 101.1 சதவீதம் கொண்ட கணிசமான வளர்ச்சியுடன் நேர்க்கணிய தன்மையொன்றிற்குத் திரும்பியது. இதன் விளைவாக, நிலையான விலைகளில் மொ.உ.உற்பத்தி 2021இன் 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 7.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

அட்டவணை 2.9
மொத்த கேள்வி (அ)

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகள் (ரூ.மில்) | | | நிலையான (2015) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2020 (ஆ) | 2021(ஆ)(இ) | 2022 (இ) | 2020 (ஆ) | 2021 (ஆ)(இ) | 2022 (இ) |
| அ. உள்நாட்டுக் கேள்வி | 11,469,129 | 12,434,283 | 16,700,557 | 9,127,604 | 9,293,726 | 8,596,156 |
| நுகர்வு | 0.6 | 8.4 | 34.3 | -4.9 | 1.8 | -7.5 |
| (% மாற்றம்) | 5,168,381 | 6,466,957 | 8,304,627 | 4,349,587 | 4,544,089 | 3,412,566 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | -4.8 | 25.1 | 28.4 | -0.6 | 4.5 | -24.9 |
| (% மாற்றம்) | **16,637,510** | **18,901,240** | **25,005,184** | **13,477,191** | **13,837,815** | **12,008,722** |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **-1.1** | **13.6** | **32.3** | **-3.6** | **2.7** | **-13.2** |
| **(% மாற்றம்)** | | | | | | |
| ஆ. வெளிநாட்டுக் கேள்வி | 2,418,542 | 2,980,263 | 5,187,941 | 1,961,341 | 2,159,760 | 2,380,539 |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | -30.3 | 23.2 | 74.1 | -29.6 | 10.1 | 10.2 |
| (% மாற்றம்) | 3,384,516 | 4,281,313 | 6,045,399 | 2,842,981 | 2,959,641 | 2,371,412 |
| பொருட்களினதும் பணிகளினதும் ,றக்குமதிகள் | -22.9 | 26.5 | 41.2 | -20.1 | 4.1 | -19.9 |
| (% மாற்றம்) | **-965,975** | **-1,301,049** | **-857,458** | **-881,640** | **-799,881** | **9,127** |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-5.1** | **-34.7** | **34.1** | **-14.1** | **9.3** | **101.1** |
| **(% மாற்றம்)** | | | | | | |
| | **15,671,535** | **17,600,191** | **24,147,726** | **12,595,550** | **13,037,934** | **12,017,849** |
| **இ. மொத்த கேள்வி** | **-1.5** | **12.3** | **37.2** | **-4.6** | **3.5** | **-7.8** |
| **(% மாற்றம்)** | | | | | | |

(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

2

## நுகர்வு

**பொருளாதாரத்தின் மிகப்பெரும் செலவினக் கூறான நுகர்வுச் செலவினம் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 8.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 34.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு நுகர்வு விலைகளில் ஏற்பட்ட உயர்வே முக்கிய காரணமாகும்.** இதன்படி, 2022இன் மொத்த நுகர்வுச் செலவினத்தில் 89.7 சதவீதத்திற்கு வகைகூறிய தனியார் நுகர்வுச் செலவினம் நுகர்வுப்பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பின் விளைவாக, பெரும்பாலும் அனைத்து தனியார் நுகர்வுச் செலவின வகைகளிலும் ஏற்பட்ட விரிவாக்கத்தின் காரணமாக இவ்வாண்டுப்பகுதியில் கணிசமாக அதிகரித்தது. அதேவேளை, அரச நுகர்வுச் செலவினமும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த வேகத்தில் வளர்ச்சியடைந்து மொத்த நுகர்வு வளர்ச்சிக்கு நேர்க்கணியமாகப் பங்களித்தது.

**உண்மை நியதிகளில் வீட்டுத்துறையினரின் நுகர்வில் ஏற்பட்ட வீழ்ச்சி நுகர்வோர் கொள்வனவுச் சக்தியில் ஏற்பட்ட தேய்வு மற்றும் வழங்கல் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக நடைமுறை விலைகளில் தனியார் துறை நுகர்வுச் செலவினம் 2021இன் 9.4 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 39.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு உயர்ந்த பணவீக்கம் தூண்டுதலாக அமைந்தது.** உணவு மற்றும் மதுசாரமல்லாத குடிவகைகள் மற்றும் போக்குவரத்து வகைகளைக் கொண்ட முக்கிய தனியார் துறைச் நுகர்வுச் செலவினத்திலிருந்து குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களை அவதானிக்க முடிந்ததுடன் இவை இவ்வாண்டுப்பகுதியில் முறையே 25.9 சதவீதத்தினாலும் 69.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. 2022இல் இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப்பொருட்களின் விலை மட்டங்கள் கணிசமாக அதிகரித்தமைக்கு உலகளாவிய பண்ட விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் உள்நாட்டு நாணயத்தில் ஏற்பட்ட தேய்வும் தனியார் நுகர்வுச் செலவினத்தின் பெயரளவு வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களித்தன. மேலும், வலு விலைகளில் ஏற்பட்ட மேல் நோக்கிய திருத்தங்கள் வீட்டுத்துறைச் செலவினத்தை பல வகைகளில் குறிப்பாக போக்குவரத்து மற்றும் வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் என்பனவற்றின் மீது அதிகரித்ததோடு இது பெரும்பாலான தனியார் துறை நுகர்வுச் செலவினங்களிலும் பிரதிபலிக்கப்பட்டது.

**அரசாங்கத்தின் ஒன்றுசேர்ந்த மற்றும் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினத்தையும் தனிப்பட்ட இறுதி நுகர்வுச் செலவினத்தையும் உள்ளடக்குகின்ற நடைமுறை விலைகளிலான அரசாங்க நுகர்வுச் செலவினம் 2021இன் பதிவுசெய்யப்பட்ட 2.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 3.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.** சுகாதாரம், கல்வி, சமூகப் பாதுகாப்பு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரமென்பவற்றை உள்ளடக்கிய அரசாங்கத்தின் தனிப்பட்ட இறுதிச் செலவினம் 2021இன் 1.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 5.6 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது. மேலும் பொதுமக்கள்

அட்டவணை 2.10
நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு (அ)

| வகை | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் சதவீதமாக (%) | | | வளர்ச்சி (%) | |
|---|---|---|---|---|---|
| | 2020 (ஆ) | 2021 (ஆ)(இ) | 2022 (இ) | 21/20 (ஆ)(இ) | 22/21 (இ) |
| 1. உணவு மற்றும் வெறியமல்லா குடிபானங்கள் | 31.4 | 33.4 | 30.2 | 16.2 | 25.9 |
| 2. வெறியமுள்ள குடிபானங்கள், புகையிலை மற்றும் போதைப்பொருள் | 1.9 | 1.7 | 1.4 | 0.5 | 10.8 |
| 3. புடவையும் காலணியும் | 7.4 | 4.2 | 5.1 | -38.0 | 70.7 |
| 4. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு, மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 10.3 | 10.2 | 8.1 | 8.6 | 10.8 |
| 5. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டுத்துறையின் பராமரிப்பு | 1.6 | 1.8 | 1.5 | 26.4 | 18.3 |
| 6. நலம் | 2.7 | 3.7 | 3.1 | 48.4 | 16.9 |
| 7. போக்குவரத்து | 21.3 | 21.2 | 25.9 | 9.0 | 69.8 |
| 8. தொடர்பூட்டல் | 1.0 | 1.1 | 0.8 | 15.5 | -0.3 |
| 9. பொழுதுபோக்கு மற்றும் கலாசாரம் | 3.2 | 3.2 | 3.0 | 9.1 | 31.1 |
| 10. கல்வி | 1.7 | 1.6 | 1.5 | 5.6 | 26.6 |
| 11. விடுதிகள் மற்றும் உணவகங்கள் | 2.8 | 3.4 | 5.1 | 30.6 | 109.0 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 15.1 | 15.0 | 15.9 | 8.7 | 47.4 |
| 13. வதிவோரினால் நேரடி வெளிநாட்டு கொள்வனவுகள் | 1.0 | 0.5 | 0.7 | -38.6 | 68.8 |
| 14. கழிக்குக: வதிவற்றோரினால் உள்நாட்டு சந்தையில் நேரடி கொள்வனவுகள் | 1.3 | 1.0 | 2.3 | -18.2 | 225.7 |
| மொத்த தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 9.4 | 39.0 |

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது


*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பணிகள், பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு போன்ற முழுச் சமூகத்திற்கும் கூட்டாக நன்மையளிக்கும் பணிகள் மீதான செலவினங்களை உள்ளடக்குகின்ற பிரதான அரச நுகர்வு செலவின வகையான அரசாங்கத்தின் ஒன்றுசேர்ந்த இறுதி நுகர்வுச் செலவினம் 2021இன் 3.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் மெதுவான வீதத்தில் 1.7 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது.

## முதலீடு

**நடைமுறை விலைகளில் முதலீட்டுச் செலவினத்தில் ஏற்பட்ட வளர்ச்சி 2021இன் 25.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 28.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு உண்மை நியதிகளில் முதலீடுகள் குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்த போதும் முதலீட்டுப் பொருட்களின் விலைகள் கணிசமாக உயர்வடைந்தமையே காரணமாக அமைந்தது.** முதலீட்டுச் சூழல் இவ்வாண்டுப்பகுதியில் வலுவான பாதகமான தன்மைகளை எதிர்நோக்கியமைக்கு உயர் வட்டி வீத சூழல், பொறி மற்றும் ஏனைய மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் அதிகரித்த செலவு என்பன காரணங்களாக அமைந்தன. இது வெளிநாட்டுச் செலாவணியின் பற்றாக்குறை மற்றும் உள்நாட்டு நாணயத்தில் ஏற்பட்ட கடுமையான தேய்வு அரசினால் நிதியிடப்பட்ட கட்டவாக்கச் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக மேலும் தீவிரமடைந்தது. இவ்வாண்டுப்பகுதியில், முதலீட்டுச் செலவினத்தின் முக்கிய பங்களிப்பாளரான மொத்த நிலையான மூலதன உருவாக்கமானது முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 15.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் நடைமுறை விலைகளில் 21.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு கட்டடவாக்க மூலப்பொருட்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் அதிகரித்த செலவினமே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. அதேநேரம் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள், விலைமதிப்பு மிக்க பொருட்களின் அகற்றலைக் கழித்த கையேற்புக்கள் என்பனவும் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன.

வரைபடம் 2.13
முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (அ) (ஐ.அ.டொ.மில்லியன்)




(அ) கடன்கள் உள்ளடங்கலாக

*மூலம்:* இலங்கை முதலீட்டுச் சபை

**முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கு கிடைக்கப்பெற்ற கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2021ஆம் ஆண்டில் பதிவாகிய ஐ.அ.டொலர் 780.2 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1,075.6[6] மில்லியனுக்கு 37.9 சதவீதத்தினால் அதிகரித்துக் காணப்பட்டது.**

6 இது முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளுக்கான கடன்கள் உட்பட்ட பெறுகைகளை உள்ளடக்குவதுடன் முதலீட்டுச் சபையல்லா கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உள்ளடக்கப்படுவதன் காரணத்தால் அத்தியாயம் 5இல் காட்டப்பட்டுள்ள மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம். அதற்கிணங்க, 2022இல் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 1,181 மில்லியனாகும்.

அட்டவணை 2.11
இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | மதிப்பிடப்பட்ட முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | மதிப்பிடப்பட்ட தொழிலாளர் (எண்ணிக்கை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021 (அ) | 2022 (ஆ) | 2021 (அ) | | | 2022 (ஆ) | | | 2021 (அ) | 2022 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்) | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 135 | 160 | 347,871 | 166,184 | 514,056 | 282,842 | 263,529 | 546,371 | 25,632 | 26,177 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 130 | 158 | 346,878 | 165,735 | 512,613 | 281,789 | 262,707 | 544,496 | 25,459 | 26,013 |
| பிரிவு 16இன் கீழ் | 5 | 2 | 993 | 449 | 1,442 | 1,054 | 821 | 1,875 | 173 | 164 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 93 | 142 | 41,305 | 74,130 | 115,436 | 327,810 | 188,864 | 516,674 | 21,685 | 21,685 |
| பிரிவு 17இன் கீழ் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ)(உ) | 1,875 | 1,922 | 2,258,989 | 2,021,406 | 4,280,395 | 2,420,110 | 2,055,046 | 4,475,156 | 486,362 | வி.கி. |
| வர்த்தகத் தொழிற்பாடுகளின் செயற்றிட்டங்கள் (ஈ) | 2,735 | 2,718 | 651,662 | 1,057,348 | 1,709,010 | 662,641 | 1,059,813 | 1,722,454 | 459,828 | 461,371 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 2,100 | 2,116 | 625,665 | 1,020,523 | 1,646,188 | 637,450 | 1,029,961 | 1,667,412 | 375,007 | 380,939 |
| 200 ஆ.தொ. நி.திட்டத்தின் கீழ் | 116 | 107 | 505 | 25,639 | 26,143 | 503 | 18,714 | 19,217 | 56,543 | 52,513 |
| பிரிவு 16இன் கீழ் | 519 | 495 | 25,492 | 11,187 | 36,679 | 24,688 | 11,137 | 35,825 | 28,278 | 27,919 |
| கைத்தொழில் அமைச்சு | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட கம்பனிகள் (ஈ) | 3,259 | 3,451 | - | - | 209,366 | - | - | 204,600 | வி.கி. | வி.கி. |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்றுசேர்ந்த தொகை
(உ) ஒன்றுசேர்ந்த உண்மையான முதலீடுகளின் பெறுமதி வழங்கப்பட்டுள்ளது

*மூலங்கள்:* இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அமைச்சு

குறிப்பு : முதலீட்டுச் சபையின் 17ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முதலீட்டு மட்டம் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பூர்த்திக்குட்பட்டு சுங்கம் மற்றும் செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளில் இருந்து விலக்களிக்கப்பட்டன.

முதலீட்டுச் சபைகளுக்கான மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் ஏறத்தாழ 54.0 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2022இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் ஒட்டுமொத்த விரிவடைதலுக்கு பெருமளவில் பங்களித்து, 2022இல் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்றைக் காண்பித்தது. மேலும், முறையே வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் ஏறத்தாழ 34.0 சதவீதத்திற்கும் 13.0 சதவீதத்திற்கு வகைகூறுகின்ற தயாரிப்புத் துறை மற்றும் பணிகள் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் விரிவாக்கங்களைப் பதிவுசெய்தன. எனினும், வேளாண்மைத் துறைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2022இல் தொடர்ந்தும் மிதமடைந்து காணப்பட்டது. 1978இன் 4ஆம் இலக்க முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16ஆம் மற்றும் 17ஆம் பிரிவின் கீழ் முதலீட்டுச் சபையினால் அனுமதிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்தப்பெறுமதி ரூ.546.4 பில்லியனாக மதிப்பிடப்பட்டு, கடந்த காலத்தின் ரூ.514.1 பில்லியனிலிருந்து ஆண்டுக்காண்டு அடிப்படையில் 6.3 சதவீதம் கொண்ட விரிவடைதலொன்றைக் காண்பித்தது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 ஆம் மற்றும் 17ஆம் பிரிவுகளின் கீழ் வர்த்தக ரீதியான தொழிற்பாடுகளைத் தொடங்கிய செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட முதலீட்டுப் பெறுமதிகள் 2022 காலப்பகுதியில் முறையே ரூ.35.8 பில்லியனாகவும் ரூ.1,667.4 பில்லியனாகவும் காணப்பட்டன.

## மூலவளங்களின் கிடைப்பனவு மற்றும் பயன்பாடு

**பொருளாதாரத்தின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவளங்களை உள்ளடக்கிய மூலவளங்களின் கிடைப்பனவு 2021இல் பதிவுசெய்யப்பட்ட 14.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 38.0 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தினால்**


அட்டவணை 2.12
நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும் (அ)(ஆ)

| விடயம் | சதவீதப் பங்கு % | | வளர்ச்சி % | |
|---|---|---|---|---|
| | 2021 (இ) | 2022 | 2021 (இ) | 2022 |
| **அ. மூலவளங்கள்** | 80.4 | 80.0 | 12.3 | 37.2 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 19.6 | 20.0 | 26.5 | 41.2 |
| பொருட்கள் மற்றும் பணிகளினது இறக்குமதிகள் **மொத்தம்** | **100.0** | **100.0** | **14.8** | **38.0** |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 56.8 | 55.3 | 8.4 | 34.3 |
| மொத்த நிலையான மூலதனவாக்கம் | 21.2 | 18.7 | 15.8 | 21.9 |
| பெறுமதியானவற்றின் விற்பனையைக் கழித்த கையேற்புக்கள் மற்றும் இருப்புக்களின் மாற்றம் | 8.4 | 8.8 | 57.2 | 44.9 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 13.6 | 17.2 | 23.2 | 74.1 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **14.8** | **38.0** |

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 2.14
2022இல் பொருளாதாரம் (நடைமுறைச் சந்தை விலைகளில்) (அ)




(அ) மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2015 அடியாண்டு)

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**வளர்ச்சியடைந்தன.** இது தொடர்பில் உள்நாட்டு மூலவளங்களைப் பிரசன்னப்படுத்துகின்ற மொ.உ.உற்பத்தி 2022இல் 37.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில், வெளிநாட்டு மூலவளங்களான இறக்குமதிகள் 2021 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 41.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உயர்ந்த விலைகள் காரணமாயமைந்தன. எனினும், நிலையான விலை மதிப்பீடுகளைப் பரிசீலனையில் கொள்கையில், மொ.உ.உற்பத்தியும் இறக்குமதிகளும் 2022இல் சுருக்கத்தினைப் பதிவுசெய்தன. அதேவேளை, பெரும்பாலான கிடைக்கத்தக்க மூலவளங்கள் நுகர்வு நோக்கங்களுக்கே பயன்படுத்தப்பட்டதுடன் இவை 2022இன் நடைமுறை விலைகளில் மொத்த மூலவளப் பயன்பாட்டில் 55.3 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் முதலீடு மற்றும் ஏற்றுமதிப் பங்குகள் முறையே 27.5 சதவீதமாகவும் 17.2 சதவீதமாகவும் காணப்பட்டன.

## சேமிப்புக்கள்

**நடைமுறை விலைகளில் நாட்டின் உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இவ்வாண்டுப்பகுதியில் மேம்பட்டன.** இதன்படி, உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2021இல் பதிவுசெய்யப்பட்ட 22.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 44.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு இவ்வாண்டுப்பகுதியில் அரசின் குறைச் சேமிப்புக்கள்

அட்டவணை 2.13
நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்பு (அ)(ஆ)

| விடயம் | ரூ.மில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ.இன் சதவீதமாக (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2021 (இ) | 2022 | 2021 (இ) | 2022 | 2021 (இ) | 2022 |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 17,600,191 | 24,147,726 | 12.3 | 37.2 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 12,434,283 | 16,700,557 | 8.4 | 34.3 | 70.6 | 69.2 |
| தனியார் | 10,769,655 | 14,973,295 | 9.4 | 39.0 | 61.2 | 62.0 |
| அரசு | 1,664,627 | 1,727,261 | 2.3 | 3.8 | 9.5 | 7.2 |
| 3. முதலீடுகள் | 6,466,957 | 8,304,627 | 25.1 | 28.4 | 36.7 | 34.4 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 5,165,908 | 7,447,170 | 22.9 | 44.2 | 29.4 | 30.8 |
| தனியார் | 6,456,349 | 8,987,618 | 19.9 | 39.2 | 36.7 | 37.2 |
| அரசு | -1,290,441 | -1,540,448 | -9.3 | -19.4 | -7.3 | -6.4 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -1,301,049 | -857,458 | -34.7 | 34.1 | -7.4 | -3.6 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் | -395,539 | -621,353 | 6.5 | -57.1 | -2.2 | -2.6 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் (ஈ) | 1,034,694 | 1,159,474 | -10.1 | 12.1 | 5.9 | 4.8 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 5,805,063 | 7,985,291 | 17.7 | 37.6 | 33.0 | 33.1 |

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது
(ஈ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளுடனான வேறுபாடுகளிற்கு தொகுத்தலில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

விரிவடைந்தமைக்கிடையிலும் தனியார் சேமிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு தூண்டுதலாக அமைந்தது. இதன் விளைவாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2022இல் 30.8 சதவீதத்திற்கு அதிகரித்தன. அதேவேளை, ரூபா நியதிகளில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய முதலாந்தர வருமானம் இவ்வாண்டுப்பகுதியில் தேய்வடைந்த வேளையில் உலகின் ஏனைய பகுதிகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் முன்னேற்றமொன்றினைப் பதிவுசெய்தன. இவ்வபிவிருத்திகளின் இணைந்த பெறுபேறாக, தேசிய சேமிப்பு 2021இன் 17.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 37.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் சேமிப்புக்களில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியின் காரணமாக தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2022இல் வீழ்ச்சியடைந்தது.

## 2.6 வருமானம்

**பொருளாதாரத்தின் மிகப்பெரும் கூறாக விளங்குகின்ற மொத்த கலப்பு வருமானம், 2021இல் பதிவுசெய்யப்பட்ட 11.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் நடைமுறை விலைகளில் 45.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 34.6 சதவீத்திற்கு வகைகூறியது.** அதேவேளை, இரண்டாவது மிகப்பெரும் கூறாக விளங்குகின்ற மொத்த தொழிற்பாட்டு மிகை 2021இல் பதிவுசெய்யப்பட்ட 17.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2022இல் 36.0 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. ஏனைய முக்கிய வருமான மூலத்தின் நியதிகளில், ஊழியர்களுக்கான இழப்பீடு உற்பத்தி மீதான உதவுதொகையினைக் கழித்த வரிகள் என்பன

அட்டவணை 2.14
நடைமுறைச் சந்தை விலைகளில் நிறுவனத்துறைகளின் வருமான கூறுகள் (அ)(ஆ)

| விடயம் | சதவீதப்பங்கு (%) | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2021 (இ) | | | | | 2022 | | | | |
| | நிதியல்லா கூட்டுத்தாபனம் | நிதிக் கூட்டுத்தாபனம் | பொது அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளாதாரம் | நிதியல்லா கூட்டுத்தாபனம் | நிதிக் கூட்டுத்தாபனம் | மத்திய அரசாங்கம் | வீட்டு அலகுகள் மற்றும் வீட்டு அலகுகளுக்குப் பணியாற்றும் இலாபமீட்டா நிறுவனங்கள் | மொத்த பொருளாதாரம் |
| ஊழியர்களின் நட்டஈடு | 45.6 | 6.5 | 26.5 | 21.4 | 100.0 | 47.7 | 10.2 | 21.7 | 20.5 | 100.0 |
| மொத்த தொழிற்பாட்டு மிகை | 84.6 | 12.1 | 3.3 | 0.0 | 100.0 | 86.4 | 11.3 | 2.4 | 0.0 | 100.0 |
| மொத்த கலப்பு வருமானம் | - | - | - | 100.0 | 100.0 | - | - | - | 100.0 | 100.0 |
| உற்பத்தி மீதான மானியங்களை கழித்த ஏனைய வரிகள் | 74.5 | 10.4 | - | 15.2 | 100.0 | 73.2 | 10.7 | - | 16.1 | 100.0 |
| அடிப்படை விலைகளில் பெறுமதி சேர்ப்பு | 43.5 | 6.2 | 9.2 | 41.1 | 100.0 | 43.6 | 6.8 | 7.1 | 42.4 | 100.0 |

(அ) மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளை அடிப்படையாக கொண்டது (2015 அடியாண்டு)
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

இவ்வாண்டுப்பகுதியில் தொடர்ந்தும் விரிவடைந்தன. அதேவேளை, நிறுவன ரீதியான துறை வகைப்படுத்தலைப் பரிசீலனையில் கொள்கையில் நிதியல்லாக் கூட்டுத்தாபனங்கள் துறை மிகப் பெரிய வருமான உருவாக்குநராக தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து வீட்டுத்துறை மற்றும் வீட்டுத்துறையினருக்குப் பணியாற்றும் இலாபமீட்டாத நிறுவனங்கள், பொது அரசாங்கம், மற்றும் நிதிக் கூட்டுத்தாபனம் என்பன விளங்கின.

2

## 2.7 குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழில்நிலை

### குடித்தொகை

**2022இல் குடித்தொகை தொடர்ந்து அதிகரித்த போதும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது குறைந்த வீதத்தில் காணப்பட்டது.** இதன்படி, பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட நடுவாண்டுக் குடித்தொகை மதிப்பீடுகளின்படி, 2022இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 22.181 மில்லியன் என மதிப்பிடப்பட்டு 2021இல் பதிவுசெய்யப்பட்ட 1.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.1 சதவீதம் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. அதேவேளை, நடுவாண்டுக் குடித்தொகையில் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்த மேல் மாகாணம் 2022இன் நடுவாண்டுக் குடித்தொகையில் 28.0 சதவீதம் கொண்ட உயர்ந்த பங்கிற்கு தொடர்ந்தும் வகைகூறியது. அதனைத் தொடர்ந்து மத்திய மற்றும் தென் மாகாணங்கள் முறையே குடித்தொகையில் 12.7 சதவீதத்திற்கும் 12.2 சதவீதத்திற்கும் வகைகூறின. மேலும், 2022இல் வட மாகாணம் நடுவாண்டுக் குடித்தொகையின் மிகக் குறைந்த பங்கான 5.3 சதவீதத்திற்கு வகைகூறியது. குடித்தொகை வளர்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் குடித்தொகை அடர்த்தியும் 2021இல் பதிவுசெய்யப்பட்ட சதுர கிலோமீற்றர் ஒன்றிற்கான 353 மக்களிலிருந்து 2022இல் சதுர கிலோமீற்றர் ஒன்றிற்கு 354 மக்களுக்கு சிறிதளவால் அதிகரித்தது. அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட போக்கினைப் பின்பற்றும் விதத்தில் பெண்களின் குடித்தொகை ஆண்களின் குடித்தொகையிலும் பார்க்க தொடர்ந்தும் உயர்வானதாகக் காணப்பட்டது.

அட்டவணை 2.15

மாகாண அடிப்படையிலான குடித்தொகை மற்றும் அடர்த்தி (அ)(ஆ)

| மாகாணம் | 2021 | | 2022 | |
|---|---|---|---|---|
| | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி | குடித்தொகை '000 நபர்கள் | அடர்த்தி |
| மேல் | 6,219 | 1,731 | 6,209 | 1,728 |
| மத்திய | 2,811 | 504 | 2,812 | 504 |
| தென் | 2,696 | 501 | 2,702 | 502 |
| வடக்கு | 1,165 | 141 | 1,173 | 141 |
| கிழக்கு | 1,783 | 190 | 1,788 | 191 |
| வடமேல் | 2,592 | 345 | 2,592 | 345 |
| வடமத்திய | 1,402 | 144 | 1,406 | 144 |
| ஊவா | 1,400 | 168 | 1,408 | 169 |
| சப்ரகமுவ | 2,088 | 424 | 2,091 | 425 |
| **மொத்தம்** | **22,156** | **353** | **22,181** | **354** |

(அ) தற்காலிகமானது
(ஆ) நடுவாண்டுக் குடித்தொகை தரவுகள் 2012ஆம் ஆண்டின் குடித்தொகை மதிப்பீடு மற்றும வீடமைப்பு மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

*மூலம்:* பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தொழிற்படை

**2022இல் பொருளாதார ரீதியாக செயற்படாத குடித்தொகை 2021 உடன் ஒப்பிடுகையில் அதிகரித்து தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இலங்கை தொழிற்படை அளவீட்டின்படி தொழிற்படையில் வீழ்ச்சியொன்றைத் தோற்றுவித்தது.** வீட்டுத்துறை குடித்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் பொருளாதார ரீதியாக செயற்படாத குடித்தொகை முன்னைய ஆண்டின் 8.581 மில்லியனிலிருந்து 2022இல் 8.615 மில்லியனுக்கு அதிகரித்தவிடத்து பொருளாதார ரீதியாகச் செயற்படும் குடித்தொகையினைப்[7] பிரசன்னப்படுத்துகின்ற தொழிற்படை 2021இல் பதிவுசெய்யப்பட்ட 8.553 மில்லியனிலிருந்து 2022இல் 8.547 மில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இவ்வபிவிருத்திகளுடன் வீட்டுத்துறைக் குடித்தொகைக்கு தொழிற்படையின் விகிதமாக விளங்கும் தொழிற்படை பங்கேற்பு விகிதம் 2021இன் 49.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 49.8 சதவீதத்திற்கு

7 ஆய்விற்குட்படுத்தப்பட்ட ஒரு வாரக் காலப்பகுதியில் தொழிலிலுள்ள அல்லது தொழிலற்ற (15 வயதும் அதற்கு மேலும்) ஆட்களைக் குறிப்பிடுவதே தற்போதைய பொருளாதாரத்தில் செயற்பாட்டில் உள்ள குடித்தொகை ஆகும்.

அட்டவணை 2.16

குடும்ப அலகுகளின் குடித்தொகை, தொழிற்படை மற்றும் தொழிற்படை பங்கேற்பு (அ)

| விடயம் | 2021 | 2022 (ஆ) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | கா 1 | கா 2 | கா 3 | கா 4 | வருடாந்தம் |
| குடும்ப அலகுகளின் எண்ணிக்கை '000 ஆட்கள் | 17,134 | 17,105 | 17,126 | 17,186 | 17,230 | 17,162 |
| தொழிற்படை '000 ஆட்கள் | 8,553 | 8,762 | 8,576 | 8,430 | 8,421 | 8,547 |
| தொழிலுள்ளோர் | 8,114 | 8,389 | 8,177 | 8,010 | 8,015 | 8,148 |
| தொழிலற்றோர் | 440 | 373 | 399 | 419 | 406 | 399 |
| தொழிற்படை பங்கேற்பு வீதம் (இ) | 49.9 | 51.2 | 50.1 | 49.0 | 48.9 | 49.8 |
| ஆண் | 71.0 | 71.8 | 70.9 | 70.4 | 69.0 | 70.5 |
| பெண் | 31.8 | 33.6 | 32.1 | 31.0 | 31.6 | 32.1 |

(அ) 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட குடும்ப அலகுகளின் எண்ணிக்கை
(ஆ) தற்காலிகமானது
(இ) குடும்ப அலகுகளின் எண்ணிக்கையின் சதவீதமாக தொழிற்படைப் பங்கேற்பு

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. ஆண் தொழிற்படை பங்கேற்பு வீதம் முன்னைய ஆண்டின் 71.0 சதவீதத்திலிருந்து 2022இல் 70.5 சதவீதத்திற்கு சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் சாதகமானதொரு விடயமாக பெண் தொழிற்படை பங்கேற்பு வீதம் முன்னைய ஆண்டின் 31.8 சதவீதத்திலிருந்து 2022இல் 32.1 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் காணப்பட்ட பால் இடைவெளி முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 39.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 38.4 சதவீதத்திற்கு சுருக்கமடைந்தது.

## தொழில்நிலை

**தொழில்புரியும் குடித்தொகை[8] முன்னைய ஆண்டின் 8.114 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் 8.148 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு கைத்தொழில் மற்றும் பணி நடவடிக்கைகளுடன் தொடர்பான தொழில்நிலையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய தூண்டுதலாக அமைந்தது.** கைத்தொழில் நடவடிக்கைகளில் காணப்பட்ட தொழில்நிலை முன்னைய ஆண்டின் 2.109 மில்லியனிலிருந்து 2022இல் 2.158 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் பணிகளிலுள்ள தொழில்நிலை முன்னைய ஆண்டின் 3.791 மில்லியனிலிருந்து 2022இல் 3.831 மில்லியனுக்கு அதிகரித்தது. எனினும், வேளாண்மையிலுள்ள தொழில்நிலை முன்னைய ஆண்டின் 2.213 மில்லியனிலிருந்து 2022இல் 2.159 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன்படி, கைத்தொழில் மற்றும் பணி நடவடிக்கைகளிலுள்ள தொழில்நிலையின் பங்குகள் முன்னைய ஆண்டின் 26.0 சதவீதம் மற்றும் 46.7 சதவீதங்களிலிருந்து 2022இல் முறையே 26.5 சதவீதத்திற்கும் 47.0 சதவீதத்திற்கும் அதிகரித்தவிடத்து வேளாண்மையிலுள்ள தொழில்நிலையின் பங்கு முன்னைய ஆண்டின் 27.3 சதவீதத்திலிருந்து 2022இல் 26.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழில்நிலை நியதிகளில் பொதுத் துறை ஊழியர்கள், சுயதொழில்புரிவோர் மற்றும் கொடுப்பனவற்ற குடும்ப வேலையாட்கள் எண்ணிக்கை 2021 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியடைந்த அதேவேளை தனியார் துறை ஊழியர்கள் மற்றும் தொழில்தருநர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. அதேவேளை, 2022 காலப்பகுதியில் தனியார் துறையானது 42.9 சதவீதம் கொண்ட பாரிய பங்கினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதான தொழில் உருவாக்குநராக தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத்தொடர்ந்து மொத்த தொழில்நிலையில் 33.1 சதவீதத்திற்கு சுயதொழில்புரிவோர் வகைகூறினர்.

**முகாமைத்துவ பணிகள் திணைக்களத்தின் தரவின் பிரகாரம் மொத்த பொதுத் துறை தொழில்நிலை 2022இல் 1.394 மில்லியனாக இருந்தது.** இது, அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், மாகாண

8 ஆய்விற்குரிய காலப்பகுதியில் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமாவது கொடுப்பனவு பெறும் ஊழியர்களாக, தொழில்தருநர்களாக, சொந்தத் தொழில்புரிபவர்களாக அல்லது பங்களிக்கின்ற குடும்ப உறுப்பினராக பணியாற்றும் ஆட்கள் தொழில்புரிபவர் எனக் குறிப்பிடப்படுவர். இது தொழிலிலுள்ள ஆட்களை உள்ளடக்குகின்ற போதிலும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் தொழில்புரியாத ஆட்களை உள்ளடக்காது.

அட்டவணை 2.17
பொதுத்துறை தொழில்நிலை

| துறை | 2021 (அ) | 2022 (ஆ) | சதவீத மாற்றம் 2022/2021 (ஆ) |
|---|---|---|---|
| அரசு | 1,181,422 | 1,181,766 | 0.0 |
| அரசசார் | 219,838 | 212,117 | -3.5 |
| **பொதுத்துறை** | **1,401,260** | **1,393,883** | **-0.5** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு




சபைகள் அத்துடன் அரசசார் நிறுவனங்கள் என்பனவற்றிலுள்ள ஊழியர்களை உள்ளடக்குகின்றது. அந்தவகையில் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் தொழில்நிலை வீழ்ச்சியடைந்த காரணத்தினால் பொதுத்துறை தொழில்நிலை 2021இன் 1.401 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2022இல் வீழ்ச்சியை பதிவு செய்தது.

## தொழிலின்மை

**தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 5.1 சதவீதத்திலிருந்து 2022இல் 4.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** தொழிலற்ற குடித்தொகையும்[9] முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 0.440 மில்லியனிலிருந்து 2022இல் 0.399 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, ஆண்களின் தொழிலின்மை 3.7 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்ட வேளையில் பெண்களின் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டின் 7.9 சதவீதத்திலிருந்து 2022இல் 6.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், க.பொ.த. உயர்தரம் மற்றும் அதற்குமேற்பட்ட வகையினதும் தொழிலின்மை வீதம் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 9.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 7.8 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், இளைஞர்

9 தொழிலுக்குக் கிடைக்கத்தக்க அத்துடன் அல்லது தொழிலை எதிர்பார்த்திருக்கும் ஆட்கள் மற்றும் தொழில்புரியாத மற்றும் கடந்த நான்கு வாரங்களில் தொழிலொன்றினைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட அத்துடன் அடுத்த இரண்டு வார காலப்பகுதியில் தொழில்வாய்ப்பொன்றினை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ள ஆட்கள் தொழிலற்றவர்கள் எனக் குறிப்பிடப்படுவர்.

வரைபடம் 2.15
தொழிலின்மை வீதம் (சதவீதம்)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

அட்டவணை 2.18
வெளிநாட்டு தொழில்வாய்ப்புக்கான வெளிச்செல்கைகள்

| தொழில்வாய்ப்பு | 2020 | | 2021 (அ) | | 2022 (ஆ) | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் | எண்ணிக்கை | சதவீதம் |
| மொத்த தொழிலிலுள்ளோர் | 53,711 | 100.0 | 122,264 | 100.0 | 311,056 | 100.0 |
| மூலத்தின்படி | | | | | | |
| உரிமம்பெற்ற முகவர்கள் | 18,065 | 33.6 | 41,805 | 34.2 | 123,420 | 39.7 |
| ஏனையோர் | 35,646 | 66.4 | 80,459 | 65.8 | 187,636 | 60.3 |
| பால் வகையின்படி | | | | | | |
| ஆண் | 32,500 | 60.5 | 81,110 | 66.3 | 186,965 | 60.1 |
| பெண் | 21,211 | 39.5 | 41,154 | 33.7 | 124,091 | 39.9 |
| மனிதவலு வகையின்படி | | | | | | |
| தொழில் வல்லுநர்கள் | 2,957 | 5.5 | 8,373 | 6.8 | 14,307 | 4.6 |
| நடுத்தர மட்டம் | 1,496 | 2.8 | 4,256 | 3.5 | 8,130 | 2.6 |
| எழுதுவினைஞர் மற்றும் தொடர்பானோர் | 2,496 | 4.6 | 6,540 | 5.3 | 12,134 | 3.9 |
| தேர்ச்சி பெற்ற தொழிலாளர் | 16,664 | 31.0 | 40,174 | 32.9 | 92,836 | 29.8 |
| ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர் | 789 | 1.5 | 1,930 | 1.6 | 4,133 | 1.3 |
| தேர்ச்சியற்ற தொழிலாளர் | 13,987 | 26.0 | 31,676 | 25.9 | 105,509 | 33.9 |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 15,322 | 28.5 | 29,315 | 24.0 | 74,007 | 23.8 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது


*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

(15 - 24 ஆண்டுகள்) தொழிலின்மை வீதமும் முன்னைய ஆண்டின் 26.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2022இல் 22.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு


**வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்றோரின் எண்ணிக்கை 2021இன் 122,264 இலிருந்து 2022இல் 311,056 இற்கு 154.4 சதவீதத்தினால் கணிசமானளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தது.** வெளிநாட்டு தொழில் வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு 2022ஆம் ஆண்டுப்பகுதியில் நாட்டில் நிலவிய பொருளாதார கஷ்டங்கள் ஓரளவிற்கு வகைகூறின. இதன்படி, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்ற ஆண்கள் மற்றும் பெண்கள் தொழில் வாய்ப்பிற்காகப் புறப்பட்டுச் சென்றவர்களின் மொத்தத் தொகையில் முறையே 60.1 சதவீதத்திற்கும் 39.9 சதவீதத்திற்கும் வகைகூறின. இதே போக்கினைத் தொடர்கின்ற விதத்தில் தொழில்சார் நிபுணத்துவம், மத்திய மட்டம், எழுதுவினைஞர் மற்றும் தொடர்பானர்வர்கள், தேர்ச்சி, ஓரளவு தேர்ச்சி, தேர்ச்சியற்றவர்கள் மற்றும் வீட்டுப்பணிப் பெண்கள் ஆகிய அனைத்து தேர்ச்சி வகைகளின் கீழும் புறப்பட்டுச் சென்றவர்களின் தொகை அதிகரித்தமைக்கு தேர்ச்சியற்ற தேர்ச்சியுடைய மற்றும் வீட்டுப்பணிப்பெண் வகைகளிலிருந்து கிடைத்த முக்கிய பங்களிப்பே காரணமாகும். மத்திய கிழக்குப் பிராந்தியமே 2022இன் முக்கிய வெளிநாட்டு தொழில் வாய்ப்புச் சேரிடமாக தொடர்ந்தும் காணப்பட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக புறப்பட்டுச் சென்றவர்களின் மொத்த

வரைபடம் 2.16
திறமை அடிப்படையில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள்




*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வரைபடம் 2.17
முக்கிய நாடுகளின் அடிப்படையில் வெளிநாட்டு தொழில்நிலைக்கான வெளிச்செல்கைகள்




*மூலம்:* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

எண்ணிக்கையில் 84.7 சதவீதத்திற்கு வகைகூறியது. கட்டார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு, எமிறேட்ஸ் மற்றும் குவைத் என்பன 91.3 சதவீதத்திற்கு வகைகூறின.

## தொழிலாளர் உற்பத்தித்திறன்

**வேலை செய்த மணித்தியாலமொன்றிற்கு மொத்த பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் (2015 விலைகளில்) அளவிடப்படுகின்ற தொழிலாளர் உற்பத்தித்திறன் 2021இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான ரூ.768.08 இலிருந்து 2022இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.686.57 இற்கு 10.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் தொழிலாளர் உற்பத்தித்திறனில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வேலைசெய்த மணித்தியாலம் அதிகரித்தமையினால் 2022இல் தொடர்ந்து மொத்த பெறுமதிகூட்டல்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணமாகும். இதன்படி, கைத்தொழில் மற்றும் பணி நடவடிக்கைகளிலுள்ள தொழிலாளர் உற்பத்தித்திறன் 2021இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான முறையே 922.15 மற்றும் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான ரூ.945.97 இலிருந்து 2022இல் முறையே வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான ரூ.759.85 மற்றும் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கான ரூ.839.85 இற்கு வீழ்ச்சியடைந்தன. மாறாக, வேளாண்மை மொத்த பெறுமதிகூட்டல் மற்றும் வேலைசெய்த மணித்தியாலம் இரண்டிலும் வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் வேளாண்மை நடவடிக்கைகளிலுள்ள தொழிலாளர் உற்பத்தித்திறன் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது. இதன்படி, தொழிலாளர் உற்பத்தித்திறன் 2021இன் ரூ.243.04 உடன் ஒப்பிடுகையில் 2022இல் வேலைசெய்த மணித்தியாலமொன்றிற்கு ரூ.243.94 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. உற்பத்தித் திறன் மட்டங்களின் நியதிகளில் பணிகள் நடவடிக்கைகள் தொழிலாளர் மூலவளங்கள் மிகுந்த வினைத்திறனை தொடர்ந்தும் எடுத்துக் காட்டி, மிக உயர்ந்த தொழிலாளர் உற்பத்தித் திறனைப் பதிவுசெய்ததுடன் அதனைத் தொடர்ந்து கைத்தொழில் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகள் காணப்பட்டன.